REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK
2022 ஜனவரி 15 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 90 இல. 13 | Saturday 15,January, 2022 | 16பக்கங்கள் | 30/-

## அதிவேக நெடுஞ்சாலை வருமானம் 8.8 பில். ரூபா



கடந்த ஆண்டு அதிவேக நெடுஞ்சாலைகளினூடாக 8.8 பில்லியன் ரூபாவுக்கும் அதிக தொகை ஈட்டப்பட்டுள்ளது.

ஆண்டொன்றில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினூடாக ஈட்டப்பட்ட அதிக தொகை இதுவென தெரிவிக்கப்படுகின்றது. 2020ஆம் ஆண்டுடன் 06

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்கு 1000 நாட்கள்:

## உண்மைகளை மறைக்க சூழ்ச்சி எனினும் அவை வெளிவருவது உறுதி

### பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான உண்மைகளை மறைப்பதற்குப் பல்வேறு சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும் அந்த தகவல்கள் தற்போது மெல்ல மெல்ல வெளிவரத் தொடங்கியுள்ளன என பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார். குண்டுத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொண்ட பேராயர்,

எவர் அவற்றை மறைக்க முற்பட்டாலும் அதை அவர்களால் செய்ய முடியாது. ஏனென்றால் கடவுளின் நீதி ஒன்று உள்ளது என்றும் அவர் 06

தேவாலய கைக்குண்டு விவகாரம்:

## தேசிய பாதுகாப்பு விடயத்தில் அரசுக்கு எதிராக சூழ்ச்சி

### எவரையும் தப்பிக்க விடமாட்டோம்




பொரளை கிறிஸ்தவ தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவத்தின் பின்னால் முக்கிய சூத்திரதாரி ஒருவர் உள்ளார் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பினை கட்டியெழுப்புவதில் அரசாங்கம் அடைந்துள்ள முன்னேற்றத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கான சதியாக இது இருக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

கர்தினால் மெல்கம் ரஞ்சித் வெளியிட்டுள்ள கருத்துக்கள் குறித்து தனது கருத்தினை 06

வரி நிவாரண சலுகைக்கு அமைவாக

## 500 கொள்கலன்கள் அரிசி தனியாராலும் இறக்குமதி



தனியார் தரப்பினரால் இறக்குமதி செய்யப்பட்ட 500 அரிசி கொள்கலன்கள் நேற்று முன்தினம்(13) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வரி நிவாரணத்திற்கு அமைய இறக்குமதி செய்யப்பட்டுள்ள இந்த அரிசி தொகையைச் சந்தைக்கு விநியோகித்த பின்னர் அரிசியின் விலை குறைவடையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது அரிசி மோசடி இடம்பெறுவதாகவும் சுட்டிக்காட்டிய அவர் செயற்கை விலை உயர்வைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் சதொச விற்பனை நிலையங்களில் 06

20 அத்தியாவசிய பொருட்கள் கொண்ட பொதி ரூ.3998/=

# சதொச மூலம் சலுகை விலையில் பொருட்கள்

### நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக அமைச்சர் பந்துல தெரிவிப்பு



1998 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்தால் வீடுகளுக்கே விநியோகம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

லங்கா சதொச ஊடாக சலுகை விலையில் பொருட்களைப் பொதி செய்து வழங்கும் நடவடிக்கை நேற்று (15) அமுல்படுத்தப்பட்டதாக தெரிவித்த வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன, 20 அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய இந்த பொதியை மக்கள் 3998 ரூபாவிற்கு சதொசவில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இந்தப் பொதியை ஊடகங்களுக்கு அறிமுகப்படுத்தினார். அதன்படி 10 கிலோ சுப்பர் சம்பா, 1 கிலோ வெள்ளைச்சீனி, 1 கிலோ பருப்பு, 06

10 kg சுப்பர் சம்பா
01 kg வெள்ளை சீனி
01 kg பருப்பு
01 kg இடியப்ப மா
500 g நெத்தலி
400 g நூடில்ஸ்
உட்பட பல பொருட்கள்

## மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டம் இன்று திறப்பு



மீரிகம முதல் குருநாகல் வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டம் (அதுகல்புர நுழைவாயில்) இன்று (15) பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்படும் என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மீரிகம முதல் குருநாகல் வரையிலான மத்திய அதிவேகப் பாதையின் இரண்டாம் கட்டம் (அதுகல்புர நுழைவாயில்) 2022 ஜனவரி 15ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்படும் என ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சங்க உபதலைவரை பதவி நீக்கியமைக்கு எதிர்ப்பு:

## ரயில் நிலைய அதிபர்கள் மீண்டும் பணிப்பகிஷ்கரிப்பில்

### பொது மக்களுக்கு பாரிய அசௌகரியம்



ரயில்நிலைய அதிபர்கள் நேற்று(14) மீண்டும் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்ததால் பயணிகள் பாரிய அசௌகரியத்துக்கு முகம்கொடுத்தனர்.

ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் உபதலைவரை பதவியிலிருந்து நீக்குவதற்கு ரயில் திணைக்கள பொதுமுகாமையாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் அந்த சங்கம் அறிவித்துள்ளது.

ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் 12ம் திகதி நள்ளிரவு 06

கொழும்பில் மக்கள் பாதுகாப்பை உறுதிசெய்ய

## தற்காலிகமாக தங்கியிருப்போர் பொலிஸில் பதிய வேண்டும்

### புதிய உத்தரவின்படி நேற்றுமுதல் பதிவு ஆரம்பம்



கொழும்பு மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் தொழில் நிமித்தமோ வேறு காரணங்களுக்காகவோ தற்காலிகமாக தங்கியிருக்கும் அனைவரையும் உடன் பதிவு செய்யும் திட்டமொன்று பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேல் மாகாண பிரஜைகள் பொலிஸ் பிரிவூடாக இந்த திட்டம் 'தேசிய பாதுகாப்பை உறுதி செய்வோம்; குற்றம், போதைப் பொருளை ஒழிப்போம்' எனும் தொனிப் பொருளின் கீழ் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் 06

## கடந்த இருவாரங்களில் கொவிட் தொற்றாளர் தொகை அதிகரிப்பு

### மீண்டும் கொரோனா அலை ஏற்படும் அபாயம்



நாட்டில் மீண்டும் கொரோனா அலை ஏற்படும் அபாய நிலை உள்ளதாக தேசிய தொற்று நோய் விஞ்ஞான நிறுவகத்தின் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த இரு வாரங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கை, சற்று அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக மீண்டும் கொரோனா அலை ஏற்படக் கூடும் என்ற ஐயம் நிலவுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளில் ஒமிக்ரோன் திரிபுடனான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 06

ஜனாதிபதியின் செயலாளர்

## பி.பீ.ஜயசுந்தர நேற்று இராஜினாமா



ஜனாதிபதியின் செயலாளர் பதவியில் இருந்து கலாநிதி பி.பீ.ஜயசுந்தர நேற்று இராஜினாமா செய்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற எளிமையான நிகழ்வில் பதவி விலகுவதாக அவர் அறிவித்துள்ளார். இதன்போது அவர் தனது அலுவலக அதிகாரிகளிடம் இருந்து விடைபெற்றுக்கொண்டார்.

பி.பீ.ஜயசுந்தர பல வருடங்களாக அரசாங்கத்தின் உயர் பதவிகளை வகித்துள்ளார். இதேவேளை, 06

பொரளை தேவாலய சம்பவம்:

## இதுவரை 14 பேரிடம் வாக்குமூலம் பதிவு!



பொரளை சகல பரிசுத்தவான்கள் தேவாலயத்தில் கைகுண்டுகள் மீட்கப்பட்டமை தொடர்பிலான விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என தெரிவித்துள்ள பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன, சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் இதுவரை 14 வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விசேட அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ள பொலிஸ்மா அதிபர், 06

## மைத்திரிபால சிறிசேன கொள்கையற்ற ஒருவர்

### பியல் நிஷாந்த கருத்து தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொள்கை அற்றவர் என இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.

பத்தரமுல்ல செத்சிறிபாய வளாகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எந்த கொள்கையும் அற்றவர் எனவும் அவரது மகள் எழுதிய "ஜனாதிபதி அப்பா" புத்தகத்தை படித்திருந்தால் அவரைப் பற்றி 06

## தவழ்ந்துவிட்டு எழுந்து நிற்கும் கட்சியாக நாம்!

### பதிவின் பின் விக்கி MP பெருமிதம்



தவழ்ந்துவிட்டு தற்பொழுது எழுந்து நிற்கும் கட்சியாக நாங்கள் இருக்கின்றோம் என தெரிவித்த தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், எமது கட்சிக்கு முன்னுரிமை அளிப்பதை எமது பங்காளிக் கட்சிகள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

அதனால் அவர்களுடன் இணைந்து செயற்படுவது இலகுவாக உள்ளதெனவும் தெரிவித்தார். தமிழ் மக்கள் கூட்டணியின் 06

இலங்கையில் தமிழக மீனவர்களது காவல் நீடிப்பு:

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஜெய்சங்கரிடம் ஸ்டாலின் கோரல்

### 43 மீனவர்களுக்கும் ஜன.27 வரை மறியல்

**திருச்சி, எம்.கே. ஷாகுல் ஹமீது**



இலங்கை சிறைகளில் வாடும் தமிழக மீனவர்களின் காவல் மேலும் நீடிக்கப்பட்டு இருப்பது மிகுந்த அதிருப்தியை தருகிறது என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

தமிழக மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் கைது செய்து சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளது தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு, முதலமைச்சர் 06

## 13ஆவது திருத்தம் தமிழருக்கு எதிராக உருவாக்கப்பட்ட சதி

### 12 வருடங்களுக்கு முன்னரே கூறிவிட்டோம்

**யாழ். குறூப் நிருபர்**



தமிழ் மக்களுக்காக உருவாக்கப்பட்ட சதியே 13வது திருத்தம் ஆகும். அந்த சதியில் இருந்துகொண்டு முப்பது வருட ங்களுக்கு மேலாக உயிர்த்தியாகம் செய்து ஏதோ ஒரு வகையில் தக்க வைத்துக் கொண்டு இருக்கின்றோம். இந்த சதியை மக்களாலேயே முறியடிக்க முடியுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 06

## பத்திரிகை வாசிக்க TV செய்தி பார்க்க எனக்கு நேரமில்லை!



பத்திரிகைகளை வாசிப்பதற்கோ அல்லது தொலைக் காட்சியில் செய்திகளை பார்ப்பதற்கோ தனக்கு நேரமில்லையென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறுவதானால் வெளியேறலாம் என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வெளியிட்ட கருத்து குறித்து ஊடகவியலாளர்கள் 06

### விக்கல் வீராச்சாமி



வடக்கில இந்நாள், முன்னாள் எம்பிமார் பலரும் புது வீடுகள் கட்டி தைப்பொங்கல சிறப்பாக கொண்டாடி இருக்கிறாங்க பாக்க சந்தோஷமா இருக்கு....

பேஸ்புக்ள 20, 25 படங்கள் வேற, வாக்களிச்சு தங்களை இந்த நிலைக்கு கொண்டுவந்த சனத்த பற்றி ஒரு சிறு கவலையும் இருப்பதா தெரியல....

# பெண் என்று மட்டந்தட்டியவர்களுக்கு மத்தியில் உங்களை அடையாளப்படுத்திக் கொள்ளுங்கள்

## அதிவேக நெடுஞ்சாலையில் பஸ் ஓட்டும் ஒரே ஒரு பெண்

சமத்துவம் என்பதற்கு அர்த்தம் கற்றுத் தரும் வகையில் ஆணுக்குப் பெண் நிகரானவள் என்ற அம்சம் பலரால் பல சமூகங்களில் நிலைநாட்டடப்பட்டு வருகின்றது. ஆணையும் பெண்ணையும் இரு வேறு குழுக்களாக வகைப்படுத்தியவர்கள் ஆணுக்கென்றும் பெண்ணுக்கென்றும் தனித்தனியாக கட்டுப்பாடுகளை விதித்தனர். சமூக கட்டமைப்பில் யாவரும் இங்கு சமமானவர்கள். உடல் தோற்றத்தினால் மட்டுமே பெண்களும் ஆண்களும் பிரிக்கப்படுகின்றனரே தவிர சாதனைகளாலும் திறமைகளாலும் அவர்கள் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை மீண்டும் ஒருமுறை நிலைநாட்டியுள்ளார் லக்ஷி சசிந்தா.

சமூகம் கட்டமைத்த பால்நிலை வார்ப்பில் பெண்ணுக்கு என பல வரையறைகள் காணப்படுகின்றன. பெண்கள் ஆசிரியர் தொழிலுக்குத் தான் தகுதியானவர்கள் என்பதை பலர் காலமாக கண்மூடித்தனமாக நம்புகின்ற பிற்போக்கான சமூகத்திலிருந்து பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு லக்ஷி சான்றாகியுள்ளார்.

மாத்தறை தெவிநுவர கிராமத்தைச் சேர்ந்த ஹல்ப கருணாசேன மற்றும் தயாவதி என்போருக்கு மகளாக இவர் 1979 ஆம் ஆண்டு பிறந்தார். ஐந்து சகோதர சகோதரிகளுடன் தாய்க்கு இரண்டாவது மகளாக பிறந்தவராவார்.

சாதாரணமாக பாடசாலைகளில் மாணவர்களிடம் ஆசிரியர் கேட்கும் கேள்விகளில் உங்கள் எதிர்கால லட்சியம் என்ன என்பது ஒரு முக்கியமான கேள்வியாகும்.

அதற்கு பல மாணவர்களின் பதில் ஆசிரியராக வேண்டும் வைத்தியராக வேண்டும். என்ஜினியராக வேண்டும் என்பனவே காணப்படும் . ஆனால் அத்தகைய பொதுவான ஆசைக்கு அப்பாட்பட்டு தான் ஒரு பஸ் ஓட்டுனநராக வரவேண்டும் என்பதை எதிர்கால இலக்காக இவர் கொண்டிருந்தார். தற்போது தன் கனவை நனவாக்கி அதிவேக நெடுஞ்சாலையில் பஸ் ஓட்டும் ஒரே ஒரு பெண் ஓட்டுநராக வலம் வருகின்றார்.

லக்ஷி சசிந்தாவிற்கு சிறுவயதிலிருந்தே தான் ஒரு பஸ் ஓட்டுநர் ஆக வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆரம்ப கல்வியை மாத்தறை சுஜாதா பாலிகா வித்தியாலயத்தில் மேற்கொண்டு உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளை பெற்று பட்டப்படிப்புக்கு தயாராகினர். ஆயினும் இவரது கனவு தான் ஒரு சிறந்த பஸ் ஓட்டுநராக வர வேண்டும் என்பதாகவே அமைந்திருந்தது.



**பிறந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம் என்று காலத்தை கழிப்பவர்கள் மத்தியில் இடைவிடாத முயற்சியால் விஸ்வரூபம் பெற்றவர்கள் ஒரு சிலரே. அவ்வரிசையில் லக்ஷியும் ஒருவராவார்.**



**அதிகாரத்தில் இருந்தோர் ஒரு பெண் என்ற காரணத்தினால் மட்டந்தட்டினர். அதனை தகர்த்தெறிந்து அதிவேகச் சாலையில் சுதந்திர பறவையாக பயணிக்கத் தொடங்கினார். தனி ஒரு பெண்ணாக போராடி பல புறக்கணிப்புகளுக்கு மத்தியில் நின்று தற்போது மாத்தறை கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையில் பிரகாசிக்கும் ஒரே ஒரு பெண்மணியாக திகழ்கின்றார்.**

தன் தந்தையிடம் இருந்த ஒரு சிறிய கராஜிலேயே தன் சிறுபராய காலத்தை அமைத்துக் கொண்டார். இக்காலத்தில் வாகனங்கள் மீது ஏதோ ஒரு அலாதிப் பிரியம் இவருக்கு இருந்தது. பழுது பார்ப்பதற்காக அசோக் லேலண்ட் பஸ் வாகனங்கள் வரும்போது ஓட்டுநர் ஆசனத்தில் ஏறியிருந்து கொள்வாராம். ஸ்டியரிங்கைச் சுழற்றும் போது பெருமகிழ்ச்சி கொண்டு துள்ளிக் குதிப்பது இவரது வழக்கம். தன் தந்தையிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வாகனங்களைச் செலுத்த கற்றுக் கொண்டுள்ளார்.

சிறுவயதில் வாகனங்கள் மீது ஈடுபாடு கொண்டமைக்கு இவரது தாயும் தந்தையும் விருப்பம் தெரிவித்திருந்தனர். 13 14 வயதாகும் போது அனைத்து வாகனங்களையும் செலுத்தக் கூடிய ஆற்றலை பெற்றிருந்தார். அதே நேரம் தன் தந்தைக்குச் சொந்தமான ஜீப் வாகனம் ஒன்றை ஓட்டி பழகுவதும் வழக்கம். இதன்போது தானாகவே முயன்று வாகனத்தை செலுத்தக் கற்றுக் கொண்டுள்ளார்.

உயர் தரத்தை முடித்துவிட்டு வீட்டில் இருந்த காலத்திலேயே தனக்கான துறையொன்றைத் தெரிவு செய்து கொண்டார். பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அழைத்துச் சென்று திரும்ப அழைத்து வரும் சேவை தொடங்க வேண்டும் என்ற ஆர்வம் இவருக்கு இருந்தது.

18 வயதில் வாகனங்களை ஓட்டுவதற்கான சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொண்டார்.இலகு வாகனங்களை செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் இலகுவாக கிடைத்து விடும். ஆனால் கனரக வாகன அனுமதிப்பத்திரம் அவ்வாறல்ல .அதற்கு கடின உழைப்பு அவசியமாகும். அதற்காக ஐந்து வருடங்கள் காத்திருக்க வேண்டிய நிலை இருந்தது. தனக்கான உரிய தகுதிகளை வளர்த்துக் கொண்டால்கனரகவாகனங்களைஓட்டுவதற்கானஅனுமதிப்பத்திரம் பெற எவ்வித தடைகளும் இல்லை என அறிந்து 2008ஆம் ஆண்டில் அதனையும் பெற்றுக்கொண்டார்.

லக்ஷி தன் முதற்கட்ட செயற்பாடாக பாடசாலை பஸ் சேவையை ஆரம்பித்தார். மாத்தறையில் உள்ள பல பாடசாலைகளுக்கு மாணவர்களை ஏற்றிச் செல்லும் பணியை தன் தலையாய பணியாக கொண்டு செயல்பட்டhர். பெண்ணொருவர் வாகனத்தை செலுத்துவதால் பெற்றோர் அதிக விசுவாசம் கொண்டு இருந்தனர். அவர்களின் விசுவாசத்திற்கு அமைவாக ஏற்றிச் செல்லும் பிள்ளைகளின் மீது அதிக அக்கறையுடனும் பொறுப்புடனும் செயற்பட்டமை தனக்கு திருப்தியான செயலாக அமைந்தது என சுட்டிக்காட்டுகின்றார்.

12 வருடம் பள்ளி மாணவர்களை ஏற்றி சென்ற பணியை உளமார்ந்து ஆற்றியதையிட்டு பெருமை அடைகின்றார். பெண்ணொருவர் ஓட்டிச் செல்லும் வாகனத்தை மிகவும் ஆச்சரியமாக வீதியால் செல்பவர்கள் பார்ப்பார்கள். பலர் ஆச்சிரியத்தில் அவரை வாழ்த்தினார்கள் ஆதரித்தார்கள் ஆனால் மறுபுறம் கிண்டல் கேலிகளுக்கும் எவ்வித குறையும் இருக்கவில்லை.

அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்க வேண்டும் என்ற ஆவலுடன் தன் பயணத்தை தொடர்ந்து வந்த இவருக்கு கதவுகள் திறக்கப்பட்டன. அது காலி மாத்தறை அதிவேக பாதையாக அமைந்தது. பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் அதிவேக போக்குவரத்துக்காக விண்ணப்பித்த முதல் நபரும் இவரே.

அதிகாரத்தில் இருந்தோர் ஒரு பெண் என்ற காரணத்தினால் மட்டந்தட்டினர். அதனை தகர்த்தெறிந்து அதிவேகச் சாலையில் சுதந்திர பறவையாக பயணிக்கத் தொடங்கினார் . தனி ஒரு பெண்ணாக போராடி பல புறக்கணிப்புகளுக்கு மத்தியில் நின்று தற்போது மாத்தறை கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையில் பிரகாசிக்கும் ஒரே ஒரு பெண்மணியாக திகழ்கின்றார். இடைவிடாத முயற்சியால் இன்று மூன்று சொகுசு வாகனங்களுக்கு சொந்தக்காரராக தன் பயணத்தை தொடர்ந்து வருகின்றார். 20 வருடகாலமாக அயராத உழைப்பின் பயனை அடைந்துள்ளார்.

பிறந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம் என்று காலத்தை கழிப்பவர்கள் மத்தியில் இடைவிடாத முயற்சியால் விஸ்வரூபம் பெற்றவர்கள் ஒரு சிலரே. அவ்வரிசையில் லக்ஷியும் ஒருவராவார்.

குடும்பம் குழந்தைகள் எனும் குறுகிய வட்டத்திற்குள் தம்மைக் குறுக்கிக் கொள்ளாது சிறகுகளை விரித்து பறக்கத் தயாராக உள்ள பெண்களுக்கு தன் அனுபவ பயிற்சியளித்து ஊக்குவிக்கத் தயாராக உள்ளார். தன் குடும்பப் பொறுப்பையும் தொழிலையும் சமமாக எண்ணி இரண்டையும் சரிசமமாக ஆற்றி வருகின்றார். தன் வெற்றிக்கு காரணமான தந்தையும் கணவரையும் எண்ணி பெருமிதம் கொள்கிறார். பெண்பிள்ளைகளுக்கு சமத்துவம் அளிக்கப்பட வேண்டும். இதுவரை காலமும் அன்னை தெரேசாவையும் கல்பனா சாவ்லாவையும் உதாரணம் காட்டி வளர்த்த காலம் போய் இன்று உதாரணம் காட்டக்கூடிய சாதனையாளர்கள் எமது சமூகத்திலேயே எமக்கு அருகிலேயே அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

தனக்குள் ஒளிந்திருக்கும் திறனை கண்டறிந்து தனக்கு விருப்பமான துறைகளில் மிளிர அவர்களுக்கு ஊக்கம் அளிக்கவேண்டும். பெற்றோர் தம் பிள்ளைகள் மீது முழுமையாக நம்பிக்கை வைக்கும் போது அவர்கள் எதிர்காலத்தில் சுதந்திரமாக செயற்படுவதற்கும் சரித்திரம் பேசும் சாதனையாளராக மாறுவதற்கும் வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்க முடியும் .

**எஸ்.மங்களதர்ஷினி**
4ஆம் வருடம்
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

## பொதுமக்களுக்கு விடுக்கப்படும் தயவான அறிவித்தல்

2015 இல 5 தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் 131 பிரிவின் கீழ் மற்றும் கௌரவ நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்.

இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோரல்

பலப்பிட்டிய நீதவான் நீதிமன்ற வழக்கு இல 40643 இன் கீழ் விசாரிக்கப்பட்ட

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் எமது நிறுவனத்திடம் இல்லாமல் மற்றும் மருந்தாளரின் நேரடி மதிப்பீடின்றி மருந்துகளை விநியோகித்த குற்றத்திற்காக

2021.08.18ம் திகதி கௌரவ பலப்பிட்டிய நீதிவான் முன்னிலையில் குற்றத்தை ஒப்புக்கொண்டதாகவும் நீதிவான் நீதிமன்றத்தினால் ரூ. 50,000/- தண்டமொன்றுக்கு ஆளாகியதாக இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

இக்குற்றத்தை நான் மீண்டும் செய்யமாட்டேன் என தெரிவிப்பதுடன் மேற்கொண்ட குற்றம் சம்பந்தமாக முழு இலங்கைவாழ் மக்களிடமும் மன்னிப்புக் கோருகிறேன்.

ஹினிதுமகே ரங்கிகா
சந்தஹிரு பாமசி
நிலக்கபுர
அம்பலாங்கொடை

2022 ஜனவரி 15 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

13 முதல் 15 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.06 |
| லுஹர் | 12.20 |
| அஸர் | 03.42 |
| மஃரிப் | 06.12 |
| இஷா | 07.27 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் தை 2

ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: திரயோதசி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | சுகம் |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | செலவு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# இரத்தினபுரியில் கண்டு பிடிக்கப்பட்ட நீலக்கல்லை கின்னஸில் பதிய ஏற்பாடு

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரியில் கண்டெடுக்கப்பட்ட உலகின் நிறை கூடிய கொத்தணி நீலக்கல்லை கின்னஸ் புத்தகத்தில் பதிவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



இக்கல்லின் இரசாயனப் பரிசோனை உலகின் பிரபலமான இரசாயன ஆய்வு கூடமான சுவிட்சர்லாந்தில் Gbelin Gem Labல் நடைபெற்றது. ஆய்வுக்கூடம் இக்கல்லின் தரத்தினை உறுதிப்படுத்தியதையடுத்து 510 கிலோ எடையுள்ள இந்த இரத்தினக்கல்லை இரத்தினக்கல் அதிகார சபை மற்றும் இக்கல்லின் உரிமையாளர்கள் இதனை கின்னஸ் புத்தகத்தில் பதிவதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாக அதிகாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# இலங்கையில் நிலவும் தற்காலிக சிரமங்கள் விரைவில் நீங்கும்!

## அபிவிருத்திப் பணிகள் தொடருமென சீனா நம்பிக்கை

இலங்கையானது தற்காலிக சிரமங்களை சமாளித்து, கூடிய விரைவில் புதுப்பிக்கப்பட்ட மற்றும் சிறந்த அபிவிருத்தியை முன்னெடுக்கும் என சீனா தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களின் ஒருங்கிணைந்த முயற்சியால் நாடு நிச்சயமாக தற்காலிக சிரமங்களை விரைவில் சமாளித்து, பெரிய வளர்ச்சியை ஏற்படுத்தும் என சீன வெளிவிவகார அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அரச சபை உறுப்பினரும் சீன வெளிவிவகார அமைச்சருமான வாங் யீ அண்



மையில் இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கைத் தலைவர்களுடன் கலந்துரையாடினார் என்றும் அவர் தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டு ஜனாதிபதி ஷி ஜின் பிங்கின் இலங்கைக்கான வரலாற்றுச் சிறப்புமிக்க அரச விஜயமானது இருதரப்பு நட்புறவு ஒத்துழைப்பில் புதிய அத்தியாயத்தைத் திறந்து வைத்ததுடன், தேசிய இறையாண்மை, சுதந்திரம் மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதில் இலங்கைக்கு சீனா உறுதியாக ஆதரவளிக்கிறது எனவும் தெரிவித்தார்.

மேலும் கடன் விவகாரம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த செய்தித் தொடர்பாளர் வென்பின், இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்ததில் இருந்து, சீனாவும் இலங்கையும் பரஸ்பரம் புரிந்துணர்வையும்

06

# தொழிற்சங்க போராட்டத்தால் ரயில் இடைநிறுத்தம்; பயணிகள் அவதி

**ஹற்றன் விசேட நிருபர்**

தொழிற்சங்க போராட்டம் காரணமாக மலையகத்திற்கான புகையிரதங்கள் நேற்று இடைநடுவில் நிறுத்தப்பட்டதால் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்தனர்.

புகையிரத நிலைய அதிபர்கள் மேற்கொண்ட தொழிற்சங்க போராட்டம் கைவிடப்பட்டு சில மணித்தியாலங்களில் மீண்டும் நேற்று (14) பிற்பகல் 12.00 மணியளவில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் கொழும்பிலிருந்து நேற்று காலை 5.55க்கு புறப்பட்டு வந்த உடரட்ட மெனிக்கே ரயில் சுமார் 1.30 மணியளவில் கொட்டகலை புகையிரத நிலையத்தில் தனது பயணத்தை நிறுத்திக்கொண்டது. இதனால் பயணத்தை தொடர முடியாது மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

புகையிரதம் இடையில் நிறுத்தப்பட்டமையினால் தங்களது பொதிகளையும், பிள்ளைகளையும் சுமந்து கொண்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரயாணிகள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்தனர்.





ஒரு சில பயணிகள் சுமார் மூன்று மாதத்திற்கு முன்னரும் ஒரு சில பயணிகள் சுமார் ஒரு மாதத்திற்கு முன்னரும் புகையிரத கடவுச் சீட்டுகளை முன்பதிவு செய்ததாகவும் தற்போது இடையில் கொண்டு நடு வீதியில் விட்டு விட்டதனால் செய்வதறியாது திகைத்து நின்றனர். மற்றும் சிலர் புகையிரத பயணத்திற்கு மாத்திரம் பணம் கொண்டு வந்ததாகவும் தொடர்ந்து செல்வதற்கு பணம் இல்லை என்றும் தெரிவித்தனர்.

குறித்த புகையிரதம் கொட்டகலையில் நிறுத்தப்பட்டதனால் ஹற்றன் மற்றும் திம்புல்ல பத்தனை பொலிஸார் இணைந்து பயணிகளை இலங்கை போக்குவரத்து சேவைக்கு சொந்தமான பஸ்களில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர்.

பஸ்கள் வருவதற்கு தாமதமானதால் இளைஞர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டன.

அதனை தொடர்ந்து இலங்கை போக்குவரத்து சேவைக்கு சொந்தமான பஸ்களில் பதுளை வரை செல்ல உள்ள அனைத்து பயணிகளையும் ஏற்றி அனுப்பப்பட்டனர்.

இது குறித்து பயணிகள் கருத்து தெரிவிக்கையில், கொரோனா தொற்று பரவல் காரணமாக எமது நாட்டு பொருளாதாரம் பாரிய அளவில் பாதிக்கப்பட்டிருந்தது. வீழ்ச்சியடைந்திருந்த சுற்றுலா துறை மீண்டும் உயிர்பித்து வரும் நிலையில் இவ்வாறான தொழிற்சங்க போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர். இன்றும் கூட அதிகமான சுற்றுலா பயணிகள் இந்த புகையிரதத்தில் வருகை தந்தனர். அவர்கள் தங்களது குடும்பங்களுடன் வருகை தந்திருந்தனர். இப்படி திடீரென தொழிற்சங்க போராட்டம் என்று புகையிரதம் இடைநிறுத்தப்பட்டால் அவர்கள் என்ன செய்வார்கள் ? எமது நாட்டை பற்றி என்ன நினைப்பார்கள்? மீண்டும் அவர்கள் எமது நாட்டுக்கு வருவார்களா? இப்போது எங்களுக்கே நாட்டை விட்டு வேறு

06

# மின்சார சபைக்கு நாளாந்தம் 1,500 மெ. தொ.டீசல் வழங்க தீர்மானம்

மின் உற்பத்திக்காக நாளாந்தம் 1,500 மெற்றிக்தொன் டீசலை இலங்கை மின்சாரசபைக்கு பெற்றுக்கொடுப்பதற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்துக்கு தேவையான டீசல் இல்லாமை காரணமாக நேற்று முன்தினம் கொழும்பு, கம்பஹா உட்பட நாட்டின் பல பிரதேசங்களில் சுமார் இரண்டரை மணி நேரம் மின் துண்டிப்பு ஏற்பட்டது. அதனால் அவசர தேவை கருதி நேற்று முதல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை நாளாந்தம் 1,500 மெற்றிக்தொன் டீசலை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

எரிபொருள் பெற்றுக்கொண்டமைக்காக இலங்கை மின்சாரசபை 91 பில்லியன் ரூபா பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு ஏற்கனவே வழங்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பண மோசடி செய்த பெண் CIDயால் கைது

வேலை வாங்கி தருவதாக கூறி பணத்தை மோசடி செய்த பெண்ணொருவர் பத்தரமுல்ல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், சந்தேகநபர் நேற்று முன்தினம்(13) கைதுசெய்யப்பட்டதாகவும் கடந்த 2020ஆம் ஆண்டு இந்த பண மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# ஆட்டோ விபத்தில் குழந்தை பலி – பசறையில் சம்பவம்

பதுளை பசறை பிரதான வீதியின் ஐந்தாம் கட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் (13) முச்சக்கரவண்டி ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் எட்டு மாத குழந்தை ஒன்று உயிரிழந்தது.

முச்சக்கர வண்டியைக் குழந்தையின் தாயே செலுத்தியதாகவும் அவருக்குச் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் சம்பவத்தில் காயமடைந்த தாய் மற்றும் முச்சக்கரவண்டியில் பயணித்த மற்றுமொரு ஆண் ஆகியோர் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# முப்படைகளின் இடைநிலை அதிகாரிகளுக்கு ஒரு நாள் கருத்தரங்கு

**(ஸாதிக் ஷிஹான்)**




பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் வழிகாட்டுதலுக்கமைய பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் உள்ள பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'சமகால உலகில் இராணுவத் தலைமைத்துவம்: ஒரு போர் வீரனிலிருந்து உதவும் நண்பனாக பரிணாமம்' எனும் தொனிப்பொருளில் தலைமைத்துவ கருத்தரங்கு இடம்பெற்றது.

முப்படைகளின் இடைநிலை அதிகாரிகளுக்கக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஒரு நாள் தலைமைத்துவ கருத்தரங்கில் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன் விஷேட உரை நிகழ்த்தினார்.

பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாதுகாப்புச் செயலாளருக்கு பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வா விஷேட நினைவுச் சின்னத்தை வழங்கி வைத்தார்.

தேசிய பாதுகாப்பில் இராணுவத்தின் வகிபாகம் மற்றும் செயல்பாட்டினை மறுவரையறை செய்தல், சமகால செயல்பாட்டு சூழலில் இராணுவத் தலைமைத்துவத்தின் வகிபாகம் மற்றும் இராணுவ மனப்பான்மை: இராணுவத் தலைமைத்துவத்திற்கான தொழில் சார் அணுகுமுறை என்பன இந்த கருத்தரங்கின் உப கருப்பொருள்களாக அமையப் பெற்றிருந்திருந்தன. இந்த நிகழ்வில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன, பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி அலுவலகத்தின் பிரதானி மேஜர்ஜெனரல் அஜித் திசாநாயக்க,ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மூலோபாயகற்கைகள் திணைக்களத்தின் தலைவர் கலாநிதி ஹரிந்த விதானகே, பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி அலுவலகத்தின் ஒருங்கிணைப்பு பணிப்பாளர் நாயகம் எயார் வைஸ் மார்ஷல் பிரசன்ன பாலசூரிய, பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி அலுவலகத்தின்

06



# ஜாவா தீவில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம்




இந்தோனேசியாவின் ஜாவா தீவில் நேற்று பிற்பகல் 6.6 ரிச்டெர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் தலைநகர் ஜகார்த்தாவில் கட்டிடங்கள் குலுங்கியதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.அந்த நிலநடுக்கம் தீவின் மேற்கு பகுதியினை GMT 09.05 மணியளவில் 37 கிலோ மீட்டர் (23 மைல்) ஆழத்தில் தாக்கியுள்ளது. எனினும் நிலநடுக்கம் காரணமாக சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை மற்றும் உயர் சேதம் அல்லது சொத்து சேதம் குறித்த உடனடி அறிக்கைகள் எதுவும் வெளியாகவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.இதேவேளை இந்த நிலகடுக்கம் காரணமாக இலங்கைக்கு சுனாமி அச்சுறுத்தலோ அல்லது எவ்வித பாதிப்போ இல்லை என்றும், கரையோப் பகுதியில் பாதுகாப்பாக உள்ளதாகவும் இலங்கை தேசிய சுனாமி எச்சரிக்சை மையம் தெரிவித்துள்ளது.

# மணலை இறக்குமதி செய்ய தீர்மானம்

நாட்டில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான மணலை இறக்குமதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.



துறைமுக நகர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நாட்டிலுள்ள ஆறுகளிலிருந்து மணலை வழங்க முடியாது என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

2025 ஆம் ஆண்டு வரையான இலங்கையின் மணல் தேவை 57 மில்லியன் கன மீற்றராக மதிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் நாட்டில் 42 மில்லியன் கனமீற்றர் மணலே உள்ளது. ஆறுகளில் மணல் எடுப்பது நிறுத்தப்பட்டு வருவதாகவும், கிழக்கு மாகாணம் மற்றும் பொலன்னறுவையில் இருந்து மணல் எடுப்பதும் படிப்படியாக நிறுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கடலில் ஆழமாக தோண்டுவதற்கு திட்டமிடப்பட்டாலும், மீனவர்களின் எதிர்ப்பு காரணமாக மணல் இறக்குமதி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 141.83 | 147.84 |
| கனடியன் டொலர் | 153.64 | 159.49 |
| யூரோ | 223.85 | 232.67 |
| ஜப்பான் யென் | 1.7190 | 1.7840 |
| சிங்கப்பூர் டொலர் | 146.13 | 150.84 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 265.27 | 273.66 |
| சுவிஸ் பிராங்க் | 215.03 | 222.69 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 533.10 | கட்டார் ரியால் | 55.20 |
| குவைத் டினார் | 664.02 | சவூதி ரியால் | 53.51 |
| ஓமான் ரியால் | 522.07 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.72 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் தை மாதம் 02ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஆகிறா பிறை 11

### குறள் தரும் சிந்தனை



பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்

பகையை வீழ்த்திட அகத்தில் சினங்கொண்டாலும்
அதனை வெளிப்படுத்தாமல் இடம் காலம்
இரண்டுக்கும் காத்திருப்பதே அறிவுடையார் செயல்

# எதிரணியிலிருந்து வெளிவரும் வெறும் வேடிக்கைப் பேச்சுகள்!

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று அக்கட்சியைச் சேர்ந்த ஓரிருவர் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தனர். அதேசமயம் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான சஜித் பிரேமதாச தலைமையிலான அரசாங்கத்தை நிறுவ வேண்டுமென அக்கட்சியைச் சேர்ந்த ஒருசிலர் மற்றொரு தரப்பிலிருந்து விருப்பம் வெளியிட்டிருந்தனர்.

இவ்விரு தரப்பினரதும் கருத்துகள் உண்மையில் விசித்திரமும், வேடிக்கையும் நிறைந்ததாகும். எந்தவொரு நாட்டிலும் அரசியல்வாதிகள் எவருக்குமே கனவுகள் வருவது இயல்பு, அதிகார ஆசைகள் தோன்றுவதும் வழமை. அவையெல்லாம் அவரவர் சொந்த விருப்புகள். ஆனாலும் அரசியல்வாதிகள் வெளியிடுகின்ற இவ்வாறான அபத்தமான கருத்துகளை மக்கள் வேடிக்கையுடன் நோக்குவார்கள் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் முதலில் கருத்தில் கொள்வது அவசியம்.

இங்கே முதலில் ஆராயப்பட வேண்டியது ஐக்கிய தேசியக் கட்சியினர் கொண்டுள்ள கனவாகும். ஐ. தே. க கொண்டுள்ள மக்கள் செல்வாக்கு எவ்வாறானதென்பதை இறுதியாக நடைபெற்ற பொதுத்தேர்தல் தெட்டத்தெளிவாகவே புரிய வைத்து விட்டது. பிரித்தானியர் ஆட்சியில் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் முதன் முதலில் நாட்டை ஆட்சி செய்த கட்சியென்ற பெருமைக்குரியது ஐக்கிய தேசியக் கட்சி ஆகும்.

அதன் பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தல்கள் பலவற்றில் ஐ.தே.கவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி தனியாகவோ அல்லது தோழமைக் கட்சிகளின் ஆதரவுடனோ அரசாங்கத்தை அமைத்திருக்கின்றன. 1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தனியாகவே அறுதிப் பெரும்பான்மையுடன் அரசாங்கத்தை அமைத்த பெருமையும் ஐ. தே. கவுக்கு உள்ளது. இறுதியாக மைத்திரிபால சிறிசேன – ரணில் விக்கிரமசிங்க கூட்டணி உருவாகி ஆட்சியைக் கைப்பற்றியதிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கு பெரிதும் உதவியிருந்தது.

அத்தனை செல்வாக்கு மிக்க ஐ. தே.கவை இறுதியாக நடைபெற்ற பொதுத்தேர்தலில் நாட்டு மக்கள் முற்றாகவே நிராகரித்திருந்தனர். நாட்டில் ஆட்சிபீடத்தில் இருந்த கட்சியொன்றினால் பொதுத்தேர்தலில் ஒரேயொரு பாராளுமன்ற ஆசனத்தைக் கூட வென்றெடுக்க முடியாதபடி அதிர்ச்சியான தோல்வியை நாட்டு மக்கள் அத்தேர்தலில் ஐ.தே.கவுக்குக் கொடுத்திருந்தனர். இறுதியில் அக்கட்சிக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனத்தின் மூலமே கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்திற்குள் செல்ல முடிந்தது.

அத்தேர்தலில் வேடிக்கை என்னவெனில், கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவினால் கூட பாராளுமன்ற ஆசனத்தை தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை என்பதாகும். ஒவ்வொரு தேர்தலிலும் கொழும்பு மாவட்டத்தில் அதிகப்படியான மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்று வருகின்ற ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் முற்றாகவே இவ்வாறு நிராகரித்திருக்கின்றார்களென்றால் அதற்கான காரணங்கள் குறித்து இவ்விடத்தில் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் கூட மைத்திரி_ ரணில் கூட்டணியினால் நல்லிணக்கத்தைத் தொடர இயலாமல் போய் விட்டது. கூட்டணி அரசாங்கத்தை அமைத்த பின்னர் சில மாதங்களிலேயே அவ்விரு தலைவர்களுக்கும் இடையே முரண்பாடுகள் உருவாகத் தொடங்கி விட்டன. இரு தரப்பு முரண்பாடுகளுடனேயே இரு தரப்பினரும் ஆட்சியைத் தொடர்ந்தனர். இறுதியில் அக்கூட்டணி பிளவடைந்து போனது.

ஒவ்வொருவர் மீது குற்றம் சுமத்துவதிலேயே மைத்திரி_ ரணில் கூட்டணியின் ஆட்சிக் காலம் கடந்து போனது. நல்லாட்சி அரசின் கையாலாகாத்தனங்களின் ஒரு வெளிப்பாடுதான் கிறிஸ்தவ மக்களின் புனித நாளான ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று நாட்டின் தேவாலயங்களிலும், நட்சத்திர ஹோட்டல்களிலும் இஸ்லாமிய பயங்கரவாத குழுவொன்று நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் ஆகும்.

கிறிஸ்தவ மக்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் அப்பாவி மக்களை இலக்கு வைத்து பயங்கரவாத குழுவினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் 250 இற்கும் மேற்பட்ட அப்பாவிகள் பலியாகிப் போனார்கள். நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்ததுடன், பலர் அங்கவீனமுற்றும் போனார்கள். இன்று எதிரணியில் இருக்கின்ற ஐ.தே.க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சிகளின் தலைவர்கள் நல்லாட்சி அரசில் பதவிப் பொறுப்பில் இருந்த வேளையிலேயே பயங்கரவாதிகள் ஈஸ்டர் தினத்தில் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இவ்வாறான பொறுப்புணர்வற்ற அரசியல் தலைவர்களிடமே ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென அவர்களது கட்சியினர் இப்போது கோருகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பிரேமதாச கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் மக்களால் நிராகரிக்கப்பட்டவராவார். அவ்வாறானவர்களிடமே நாட்டின் தலைமைப் பொறுப்பை ஒப்படைக்குமாறு அவர்களது கட்சியினர் தற்போது கூறுகின்றனர். அக்கூற்று உண்மையிலேயே வேடிக்கையானதாகும்.

உள்நாட்டு யுத்தம் மற்றும் ஈஸ்டர் தாக்குதலின் பின்னரான பயங்கரமான காலகட்டத்தையும், கொவிட் அலைகளையும் முடிவுக்குக் கொண்டு வந்துள்ள இன்றைய அரசின் வினைத்திறனான செயற்பாடுகளை மக்கள் நன்கறிவர். எதிரணியினரின் அபத்தமான கருத்துகள் வெறும் வேடிக்கைப் பேச்சுகளே ஆகும்.

editor.tkn@lakehouse.lk

## கல்முனையில் இரு நாட்கள் வர்த்தகக் கண்காட்சி:

# கிழக்கு ஆளுநரைக் கவர்ந்த உள்ளூர் உற்பத்திகள்

கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறை திணைக்களமும் கைத்தொழில் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட அலுவலகமும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த உள்ளூர் கைத்தொழில் உற்பத்திகளின் கண்காட்சியும் வர்த்தக சந்தையும், கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன், வியாழன் ஆகிய இரு தினங்களும் இடம்பெற்றன. கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இக்கண்காட்சியைத் தொடக்கி வைத்தார்.

கைத்தறித் துணிகள், உள்நாட்டு ஆடைகளின் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பற்றிக் மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்தி இராஜாங்க அமைச்சின் ஆலோசனை, வழிகாட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இவ்வர்த்தக சந்தையில் பெரும் எண்ணிக்கையிலான உற்பத்தி பொருட்கள் அடங்கிய காட்சி கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. கிழக்கு மாகாணத்தின்

குறிப்பாக இப்பிரதேச தொழில் முயற்சியாளர்களினால் தயாரிக்கப்பட்ட கைத்தறி துணிகள், ஆடைகள், உணவுப் பண்டங்கள், தும்பு மூலமான உற்பத்திகள், மட்பாண்டங்கள் என பல்வேறுபட்ட உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு, சந்தைப்படுத்தப்பட்டிருந்தன.










மூன்று மாவட்டங்களை சேர்ந்த பல பிரதேசங்களில் இருந்தும் உற்பத்தி பொருட்கள் கொண்டு வரப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டு இருந்தன.

இங்கு அமைக்கப்பட்டிருந்த அனைத்து காட்சி கூட்டங்களையும் பார்வையிட்ட ஆளுநர் அனுராதா யஹம்பத், உற்பத்திகள் பற்றிய விபரங்களை மிகவும் ஆர்வத்துடன் கேட்டறிந்தார். அத்தோடு கைத்தொழிலாளர்களை உட்சாகமூட்டும் வகையில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்ட அவர் சாரி, சாரம் உள்ளிட்ட கைத்தறித் துணிகள், ஆடைகள் மற்றும் பல பொருட்களையும் கொள்வனவும் செய்தார்.

இச்சமயம் 'உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக குறிப்பிட்ட ஆளுநர், கிழக்கு மாகாணத்தில் கைத்தொழில் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு தாம் முன்னிற்பதாகவும் இத்தொழில்களை நவீன வசதிகளை கொண்டு விருத்தி செய்வதற்கு தேவையான உதவிகள் பெற்றுத்தரப்படும் என்றும் உறுதியளித்தார்.

இந்நிகழ்வில் பற்றிக் மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்தி இராஜாங்க அமைச்சு, கிழக்கு மாகாண சபை மற்றும் மாகாண கிராமிய தொழிற்துறை திணைக்களம், மாவட்ட கைத்தொழில் திணைக்களம் உட்பட மற்றும் பல அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் பலரும் பங்கேற்றிருந்தனர். இக்கண்காட்சியிலும் பொருட்கள் கொள்வனவிலும் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அஸ்லம் எஸ்.மௌலானா...

# பாவேந்தல் பாலமுனை பாறூக் இலக்கியப் பொன் விழா

## பாலமுனை மர்ஹூம் எம்.சீ.அமீர் மண்டபத்தில் இன்று



கிழக்கு மாகாணத்தில் வாழும் இலக்கியவாதிகளுள் பாவேந்தல் பாலமுனை பாறூக்கும் ஒருவராவார். 1970 களில் முனைப்புப் பெற்றிருந்த ஈழத்துப் படைப்பாளிகளில் அதிலும் குறிப்பாக தென்கிழக்கு முஸ்லிம் எழுத்தாளர் வட்டத்துள் குறிப்பிடத்தக்க ஒருவர் இவர்.

கவிதை, குறுங் காவியங்கள், நகைச்சுவைத் துணுக்குகள், கவியரங்குக் கவிதைகள் என பரந்து செல்லும் இலக்கியப் பரப்பின் சொந்தக்காரரான பாறூக் 1954.01.01 பாலமுனையில் பிறந்ததோடு, 1977 இல் அரச வங்கிச் சேவையில் இணைந்து பல பதவி உயர்வுகளையும் பெற்றுக்கொண்டார். இவர் வங்கிச் சேவையிலிருந்து 2013 ஓய்வு பெறும் போது பிரதி முகாமையாளராக பதவி வகித்தார்.

1968 இல் கவிதைத் துறைக்குள் கால் பதித்த இவரது 'பதம்' எனும் முதலாவது கவிதைத் தொகுதி 1987 இலும் இரண்டாவது தொகுப்பான 'சந்தனப் பொய்கை'யினை 2009 இலும் வெளியிட்டு கவிதைத் துறைக்கான தமது பங்களிப்பில் தடம்பதித்தார். இவரது மூன்றாவது வெளியீடான 'கொந்தளிப்பு' குறுங் காவியம் 2010 இல் வெளியானது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் நிர்க்கதியானோரின் கவலைகளை பின்னோக்கு உத்தியின் ஊடாக அசைபோடுவதே கொந்தளிப்பாகும். இந்நூலுக்கு அரச சாகித்திய மண்டலச் சான்றிதழ் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதேநேரம் இவரது நாலாவது வெளியீடு 2011 இல் 'தோட்டுப்பாய் மூத்தம்மா' என்ற தலைப்பில் குறுங்காவியமாகவும் இவரது 5 ஆவது படைப்பான 'எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு' எனும் குறுங்காவியம் 2012 இல் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்க வெளியீடாகவும் வெளியானது. இந்நாட்டில் சுமார் மூன்று தசாப்தங்களாக மக்களை நிர்க்கதியாக்கிய போர்ச்சூழலை மனக்கண்முன் கொண்டு வருவதே இக்காவியமாகும்.

'வலைக்குள் மலர்ந்த வனப்பு' ஆறாவது வெளியீடாக 2017 இல் வெளிவந்ததுடன் 7 ஆவது வெளியீடான 'பாலமுனை பாறூக்கின் மூன்று காவியங்கள்' 2020 இல் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து அதே ஆண்டு பாறூக்கின் எட்டாவது படைப்பான 'மீளப் பறக்கும் நங்கணங்கள்' வெளிவந்தது.

கால தொடரியின் அசைவியலுக்கேற்ப எழுதி வந்த பாலமுனை பாறூக்கின் இலக்கியப் பணியினை கௌரவிக்கும் நோக்கில் மருதமுனை முதல் பொத்துவில் வரையிலான இளம் மற்றும் மூத்த படைப்பாளிகளை உள்ளடக்கிய எழுத்தாளர் வட்டத்தின் முன்னெடுப்பில் 'பாவேந்தல் பாலமுனை பாறூக் இலக்கியப் பொன் விழா' நிகழ்வுகள் இன்று 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு பாலமுனை மர்ஹூம் எம்.சீ.அமீர் மண்டபத்தில் நடைபெறுகிறது.




பாராளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் றவூப் ஹக்கீம், தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம்.அதாஉல்லா, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் றிஷாட் பதியுத்தீன் ஆகியோர் முன்னிலை அதிதிகளாகக் கலந்து கொள்ளும் இந்நிகழ்வு தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழி நுட்பபீட பீடாதிபதி கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீத் தலைமையில் நடைபெறுகிறது

இந்நிகழ்வில் பாவேந்தலுக்கான பொன் விழாக் கௌரவங்களுடன் விழா நினைவு மலரான 'பாவேந்தல் பொன்னேடு' வெளியீட்டு வைக்கப் படுகிறது. நூல் மீதான வெளியீட்டுரையினை எழுத்தாளர், விமர்சகர் எம். அப்துல் றஸாக் நிகழ்த்தவுள்ளார். 'மூன்று நவீன காவியங்கள்' மற்றும் 'மீளப்பறக்கும் நங்களங்கள்' ஆகிய நூல்களின் அறிமுக நிகழ்வும் இடம்பெறவுள்ளன. இவைகளுக்கான உரைகளை முறையே கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் செ.யோகராசாவும் தென் கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் றமீஸ் அப்துல்லாவும் நிகழ்த்தவுள்ளனர். இவ்விழாவின் அறிமுக உரையினையும் வரவேற்புரையினையும் விழாக் குழுத்தலைவரும் இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தேசியத் தலைவருமான ஜெஸ்மி எம்.மூஸாவும் சிறப்புரையினை சட்டத்தரணி ஏ.எம். எம்.அன்சிலும் ஆற்றவுள்ளார்.

நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் பாவேந்தல் பாலமுனை பாறூக்கினால் நடத்தப்பட்ட கவியரங்குகளில் பங்கேற்ற கவிஞர்களுக்கான கௌரவமும் இந்நிகழ்வின் போது இடம்பெறவுள்ளன.

பாவேந்தல் பாலமுனை பாறூக் பொன்விழாக் குழுவினருடன் பாலமுனை மக்களும் ஒன்றிணைந்து அரங்கேற்றும் இந்நிகழ்வில் பிரதேச அரசியல் தலைமைகள், கல்வியியலாளர்கள், இலக்கியவாதிகள், ஊர்ப் பிரபலங்கள் மற்றும் பாவேந்தலின் குடும்பத்தினர் உள்ளிட்ட பலரும் பங்கேற்கவுள்ளனர்.

கிழக்கு மாகாண கலாசார மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் வித்தகர் விருது (2014), இலங்கை அரசின் உயர் இலக்கிய விருதான கலாபூஷணம்(2019) உள்ளிட்ட விருதுகள் பலவற்றின் சொந்தக்காரரான பாலமுனை பாறூக்கின் குறுங்காவியங்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் அனுமதியுடன் கே.சேகர் என்பவரால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளமை பாறூக் சர்வதேச தேடலுக்குள்ளான படைப்பாளி என்பதற்கான சான்று எனலாம்.



ஜெஸ்மி எம்.மூஸா...
(விழாக் குழுத் தலைவர்.
பாவேந்தல் பாலமுனை பாறூக்
இலக்கியப் பொன்விழா)

# பட்டிப்பொங்கல் இன்று



இந்து மக்களின் முக்கிய பெரு நாட்களில் ஒன்றாக விளங்கும் தைப்பொங்கல் தினத்திற்கு மறுநாள் கொண்டாடப்படும் பண்டிகை தான் மாட்டுப் பொங்கல் அல்லது பட்டிப் பொங்கல் பண்டிகை ஆகும். இது கன்றுப் பொங்கல் எனவும் அழைக்கப்படுகிறது. மக்களின் வாழ்வில் ஒன்றிய பசுவுக்கு நன்றி தெரிவிப்பதற்காகவும், பசுக்களில் எல்லாத் தேவர்களும் இருப்பதாலும் பசுக்களை வணங்கி வழிபடும் நாளாக இதனைக் கொண்டாடுகின்றனர்.

இத்தினத்தின் நிமித்தம் மாடுகள் கட்டும் தொழுவத்தினைச் சுத்தம் செய்து கொள்வார்கள். கால்நடைகளை குளிப்பாட்டி சுத்தம் செய்வார்கள். மாடுகளின் கொம்புகள் சீவப்பட்டு பளபளக்கும் வகையில் வண்ணம் பூசி, கூரான கொம்பில் குஞ்சம் அல்லது சலங்கை கட்டிவிடுவார்கள். கழுத்துக்கு தோலிலான வார் பட்டையில் சலங்கை கட்டி அழகு படுத்துவார்கள். திருநீறு பூசி குங்குமப் பொட்டிட்டும் புதிய மூக்கணாங் கயிறு, தாம்புக் கயிறு அணிவித்தும் தயார் செய்வார்கள்.

உழவுக்கருவிகளை சுத்தம் செய்து சந்தனம், குங்குமம் வைப்பார்கள். விவசாயத்தில் பயன்படுத்தப்படும் அனைத்துக் கருவிகளையும் இதேபோல செய்வார்கள். தாம்பாளத் தட்டுகளில் தோட்டம் காடுகளில் விளைந்த பயிர், பச்சைகளை வைத்தும் தேங்காய், பூ, பழம், நாட்டுச் சர்க்கரை என எல்லாம் பூஜைக்காக எடுத்து வைப்பார்கள். தொழுவத்திலேயே பொங்கல் பொங்கி கற்பூர தீபாராதனை காட்டப்படும். இதன் பின் பசு, காளை, எருமை என அனைத்து கால்நடைகளுக்கும் பொங்கல், பழம் கொடுப்பார்கள்.

அந்த வகையில் அன்றைய காலத்தில் கிராமங்களில் மாடில்லாத வீடுகள் கிடையாது. வீட்டில் மாடு வளர்ப்பதால் செல்வம் பெருகும் . காலையில் பசுமாட்டில் விழித்தால் அன்றையநாள் சுபமாக சகல சித்திகளும் கிடைக்குமென்று கூறுவார்கள். சிவனின் வாகனம் என்பதாலும் பசுவை கோமாதா என்று வணங்குகிறார்கள். கோமாதா பூஜை ஆலயங்களில் நடாத்தப்படுவது வழமை. வீடுகள் குடிபோவதற்கு முதல்நாள் வீட்டில் பசுமாட்டைக்கட்டுவதும் வழக்கம்.

ஆலயங்களில் தேரோட்டம் ஆரம்பமாவதற்கு முன்னரும் பசுமாட்டில் விழித்து தீபம் காட்டி உணவு உண்ணக்கொடுத்து வழிபட்டே செய்வார்கள். அப்படி மாடுகள் உழவுத்தொழிலில் மட்டுமல்ல இந்துக்களின் வாழ்வியலில் முக்கியத்துவம் பெறும் ஒரு செல்வமாகும். அத்தகைய மதிப்புள்ள செல்வமான மாடுகள் அன்று உழவுத்தொழிலில் மட்டுமல்ல விவசாயத்தில் மிகவும் கூடுதலான பாகத்தை வகித்தன என்றால் அது மிகையல்ல. உழவில் மட்டுமல்ல சூடு வைத்து விளைந்த நெல்மணிகளை வீட்டுக்கு கொண்டு வருவது வரையில் மாடுகளின் பங்கு அளப்பரியது.



மேலும் பொங்கல் பண்டிகையுடன் தொடர்புடைய மற்றொரு புராணக்கதையும் உள்ளது. அது சிவபெருமான் சம்பந்தப்பட்டது. பொங்கலுக்கு மூன்றாவது நாளான மாட்டுப்பொங்கல் என்பது சிவபெருமானும் அவருடைய வாகனமான நந்தியும் சம்பந்தப்பட்டதாகும்.

புராண கதையின் படி, ஒரு முறை நந்தியிடம் பூமிக்கு செல்லுமாறு சிவபெருமான் கேட்டுள்ளார். தவறாக சொல்லிய நந்தி தினமும் எண்ணெய் மசாஜ் செய்த பிறகு குளித்து மாதம் ஒரு முறை மட்டும் உண்ணுமாறு அங்கே இருக்கும் மக்களிடம் தான் கூறச் சொன்னதாக நந்தியை கூற சொன்னார். ஆனால் நந்தியோ மாதமுறை எண்ணெய் மசாஜ் செய்து குளித்து தினமும் உண்ணுமாறு தவறாக கூறிவிட்டது. இதனால் கோபம் கொண்ட சிவபெருமான் நந்தியை சபித்தார். அது செய்த தவறினால் இனி பூமியில் நெற்பயிர்களுக்கு பஞ்சம் ஏற்படும் என கூறினார்.

இனி அது என்றுமே பூமியில் வாழ்ந்து மக்களுக்கு அவர்களின் நிலத்தை உழுது கொடுக்க வேண்டும் என அவர் சாபமளித்தார். அதனால் தான் மாட்டுப் பொங்கலுடன் மாடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. பொங்கலைத் தொடர்ந்து வருவது மாட்டுப் பொங்கல்.

இப்பண்டிகையின் நிமித்தம் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் காளை பிடிக்கும் ஜல்லிக்கட்டு விளையாட்டுக்களும் இடம்பெறுவது வழமை. இவ்வாறு சிறப்புக்கும் மகத்துவத்துகும் உரிய பட்டிப்பொங்கல் பண்டிகையை இன்று இந்து மக்கள் கொண்டாடுகின்றனர்.

# கல்வியின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பம்



## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனினால் திட்டங்கள் முன்னெடுப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனினால் பல்வேறு திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பு மாவட்டமானது கடந்த 30 வருட காலமாக யுத்தம், சுனாமி உள்ளிட்ட இன்னோரன்ன அனர்த்தங்களினால் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டமாக விளங்குகின்றன. இவற்றின் விளைவாக உயிர்களையும், உடமைகளையும் இழந்த மக்கள் பொருளாதார ரீதியாக மட்டுமல்லாது, கல்வி ரீதியாகவும் பாரிய இழப்புக்களை சந்தித்து கல்வியிலும் பின்தங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இம்மாவட்டத்தின் கல்வி நிலை படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்ற போதிலும் கல்வியின் ஊடாகவே பாரிய முன்னேற்றத்தை அடைய முடியும். அதனால் இம்மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் காணப்படும் வளப்பற்றாக் குறையும், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் பற்றாக்குறையும் நிவர்த்தி செய்யப்படுவது இன்றியமையாத தேவையாகும்.

இம்மாவட்டத்தின் தமிழ் சமூகம் மென்மேலும் உயர்ச்சியடைந்து பொருளாதார ரீதியாகவும் ஏனைய துறைகளிலும் பாரிய முன்னேற்றத்தை அடைய வேண்டுமாயின் அவற்றிற்கெல்லாம் மூல காரணியாக விளங்கும் கல்வியில் பாரிய மாற்றம் ஏற்பட்டால் மாத்திரமே அவை சாத்தியமாகும். இந்த நிலைப்பாட்டை இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் கொண்டுள்ளார். இந்தப் பின்புலத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்களை அவர் முன்னெடுத்து வருகின்றார். இந்த அபிவிருத்தித் திட்டங்கள் பல மில்லியன் ரூபாய்கள் பெறுமதியானவை.

குறிப்பாக இம்மாவட்ட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் புதிய தொழில்நுட்ப கற்கைகள் மற்றும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை விஸ்தரிக்கும் நோக்கில் கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட கதிரவெளி விக்னேஸ்வரா தேசிய பாடசாலைக்கு 53.30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய மூன்று மாடி உயர் தொழில்நுட்ப பீடத்திற்கான கட்டட தொகுதி அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கான ஏற்பாடுகளை இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் முன்னெடுத்துள்ளார். நாடெங்கிலும் 48 தொழில்நுட்ப பீடங்களை அமைக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கையின் கீழ் இந்நடவடிக்கை இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேநேரம் இம்மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களும் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு பின்தங்கிய பாடசாலையின் நிருவாகமும், மாணவர்கள் உட்பட கல்விசார் சமூகமும் இதனை பெற்றுக்கொடுத்தமைக்காக இராஜாங்க அமைச்சருக்கும் அரசாங்கத்திற்கும் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறையுடன் செயற்பட்டுவரும் இராஜாங்க அமைச்சர் அண்மையில் பாடசாலை நிகழ்வொன்றில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்



மற்றும் பௌதீக வள பற்றாக்குறை அதிகமாகக் காணப்படும் கல்வி வலயத்தில் தேவை முன்னிலைப்படுத்தல் அடிப்படையில் பாடசாலைகளை இனங்கண்டு கல்குடா மற்றும் மண்முனை மேற்கு போன்ற கல்வி வலயங்களில் காணப்படும் பல பாடசாலைகளுக்கு தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் ஊடாகவும் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை இராஜாங்க அமைச்சர் முன்னெடுத்துள்ளார். இதன் பயனாகப் பல பௌதீக வள பற்றாக்குறைகளும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

மண்முனை மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட அம்பிளாந்துறை கலைமகள் பாடசாலையில் நூலக வசதி காணப்பட்டதை அடுத்து, மட்டக்களப்பு மாவட்டத்திற்கு முதலாவது தொலைக்காட்சி மற்றும் புத்தகங்களை உள்ளடக்கிய பேரூந்து நூலகம் அம்பிளாந்துறை கலைமகள் கல்லூரிக்கு கிடைக்கப் பெறவும் இராஜாங்க அமைச்சர் ஏற்பாடு செய்தார்.

பேரூந்து நூலகங்களைப் பாடசாலைகளுக்கு கையளிக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவிடம் இராஜாங்க அமைச்சர் முன்வைத்த முன்மொழிவின் பயனாக குறித்த நூலகப் பேரூந்து கிடைக்கப் பெற்றுள்ளது. அதனால் அப்பகுதி மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய போது, 'ஒவ்வொரு மாணவனுக்கும் நவீன தொழில்நுட்ப வாழ்க்கையில் முன்னேறுவதற்கான தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். வெறும் பரீட்சைகள் மாத்திரம் மாணவர்களின் வாழ்க்கையை தீர்மானிக்க கூடாது. ஒவ்வொரு மாணவனுக்கும் அவரவர் துறை சார்ந்து வழிகாட்டலுடன் நம்பிக்கை ஊட்டப்பட வேண்டும். இது ஆசிரியர் ஒவ்வொருவரினதும் கடமையாகும். ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் தான், மாணவர்களது, இளமைக்காலத்தை சிற்பமாக செதுக்கி, அவர்களது தனித்திறனை கண்டுணர்ந்து, அதை ஊக்கப்படுத்தி, வாழ்க்கையில் வெற்றி பெற வைக்க வேண்டியவர்களாவர். ஆரம்ப பள்ளி ஆசிரியராக இருந்தாலும் சரி, உயர் நிலை பள்ளி ஆசிரியராக இருந்தாலும் சரி, மேல் நிலைப்பள்ளி ஆசிரியராக இருந்தாலும் சரி, மாணவர்களது ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும், ஆசிரியர்கள் தங்களது அறிவால், நல்லொழுக்கத்தால், மாணவர்களை ஈர்த்து, மாணவர்கள் தங்களை தாங்களே வடிவமைத்துக்கொள்ள ஆசிரியர்கள் வழிகாட்டியாக இருக்கிறார்கள். அதனால் மாணவர்களது முதல் நம்பிக்கை ஆசிரியர்களும், பெற்றோர்களும் தான் என்பதே உண்மை என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு வருடமும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தேர்வுக்கு செல்லும்போது அந்த தேர்வில் 3 லட்சம் மாணவர்கள் மாத்திரமே உயர் தர வகுப்புகளுக்கு தெரிவாகின்றனர். ஏனையோர் கல்வி நிலையை தொடர முடியாத நிலைக்கு உள்ளாகின்றனர். மாணவர்களின் எதிர்கால முன்னேற்றத்துக்காக அரசினால் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போதும் அவை சிறந்த கொள்கை திட்டத்தின் கீழ் கடந்த காலத்தில் பின்தங்கிய பிரதேசங்களுக்கு விஸ்தரிக்கப்படவில்லை. எதிர்காலத்தில் அனைத்து மாணவரும் ஏதேனும் ஒரு துறையில் அரசாங்கத்தின் உதவியோடு பட்டப்படிப்பு வரை கல்வியைத் தொடர வழி வகுக்கப்படும். நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய வழிகாட்டலுடன் மாணவர் சமுதாயத்தினருக்கு தொழிற்கல்வி மற்றும் உயர் தொழில்நுட்ப ஆர்வமுள்ளவர்களுக்கு மின்னியல், இலத்திரனியல், பொருளியல் ஆகிய துறைகளில் கற்கைநெறிகளை மேம்படுத்த கல்வி அமைச்சின் உயரிய நோக்கத்துடன் உயர் தொழில்நுட்ப பீடம் (கட்டிட தொகுதி) முன்னெடுக்கப்படுகின்றது. இக்கற்கை நெறிகள் ஊடாக மாணவர் சமுதாயத்தினருக்கு சர்வதேச ரீதியிலான உயர் தொழில்நுட்ப தொழில் வாய்ப்புக்களை எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய கல்வித் தகைமையைப் பெற்றுக்கொடுப்பதை இலக்காகக் கொண்டு இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்திற்கு அமைவாக மாணவர்கள் மத்தியில் தொழில்நுட்ப கல்வியை மேம்படுத்தும் நோக்கில் நிறுவப்படவுள்ள தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய உயர் தொழில்நுட்ப பீடங்களின் ஊடாக மாணவர் மத்தியில் மின்னியல், இலத்திரனியல், பொறியியல் துறை சார்ந்த நவீன தொழில்நுட்பத் திறனை கல்வி நடவடிக்கைகளுடன் மேம்படுத்திக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கப் பெற உள்ளன. இக்கற்கை நெறிகளின் ஊடாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெறும். பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கு பட்டதாரிகளை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனால் ஆளணி பற்றாக்குறையும் மிக விரைவாக நிவர்த்திக்கப்படும்

மட்டக்களப்பு மாவட்டம் கல்வியால் உயர்ச்சி பெற வேண்டும். அதுவே எனது பேரவா. அதற்காக என்னாலான அனைத்து முயற்சிகளையும் ஒத்துழைப்புக்களையும் நான் வழங்குவேன் என்றும் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் அந்த வைபவத்தில் குறிப்பிட்டுக் கூறியுள்ளார். கல்வியின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் புத்தெழுச்சியை ஏற்படுத்த இராஜாங்க அமைச்சர் கொண்டிருக்கும் ஆர்வத்தையும் எதிர்பார்ப்பையும் இந்த உரையும் வெளிப்படுத்தி நிற்கின்றது என்றால் அது மிகையாகாது.

**கல்லடி குறூப் நிருபர்...**

# மிஹிந்தலையில் பன், பனையோலை கைவினைப் பொருட்கள் உற்பத்திக் கிராமம்



அநுராதபுரம் மிஹிந்தலை பிரதேச செயலக பகுதியில் பன் மற்றும் பனை ஒலைகளை கொண்டு பொருட்கள் உற்பத்தி செய்யும் குனுராகம கிராமிய கைவினைப் பொருட்கள் தொழிலாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவின் ஏற்பாட்டில் அவர்களுக்கு உதவிகளும் உபகரணங்களும் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த கைவினைப் பொருட்கள் தொழிலாளர்களின் வேண்டுகோளுக்கு அமைய பன் மற்றும் பனை ஓலை தொடர்புடைய உற்பத்திகளை மேற்கொள்வதற்குரிய பட்டறை அமைப்பதற்கு தேவையான சீமெந்து, கல், மணல் மற்றும் கல்நார் உள்ளிட்டவைகளுக்கு நிதி உதவியும் வழங்கப்பட்டன. பன் தொடர்புடைய உற்பத்திகளை மேற்கொள்வதற்கு தேவையான பன் பை, அச்சிச்சு வழங்க, பன் வகைகளை தயாரிக்கத் தேவையான உபகரணத் தொகைகள் மற்றும் பன் நாணல் அடிக்க உபயோகிக்கப்படும் இயந்திரங்களும் இத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.



"கம சமக பிலிசதரக் தற்போதய அரசாங்கத்தின் கிராமத்திற்கு ஒரு வேலைத்திட்டத்தின் கீழ் 'மிஹிந்தலை குனுராகம கிராமத்தைப் பன் உற்பத்தி கிராமமாக மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குறித்த கிராம மக்கள் விடுத்த வேண்டுகோளின் பேரில் இராஜாங்க அமைச்சர் விஜயம் செய்தார். அங்கு மக்களை நேரில் சந்தித்த இராஜாங்க அமைச்சர், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து கொண்டார். அதன் போது மக்கள் தங்களது உற்பத்திகளுக்கு உரிய சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதை இராஜாங்க அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்ததோடு இதன் காரணத்தினால் தமது பிள்ளைகள் பன் உற்பத்தியில் ஈடுபடுவதற்கு ஆர்வம் காட்டாதிருப்பதாகவும் குறிப்பிட்டனர். இச்சமயம் இராஜாங்க அமைச்சர் பன் உற்பத்தியில் ஈடுபடும் பெண்களின் உற்பத்திகளையும் பார்வையிட்டார்.

குறித்த கைவினைப் பொருட்கள் தொழிலாளர்களின் உற்பத்திகளை மென்மேலும் அதிகரிக்கும் வகையில் புதிய பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் புதிய தொழிலாளர்களை இத்துறையில் இணைத்துக் கொள்வதற்கும் அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதற்கும் உற்பத்திக்கு உரிய சந்தை வாய்ப்பைப் பெற்றுத்தருவதாகவும் இராஜாங்க அமைச்சர் தொழிலாளர்களிடம் இச்சமயம் உறுதியளித்தார்.

அதனூடாக பிரம்பு, பித்தளை, களிமண், மரத்தளபாடங்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க குனுராகம கிராமிய கைத்தொழிலாளர்களின் கைவினைப் பொருட்கள் உற்பத்தியை விருத்தி செய்வதற்கு தேவையான வசதி வாய்ப்புக்களை சில மாதங்களினுள் பெற்றுத்தருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாணல் பாய், மகல் கலால, சுவர் அலங்காரம், குடை கம்பலம், பண முதுகுப்பை, மதிப்புமிக்க பெட்டிகள், சேர்த்தல் பயணப்பொதி, தினசரி தேக்கரண்டி அழுக்கு க்ஸ்பூன், தண்ணீர் பாட்டில்கள் பை, பனை ஓலைகள், பை வகைகள் மற்றும் பிளாஸ்டிக் பெல்ட் பட்டைகள் கொண்ட பை உற்பத்திகளை இக்கிராமத்தில் கைவினை பொருட்கள் தொழிலாளர்கள் உற்பத்தி செய்கின்றார்கள். குறித்த உற்பத்திகளை வெற்றிகரமாக மேற்கொண்டு செல்வதற்கும், அவற்றின் சந்தை தரத்தை மேம்படுத்தி தேவைகளுக்கு ஏற்ப திருப்திகரமாக உற்பத்திகளை மென்மேலும் மேற்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

ஆகவே குனுராகம கிராமிய கைவினைப் பொருட்கள் உற்பத்தித் தொழிலாளர்களை இராஜாங்க அமைச்சர் சந்தித்ததன் ஊடாக அவர்கள் மத்தியில் புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஏற்பட்டுள்ளன. இதன் ஊடாக இத்தொழில் துறையில் புதிய திருப்பம் ஏற்படும் என அவர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

**மதார் தம்பி ஆரிப்...**
(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## தொழிற்சங்க போராட்டத்தால்... (03ஆம் பக்கத் தொடர்)

ஒரு நாட்டுக்கு செல்ல வேண்டும் என்று தோன்றுகிறது என்றனர்.

மற்றுமொருவர் கருத்து தெரிவிக்கையில் தொழிற்சங்க போராட்டம் ஒன்று ஆரம்பிப்பது என்றால் அதற்கு ஒரு முறையிருக்க வேண்டும் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக மக்களை இவ்வாறு பலிகடாவாக்கக்கூடாது. இன்று பிள்ளைகளை அழைத்து வந்தவர்கள் எவ்வாறு செல்வார்கள்? என தனது ஆதங்கத்தை தெரிவித்தார்.

புகையிரத நிலைய அதிபர்கள் சங்கத்தின் உப தலைவரைப் பணி இடைநிறுத்தம் செய்ய புகையிரத பொது முகாமையாளரால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். அதனடிப்படையில் நேற்று பிற்பகல் நிலைய அதிபர்கள் தமது கடமைகளில் இருந்து விலகியுள்ளனர். வேலை நிறுத்தத்தால் சமிக்ஞைகள் இல்லாததன் காரணமாக புகையிரத பயணத்தினை தொடர முடியாது என புகையிரத நிலைய ஊழியர்கள் தெரிவித்தனர்.

## முப்படைகளின் இடைநிலை... (03ஆம் பக்கத் தொடர்)

கடற்படை மற்றும் விமான நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் நாயகம் கொமடோர் பூஜித சுகததாச, பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி அலுவலகத்தின் பயிற்சி மற்றும் கோட்பாட்டு பணிப்பாளர் பிரிகேடியர் சுரேஷ் பெரேரா, கருத்தரங்கின் அமர்வுகளின் தலைவர்கள், பேச்சாளர்கள், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் முப்படையைச் சேர்ந்த இடைநிலை அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## இலங்கையில் நிலவும்... (03ஆம் பக்கத் தொடர்)

ஆதரவையும் வெளிப்படுத்தி வருகின்றன எனவும் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு சீனா தனது சக்திக்கு ஏற்றவாறு உதவிகளை வழங்கி வருகின்றது என்றும் மேலும் எதிர்காலத்திலும் அதனைத் தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

# எதிர்வரும் நாட்களில் எரிபொருள் விலை மேலும் அதிகரிக்கலாம்



நாட்டுக்கு எதிர்வரும் நாட்களில் எரிபொருட்களைப் பெற்றுக் கொள்ளும் போது சர்வதேச விலையை விடவும் அதிக தொகை செலுத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஐ.ம.ச பாராளுமன்ற உறுப்பினர் கபீர்ஹாசிம் இவ்வாறு தெரிவித்தார்.

நாணயக் கடிதங்கள் வழங்கப்படாமையினால் கொழும்பு துறைமுகத்தில் உள்ள இரண்டு எரிபொருள் கப்பல்களுக்குத் தாமதக் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் கட்டணம் செலுத்தப்படும்வரை நாட்டுக்கு மருந்து பொருட்களை விநியோகிக்கப் போவதில்லையென சில இந்திய மருந்து நிறுவனங்கள் அறிவித்துள்ளதாகவும் கபீர் ஹாசிம் எம்பி குறிப்பிட்டார்.

துறைமுகத்திற்கு வெளியே இரண்டு கப்பல்கள் எரிபொருளை இறக்க முடியாமல் உள்ளன. டொலர் பற்றாக்குறை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

டொலர் கையிருப்பில் உள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கூறுகின்றார். அவ்வாறாயின் ஏன் அந்த கப்பல்களில் உள்ள எரிபொருளை இறக்க முடியாமல் உள்ளது.

எனவே, குறித்த கப்பல் நிறுவனங்களிடம் மீண்டும் இலங்கைக்கு எரிபொருளைக் கோரும்போது அதிக அளவில் கட்டணங்கள் அறவிடப்படும். இலங்கைக்கு எரிபொருட்களைக் கொண்டு வருவதற்கான செலவு அதிகரிப்பதன் காரணமாக அவர்கள் கட்டணத்தை அதிகரிப்பர். இதன் காரணமாகச் சர்வதேச விலையை விடவும் அதிக விலைக்கு நாட்டுக்கு எரிபொருளைக் கொண்டு வர நேரிடும் என அவர் தெரிவித்துள்ளார்.

# திருமண வீட்டில் நடனமாடி மயங்கி விழுந்த நபர் உயிரிழப்பு

பாணத்துறை, கொரகான பகுதியில் ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற திருமண நிகழ்வில் நடனமாடிக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

வாதுவ, பொதுபிடி பகுதியை சேர்ந்த 24 வயதுடைய நிஷான் லக்ஷான் ஜயரத்ன என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

சம்பவ தினத்தன்று உயிரிழந்த இளைஞர் தனது நண்பியின் திருமண நிகழ்வில் கலந்துகொண்டுள்ளார். இதன்போது ஏனைய நண்பர்களுடன் நடனமாடிக் கொண்டிருக்கையில் திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

பின்னர் பாணத்துறை வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். இதன் பின்னரே அவர் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன் பி.சி.ஆர் பரிசோதனைகளை முன்னெடுக்கவும் , மரண விசாரணைகளை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிசார் மேலும் குறிப்பிட்டனர்.

## தேசிய பாதுகாப்பு...

வெளியிட்டுள்ள சரத்வீரசேகர, ஐந்து மணியளவிலேயே சம்பவம் குறித்து தெரிவிக்கப்பட்டதால் சந்தேநபரை கைதுசெய்வதற்காக சிசிடிவியில் மூன்று மணிக்கு பின்னர் பதிவான காட்சிகளையே பொலிஸார் விசாரணை செய்தனர் என தெரிவித்துள்ளார்.

கொழும்பில் மருத்துவமனையொன்றில் கைக்குண்டு மீட்கப்பட்டது போன்ற சம்பவமாக இது இருக்கலாம். பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கத்தின் முன்னேற்றத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் முயற்சியாக கூட இருக்கலாம் என சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தை செயலிழக்கச்செய்வதன் மூலம் இலங்கையை பாதுகாப்பற்ற இடமாக சித்தரிப்பதற்கு முயலும் தனிநபர் அல்லது குழுவினரை கைதுசெய்வதற்கான முயற்சிகளை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர் என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

## சதொச மூலம் சலுகை...

1 கிலோ இடியப்ப மா, 500 கிராம் நெத்தலி, 400 கிராம் நூடில்ஸ், 400 கிராம் உப்பு, 2 தேங்காய்ப்பால் பக்கெற்(330 மி.லீ.பக்கெற்), 100 கிராம் மிளகாய்த் தூள், 100 கிராம் மஞ்சள் தூள், 100 கிராம் STC தேயிலை, 80 கிராம் பொடி லோஷன், 100 கிராம் சதொச சந்தன சவர்க்காரம், 100 மி.லீ. கை கழுவும் திரவம், 90 கிராம் சோயா மீற், சதொச TFM சலவை சவர்க்காரம் என்பன இப்பொதியில் அடங்கியிருக்கும்.

இதன் மூலம் நுகர்வோர் 1750 ரூபா நிவாரணத்தைப் பெற முடியும் என அமைச்சர் கூறினார்.

லங்கா சதொச விற்பனை நிலையங்கள் இல்லாத பிரதேசங்களில் உள்ள மக்கள் 1998 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து தமது பொதிகளை வீடுகளுக்குப் பெற முடியும் என அமைச்சர் தெரிவித்தார். ஒரு கிலோகிராம் நாட்டு அரிசியின் விலையை 105 ரூபாவுக்கு குறைவாகவும், சுப்பிரி சம்பா ஒரு கிலோகிராம் 130 ரூபாவுக்கு குறைவாகவும் இந்த ஆண்டு இறுதி வரையில் பராமரிக்கும் பொறுப்பை லங்கா சதொச மேற்கொள்ளும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோகிராம் பயறு 225 ரூபாவுக்கு வழங்குவதாகவும் உறுதியளித்தார். விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோகிராம் பயறு 450 ரூபாய்க்கு பெற்றுக்கொள்ளுமாறு மாவட்ட செயலாளர்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியதாக அமைச்சர் கூறினார்.

பயறு 225 ரூபாவுக்கு சதொச விற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்குமெனவும் அவர் குறிப்பிட்டார்.

## 500 கொள்கலன்கள்...

ஒரு கிலோகிராம் நாட்டரிசி 105 ரூபாவுக்கு அதிகமாக விற்பனை செய்யப்பட மாட்டாது என தாம் வாக்குறுதி வழங்குவதாகவும் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

சம்பா ஒரு கிலோகிராம் 130 ரூபாவுக்கு அதிகரிக்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு சதொச ஊடாக குறைந்த விலையில் அரிசி விநியோகிக்கப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன அறிவித்துள்ள போதிலும், ஒரு கிலோ கிராம் சம்பா அரிசி 165 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக புறக்கோட்டை சந்தையின் சில்லறை விலையை மேற்கோள் காட்டி மத்திய வங்கி அறிவித்துள்ளது. அத்துடன் ஒரு கிலோகிராம் சிவப்பரிசி 155 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது. தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் இந்த வாரம் ஒரு கிலோகிராம் சம்பா அரிசி 167 ரூபா 50 சததத்திற்கும் சிவப்பரிசி 140 ரூபாவுக்கும் மொத்த விற்பனை அடிப்படையில் விநியோகிக்கப்பட்டதாக மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

## தற்காலிகமாக தங்கியிருப்போர்...

நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த பதிவு நடவடிக்கைகளுக்காக பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 76 ஆவது அத்தியாயத்துக்கு அமைய விண்ணப்பம் ஒன்று தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், நேற்றுமுதல் வழங்கப்பட்டுவரும்அதனை இன்று சனிக்கிழமை அல்லது நாளை ஞாயிற்றுக்கிழமையில் பெற்று பூர்த்தி செய்து பொலிஸாருக்கு வழங்குமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ மேலும் குறிப்பிட்டார்.

' இந்த தற்காலிக வதிவாளர்களை பதியும் திட்டம் மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதை நோக்ககாக கொண்டது.

நேற்று ( 14) முதல் மூன்று நாட்களுக்கு நீங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள வீதிகள் ஊடாக பொலிஸ் பிரஜைகள் பிரிவின் அதிகாரிகள் வருவார்கள். அவர்களின் கைகளில் தற்காலிக வதிவாளர்களை பதிவு செய்யும் விண்ணப்பம் இருக்கும். அவற்றை பெற்று பூர்த்தி செய்து கொடுக்கவும். அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் இதற்கென விஷேட கரும பீடம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அங்கு சென்று ஒரு விண்ணப்பத்தினை பெற்று பூர்த்தி செய்து கொடுக்க முடியும்' என தெரிவித்தார்.

இந்த பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் யாரின் தகவல்கலைப் பெற்றுக் கொள்ள பொலிஸார் எதிர்ப்பார்க்கின்றனர் என்பது தொடர்பிலும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ர்சர் நிஹால் தல்துவ விளக்கினார்.

' நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பலர் கொழும்புக்கு வந்து தங்கியுள்ளனர். கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அதிகார எல்லைக்கு உட்பட்ட அதாவது கொழும்பு மாநகர சபையின் கீழ் வரும் பகுதிகளில், நிரந்தர வதிவாளர்களின் வீடுகளில், வர்த்தக நிலையங்களில், நிறுவனங்களில், அரச மற்றும் தனியார் கட்டுமான வளாகங்களில், தங்கியிருக்கும் அனைத்து தற்காலிக வதிவாளர்களையும் பதிவு செய்ய வேண்டும் ' என தெரிவித்தார். தேசிய பாதுகாப்பு மற்றும் குற்றங்களை தடுத்தல் ஆகியனவே இந்த பதிவின் நோக்கம் எனவும் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ கூறினார்.

## அதிவேக நெடுஞ்சாலை...

ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு வருவாய் 21 சதவீதம் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் மாத்திரம் கடந்த ஆண்டு 4.5 பில்லியன் ரூபா ஈட்டப்பட்டுள்ளது.

## ரயில் நிலைய அதிபர்கள்...

ஆரம்பித்திருந்த 24 மணிநேர தொழிற்சங்க நடவடிக்கை நேற்று முன்தினம் நள்ளிரவு நிறைவடைந்தது. இந்த நடவடிக்கை காரணமாக பொது போக்குவரத்தை பயன்படுத்தும் மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர். இந்த நிலையில் ரயில் நிலைய அதிபர்கள் மீண்டும் அவசர தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையால் ரயில் பயணிகள் மீண்டும் நிர்க்கதியாகியுள்ளனர்.

## 13ஆவது திருத்தம் தமிழருக்கு ...

தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 13ஆம் திருத்தத்தை அமல்படுத்த வேண்டுமெனக் கோரி மிக மோசமாக ஆவணம் தயாரிக்கப்பட்டு , அதன் மூலம் சுயநிர்ணய உரிமையை தமிழ் மக்கள் அனுபவிக்கலாம் என கூறுமளவுக்கு இந்த துரோகத்தனம் போகின்றது.

புதிய அரசியலமைப்பு பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்படுகின்ற பொழுது 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த கோருவது இனப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டதாக உலகத்துக்கு காட்டும் நடவடிக்கையே ஆகும்.

இந்த விடயத்தை நாம் ஆழமாகப் பார்க்க வேண்டும். நாம் மீண்டும் மீண்டும் கூறுவதென்றால் இந்திய முகவர் அமைப்புக்கள் 12 வருடங்களாக மக்களிடம் பொய் சொல்லியதை இன்று உணரக்கூடியதாக உள்ளது. 13ஆம் திருத்தத்திற்குள் தமிழ் கூட்டமைப்பு முடக்குவதாக 12 வருடத்துக்கு முன் நாங்கள் சொன்ன பொழுது மக்கள் அதனை நம்பவில்லை. இன்று அதனை வெளிப்படையாக நிரூபிக்கும் வகையிலேயே காரியங்கள் நடைபெறுகின்றன. ஒரு தேர்தல் முடிவடைந்து இன்னொரு தேர்தல் நடக்க இன்னும் சில வருடங்கள் இருக்கும் நிலையில் இலங்கை முகவர்கள் இந்திய முகவர்கள் இணைந்து 13வது திருத்தத்தை ஏற்றுக் கொள்கின்ற நிலை உருவாகியிருக்கின்றது.

இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆணையை பெற்ற தமிழ் தரப்பும் 13ஆம் திருத்தத்தையும் ஒற்றையாட்சியையும் ஏற்றுக் கொண்டு இருக்கின்றார்கள்.

இதற்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மக்களை அணிதிரட்ட முடிவெடுத்து இருக்கின்றது. அந்த வகையிலே எதிர்வரும் ஜனவரி 30ஆம் திகதி போராட்டம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ள இருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் இதனைக் கொண்டு செல்ல இருக்கின்றோம். இதனை முதற்கட்டமாக யாழ்ப்பாணத்தில் செய்ய இருக்கிறோம்.

இதனை கிராம ரீதியாகவும் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். எமது கட்சி உறுப்பினர்கள் மூலம் கிராமம் கிராமமாக சென்று மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த உள்ளோம். தமிழர்களின் உரிமைக்காக தொடர்ந்தும் உறுதியாக இருக்கின்ற அனைத்து மக்களையும் அரவணைத்து இதனை நாங்கள் மேற்கொள்வோம் என்றார்.

## கடந்த இருவாரங்களில் கொவிட்...

ஒமிக்ரோன் திரிபானது மிக இலகுவாக பரவக்கூடியது. அறிகுறிகள் குறைந்துள்ள போதிலும், பெரும்பாலானோருக்கு அந்த திரிபு தொற்றக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பி.பீ.ஜயசுந்தர...

ஜனாதிபதியின் புதிய செயலாளராக காமினி செனரத் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## இதுவரை 14 பேரிடம்...

சம்பவத்துடன் தொடர்புடைய சகல நபர்களுக்கு எதிராக தகுதி தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

பொரளை பொலிஸாரினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தேவாலய வளாகத்தை அண்மித்த பகுதிகளில் இருந்து பெறப்பட்ட சி.சி.டி.வி காட்சிகள் சட்டத்திற்கு உட்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் ஆதாரங்கள் பதிவு செய்யும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் தொடர்பாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் இதுவரை 14 வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முறைமைகள் நிபுணர்களின் உதவியுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் மா அதிபர் விக்கிரமரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

## தவழ்ந்துவிட்டு எழுந்து ...

செயற் குழுக் கூட்டம் கட்சியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சியின் பதிவின் பின்னர் இன்று முதலாவது செயற்குழு கூட்டம் நடைபெற்றது. மக்கள் பொருளாதார ரீதியாகப் பலம் இழந்து காணப்படுகின்றார்கள். இந்த நிலையில் நாங்கள் எந்த அளவுக்கு கட்சி என்ற ரீதியில் மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது சம்பந்தமாக பேசியுள்ளோம். அந்த வகையில் வீட்டுத்தோட்டம் காளான் வளர்ப்பு பற்றி ஆராய்ந்தோம். எங்களால் முடிந்த புலம்பெயர் உறவுகளுடன் இணைந்து மக்களுக்கு பொருளாதார ரீதியாக உதவி செய்ய முடியும் என்று பேசியுள்ளோம்.

தவழ்ந்துவிட்டு தற்பொழுது எழுந்து நிற்கும் கட்சியாக நாங்கள் இருக்கின்றோம். அடிமட்டத்தில் மக்களின் ஆதரவை நாங்கள் உறுதி செய்ய வேண்டும். அடிமட்டத்தில் மக்களிடம் வேலை செய்ய வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதேவேளை தலைவர்கள் மூத்தவர்களின் அனுபவங்களும் அறிவும் அரசியல் ஞானமும் இளைஞர்களின் வீரியமும் சேர்ந்து எமது கட்சியைக் கொண்டு நடத்தும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. கொரோனா, பாராளுமன்ற நடவடிக்கைகள் காரணமாக கடந்த ஒரு வருடத்தில் எமது கட்சியின் செயற்பாடுகள் குறைந்தளவிலேயே நடந்திருந்தது. வேகமாக கட்சியின் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்

இதுவரை காலமும் நாங்கள் கூட்டணி என்ற வகையிலே ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டோம். ஒவ்வொரு பங்காளிக் கட்சியும் தம்மை பலப்படுத்த வேண்டும். பின்னர் தேர்தல் காலத்தில் எல்லோரும் சேர்ந்து பொதுச் சின்னத்தில் முன்னிறுத்தி முகம் கொடுக்க வேண்டும். எமது பங்காளிக் கட்சிகளை நாங்கள் பாராட்ட வேண்டும்.எமது கட்சிக்கு முன்னுரிமை அளிப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். அதனால் அவர்களுடன் இணைந்து செயற்படுவது இலகுவாக உள்ளது என்றார்.

தமிழ் கட்சிகள் பொதுவாக கூட்டிணைந்து போட்டியிடுவது தொடர்பில் கேள்வி எழுப்பிய போது, வஞ்சகம் இல்லாத நிலையில் ஒவ்வொரு கட்சியும் முன்வந்தால் இணைந்து செயற்படலாம். உள்ளே ஒரு காரணத்தை வைத்து கொண்டு சேர்ந்து செல்வோம் என்று கூறிக்கொண்டு இறுதி நேரத்தில் வெளியில் தள்ளுவதை ஏற்கமுடியாது. எல்லோரும் சேர்ந்து செயற்பட முடியும் என்றால் அதனை நான் வரவேற்கின்றேன். ஆனால் அதற்கு பல சிக்கல்கள் இருக்கின்றன என்றார்.

## மைத்திரிபால சிறிசேன...

புரிந்திருக்கும் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தில் இருக்க விருப்பமானவர்கள் தொடர்ந்து இருக்கலாம். போக வேண்டுமானவர்கள் போகமுடியும். அரசாங்கத்திற்குள் இருந்து அரசாங்கத்திற்கு எதிராக சதி செய்யாமல் ஆளும் தரப்புடன் நேரடியாக கலந்துரையாடல் மூலம் முடிவெடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அடுத்த மூன்று ஆண்டுகள் மிகவும் முக்கியமானவை என்றும், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற பாடுபட வேண்டுமே தவிர, ஆதாரமற்ற விமர்சனங்கள், குற்றச்சாட்டுகள், அறிக்கைகள் ஆகியவற்றில் நேரத்தை வீணடிக்க முடியாது என்றும் அவர் கூறினார். எதிர்க்கட்சிகளின் கூட்டணிகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், எதிர்க்கட்சிகள் எந்த கூட்டணிகளை அமைத்தாலும், புத்திஜீவிகள் எதிர்கட்சியில் உள்ளவர்களைப் பற்றி நன்கு புரிந்து கொண்டுள்ளனர், நாட்டு மக்களின் நலனுக்காக அவ்வாறு கூட்டணி அமைத்தால், அது ஆசீர்வதிக்கப்படும். அரசாங்கம் செய்வது தவறு எனில் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்காமல் உரிய குற்றச்சாட்டிற்கு மாற்று வழிகளை முன்வைக்க வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

(பா)

## உண்மைகளை மறைக்க...

தெரிவித்தார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தெரிவித்த அவர்,

முஸ்லிம் அடிப்படைவாதிகளை குற்றவாளிகளாக காட்டி விட்டு பொறுப்பிலிருந்து எவரும் தப்பித்து விட முடியாது அதன் பின்னணியில் செயற்பட்ட சூத்திரதாரிகளை வெளிக் கொணர்ந்து அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் பேராயர் தெரிவித்தார்.

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று 1000 தினங்கள் நிறைவடையும் நிலையில் நேற்றைய தினம் தேவத்தையிலுள்ள இலங்கை மாதா பெசிலிக்கா பேராலயத்தில் விசேஷ மத வழிபாட்டு நிகழ்வொன்று நடைபெற்றது.

கத்தோலிக்க ஆயர் பேரவையின் ஏற்பாட்டில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்ற இந்த வழிபாட்டு நிகழ்வுகளில் நாட்டின் அனைத்து மறை மாவட்டங்களையும் சேர்ந்த ஆயர்கள், குருக்கள் அருட் சகோதரிகள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்த மத வழிபாட்டு நிகழ்வில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் மரணமடைந்த மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களும் கலந்துகொண்டதுடன் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தமது மறையுரையில் மேலும் தெரிவிக்கையில்;

ஈஸ்டர் குண்டு தாக்குதல்கள் இடம்பெற்று ஆயிரம் தினங்கள் நிறைவு பெற்றுள்ள நிலையில் அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் பொறுமையுடன் நீதிக்காக காத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த தாக்குதல்களின் பின்னணியில் குறுகிய நோக்கங்கள் மறைந்துள்ளன. அவை வெளிப்படுத்தப்பட வேண்டும். அது தொடர்பில் தனியான விசாரணை நடத்த வேண்டும் என ஜனாதிபதி ஆணைக்குழு தனது பரிந்துரையில் தெரிவித்துள்ள போதும் அந்த தாக்குதலையே மக்கள் மத்தியிலிருந்து மறக்கடிப்பதற்காக பல்வேறு சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. யாருடைய தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக மேற்படி பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தப்படவில்லை என நாம் கேட்க விரும்புகின்றோம். உண்மை மறைக்கப்பட்டு பொய்கள் விதைக்கப்படுகிறது. பொய் ஒரு போதும் ஆட்சி செய்ய முடியாது. உண்மைகள் விரைவில் வெளிவரும் என்பது உறுதி

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மட்டுமல்ல கடந்த 73 வருடங்களாக நாட்டில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், யுத்தத்தினால் அநீதி இழைக்கப்பட்டவர்கள், கொல்லப்பட்ட மக்கள் அநாதரவாக்கப்பட்ட மக்கள் என அனைத்துக்கும் பதில் கூறியே ஆக வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் குரல்கள் கடவுளின் செவிகளை எட்டியுள்ளன. அவரே அவற்றிற்கு நீதி பெற்றுக்கொடுக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் உண்மைகளை இல்லாதொழிக்க முயன்றாலும் அது தொடர்பான மக்களின் பலம் அதிகரித்து வருகிறது எனினும் ஆட்சியாளர்கள் தினம் தினம் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்க நேர்ந்துள்ளது. உண்மைகள் காற்றடைக்கப்பட்ட பந்துகளை போன்றது. அது மீண்டு வெளியே வரும். அடிப்படைவாத கும்பல் ஒன்றினால் மேற்படி தாக்குதல் நடத்தப்படுவது தெரிந்திருந்தும் அதற்கு இடமளித்தல், மறுபக்கம் அதனை தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமை அதனை தடுப்பதற்கு முயற்சித்தவர்களை தடுத்தமை போன்ற செயற்பாடுகளை பார்க்கும்போது சில தலைவர்களுக்கு அரசியல் இலாபம் பெறுவதற்காக இந்த தாக்குதலை உபயோகித்துக் கொள்ள வேண்டியிருந்தது என்று தோன்றுகிறது.

எமது நாடு பயணித்துக் கொண்டிருக்கும் மோசமான நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டும் என்று மக்கள் கடவுளிடம் மன்றாட வேண்டும்.

அரசியல் நோக்கங்களுக்காக மக்களை பிளவுபடுத்த அரசியல் வாதிகள் முற்பட்டாலும் கடவுள் அதற்கு இடமளிக்க மாட்டார். மக்கள் ஒற்றுமையாக செயற்பட்டு நீதியை பெற்றுக் கொள்ள வேண்டும், என்றார்.

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு...

மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்து சமூக வலைதளத்தில்பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், ''இலங்கை சிறைகளில் வாடும் தமிழக மீனவர்களின் காவல் மேலும் நீட்டிக்கப்பட்டு இருப்பது மிகுந்த அதிருப்தியை தருகிறது. இலங்கை சிறையில் இருக்கும் தமிழக மீனவர்களை விடுவிக்க மத்திய வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கர் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கூறி உள்ளார்.

இலங்கை கடற்படை கைது செய்த தமிழக மீனவர்கள் 43 பேருக்கு ஜனவரி 27 வரை காவல் நீட்டிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஊர்க்காவல் துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய மீனவர்களுக்கு காவல் நீடிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

## பத்திரிகை வாசிக்க...

எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்திருந்தார்.

நாமல் ராஜபக்ஷ தமது கட்சியை விமர்சனம் செய்தமை தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என குறிப்பிட்ட அவர், பத்திரகைகளை வாசிப்பதற்றோ அல்லது தொலைக்காட்சியில் செய்திகளை பார்ப்பதற்கோ நேரம் இருப்பதில்லை எனவும் தனக்கு கடுமையான வேலைப்பளு இருப்பதாகவும்தெரிவித்துள்ளார்.

வேலைகளை முடித்துக் கொண்டு வீடு செல்லும் போது 10, 11 மணி ஆகின்றது. ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் இரவு 10 மணிக்கே நித்திரைக்கு சென்று விடுவேன். நாட்டில் அப்போது நடைபெற்ற சில விடயங்களை பத்திரிகை மூலம் அறிந்து கொண்டேன் எனவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அசாங்கமொன்றை அமைப்பதற்கான இயலுமை உண்டு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மலையக மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் எதிர்நோக்கும் சவால்கள்

இலங்கைக்கு வருமானத்தை ஈட்டித்தருவதில் மலையகம் முக்கிய பங்கு வகிக்கின்றனது. இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விட மலையகம் வறுமைக்குட்பட்ட மக்களை அதிகம் கொண்ட பகுதியாகவும், கல்வியில் பின்தங்கிய சமூகம் வாழும் பிரதேசமாக அமைந்துள்ளது. கல்வியில் மாணவர்கள் உயர் தரத்தை தாண்டுவது குறைவாக உள்ளபோதிலும், கடந்த சில ஆண்டுகளாக மலையக மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படும் வீதமும் ஓரளவு உயர்ந்துள்ளது.

இவ்வாறு உள்வாங்கப்படும் மாணவர்கள் கலை பிரிவையே அதிகமாக தெரிவு செய்கின்றனர். அதற்கு அடுத்ததாக வர்த்தகத்துறையை தெரிவு செய்யும் மாணவர்கள் அதிகமாக உள்ளனர். மலையக மாணவர்களில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுவோரில் விஞ்ஞான கற்கைகள் சார் பீடங்களை சேர்ந்தோரின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது.

இந்நிலையில் மலையக பகுதியில் இருந்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. குடும்ப வறுமை , காலநிலை பிரச்சினை, உள ரீதியான பிரச்சினைகள் என்றெல்லாம் பல்வேறு சவால்களை அவர்கள்கடக்க வேண்டியுள்ளது.

பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மலையக மாணவர்கள் எதிர்கொள்ளும் முதற்கட்ட பிரச்சினை குடும்பத்தின் வருமானம் போதாமையே ஆகும். பொதுவாக மலையகத்தைப் பொறுத்தவரை பெற்றோர் இறப்பர் மற்றும் தேயிலை தோட்டங்களில் பணி புரிபவர்களாவர். சிலர் அன்றாடம் வருமானம் கிடைக்கும் வகையில் கூலித் தொழில்செய்துவருபவர்களாவர். இவ்வாறு உழைக்கும் ஒரு தொகை பணம் அவர்களது குடும்ப செலவுக்கே போதாமல் உள்ளது. பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு மாதாந்தம் சராசரியாக 20,000 ரூபா செலவு ஏற்படுகிறது.





அந்நிலையில் அத்தனை பெரிய தொகையை பெற்றோரால் மாதாந்தம் வழங்க முடியாத அவல நிலை காணப்படுகிறது. சில மலையக குடும்பங்களின் மாத வருமானமே 20,000 தொடக்கம் 25,000 ரூபாவாக மட்டுமே உள்ளது.

இதன் காரணமாக பல்கலைக்கழகத்தில் எதிர்நோக்கும் மேலதிக செலவுக்கான தொகையைப் பெற்றுக் கொள்வதில் இம் மாணவர்கள் பெரும் சிரமத்திற்கு முகம் கொடுக்கின்றனர். இதன் விளைவினால் பட்டப்படிப்பை இடையில் கைவிட்டுச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அம்மாணவர்கள் தள்ளப்படுகின்றனர்.

போக்குவரத்து பிரச்சினையும் இவர்களுக்கு பிரதானமானதேயாகும். மாணவர்கள் மலையகத்திற்கு அண்மையில் காணப்படும் பல்கலைக்கழகங்களில் மொழிப் பிரச்சினை காரணமாக செல்வதற்கு தயங்குவதால், தூரப் பிரதேச பல்கலைக்கழகங்களுக்கு கல்விக்காக செல்கின்றனர். இதனால் இம்மாணவர்கள் போக்குவரத்து பிரச்சினையையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அத்தோடு மலையகத்தின் பெரும்பாலான வீதிகளில் புனரமைக்கப்படாமையினாலும், கிராமப் பகுதிகளிலிருந்து பிரதான நகருக்குச் செல்ல பஸ் சேவை இல்லாமையினாலும் இப்பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுகிறது.

மலையக மாணவர்கள் எதிர்கொள்ளும் மற்றுமொரு பிரச்சினை அவர்களது சமூகம் சம்பந்தப்பட்டதாகும்.

அதாவது அவர்களுக்கு பல்கலைக்கழகமானது புதிய சூழல் ஆகும்.அங்கு சந்திக்கின்ற ஏனைய சமூகத்தினரின் பழக்க வழக்கம், கலாசாரம், பண்பாடு போன்றவை மாறுபட்டுள்ளதால் மலையக மாணவர்கள் சவாலையும் சங்கடத்தையும் சந்திக்க வேண்டியுள்ளது.

உணவும் மிகப் பெரிய பிரச்சினையாகவே உள்ளது. ஒவ்வொரு பிரதேசத்திலும் வாழ்கின்ற மக்களின் வெவ்வேறு விதமான உணவுப் பழக்க வழக்கங்களால் புதிய உணவு முறையை பழக்கப்படுத்திக் கொள்ள மிகவும் சிரமப்படுகின்றனர்.

**பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மலையக மாணவர்கள் எதிர்கொள்ளும் முதற்கட்ட பிரச்சினை குடும்பத்தின் வருமானம் போதாமையே ஆகும். பொதுவாக மலையகத்தைப் பொறுத்தவரை பெற்றோர் இறப்பர் மற்றும் தேயிலை தோட்டங்களில் பணி புரிபவர்களாவர். சிலர் அன்றாடம் வருமானம் கிடைக்கும் வகையில் கூலித்தொழில் செய்து வருபவர்களாவர். இவ்வாறு உழைக்கும் ஒரு தொகை பணம் அவர்களது குடும்ப செலவுக்கே போதாமல் உள்ளது.**

மலையக மாணவர்கள் பெரும்பாலும் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவும் மொழி மற்றும் தொழில்நுட்ப அறிவில் குன்றியவர்களாகவும் காணப்படுகின்றனர்.

அத்தோடு மலையக பாடசாலைகளில் கணினி, ஆங்கிலம் மற்றும் சிங்களம் தொடர்பான அறிவு அவர்களுக்கு குறைவு. எனவே பல்கலைக்கழகத்தில் புகட்டப்படும் கற்கைகளை புரிந்து கொள்வதற்கும், செயற்பாட்டு ரீதியாக அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் சிக்கலை எதிர் நோக்குகின்றனர். பல்கலைக்கழகங்களில் அநேகமான கல்விசார் நடவடிக்கைகள் ஆங்கிலம், கணினி

போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அதற்கு இசைவாக்கம் அடைவதும் சிரமமாகும்.

மேலும் மலையகத்தின் காலநிலையானது குளிர், வெயில், மழை என்பன இணைந்ததாகும். ஆனால் கல்வி நடவடிக்கைகளுக்காக வேறு பிரதேசங்களுக்கு செல்வதனால் காலநிலை மாற்றம், உடல் ரீதியான பல தாக்கங்களை அவர்கள் சந்திப்பதற்கு நேரிடுகின்றது. அவர்கள் தோல் ஒவ்வாமை, கை, கால் தோல் வெடிப்பு, முடியுதிர்வு, உடல் நீர் சமநிலை இழப்பு போன்ற அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

உளவியல் ரீதியிலும் பலவித பிரச்சினைகளை சமாளிக்க வேண்டிய நிலைக்கு மலையக மாணவர்கள் உள்ளாகின்றனர். மலையக மக்கள் ஏனைய இனங்களால் புறக்கணிக்கப்படுவதாகவும் சரிசமமாக நடத்தப்படுவதில்லை எனவும் நிலவுகின்ற வேதனையான கருத்துக்களில் உண்மை இல்லாமல் இல்லை.

இந்த ஒதுக்கல் மனோபாவம் உளவியல் ரீதியான பல்வேறு பாதிப்புகளை மலையக மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றது. வறுமை நிலைக்கு உட்பட்டவர்கள் என மற்றவர்களால் நோக்கப்படுதல் தாழ்வு மனப்பான்மை, பிரதேச வேறுபாடு, குடும்ப நிலை போன்றவற்றால் உள ரீதியான பிரச்சினைகளுக்கு இவர்கள் முகம் கொடுக்கின்றனர்.

இவை அனைத்தையும் விட முக்கியமான பிரச்சினை தொழில் வாய்ப்பு சந்தையில் போட்டியிட முடியாது போவதாகும். இம்மாணவர்கள் தங்களது பட்டப்படிப்பு தவிர, ஏனைய பாட நெறிகளை வெளியில் சென்று கற்பதற்கான போதியளவு வருமானம் இல்லாததால் பட்ட சான்றிதழுடன் மட்டும் வெளியேறுகின்றனர். எனவே வேலைவாய்ப்புச் சந்தையில் தகுதி போதாதென முத்திரையிடப்பட்டு புறம் தள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு மலையகத்திலிருந்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் பல விதமான இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இவற்றினை நிவர்த்தி செய்வதானால் மலையகத்தில் தங்களுக்கென்று தனியான பல்கலைக்கழகம் ஒன்றை நிர்மாணிக்க வேண்டும்.


இதற்கு அரசாங்கமும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அப்போதுதான் மலையக மாணவர்கள் கல்வியில் உயர் நிலையை அடைய முடியும்.

மேலும் மலையகத்திலிருந்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும், மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் அரசாங்கம் மற்றும் அரசியல் கட்சிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கல்வி கற்கும் பிள்ளைகள் அதிகமுள்ள குடும்பங்களுக்கு உதவி திட்டங்களை அறிமுகம் செய்தல், உயர்கல்வி மற்றும் பல்கலைக்கழக கல்வி பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல், மற்றும் மாணவர்களின் பாடசாலை காலத்திலேயே மொழி மற்றும் தொழில்நுட்ப ரீதியான அறிவினை வழங்க கல்வி அமைச்சும், ஆசிரியர் அதிபர் குழாமும் முன்வர வேண்டும்.

உளவியல் சார்ந்த கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல், பட்டப்படிப்பை தொடரும் மாணவர்களுக்கான சலுகைகளை அதிகரித்தல் மற்றும் புலமைப்பரிசில் பணத்தை உரிய நேரத்தில் வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இக்குறைகளை நிவர்த்தி செய்வதனூடாக மலையக மாணவர்களின் பல்கலைக்கழக வாழ்க்கை சிறப்பாக அமையும். மலையகத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.



ஆர்.ரெஜீனா ...
நான்காம் வருடம்
ஊடக கற்கைகள்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

## றோயல் கல்லூரிக்கு 2 திறன் பலகைகள்



ஐக்கிய இராச்சியத்தினை மையமாகக் கொண்டு இயங்கிவரும் கலாநிதி. இரத்னம் நித்தியானந்தன் தன்னார்வ தொண்டு நிறுவனமான Ratnam Foundation அமைப்பினரது இணை அனுசரணையில் தமிழ் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளில் ஒன்றான, பாடசாலைகளுக்கு Smart Board வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் கொழும்பு றோயல் கல்லூரிக்கு அண்மையில் இரண்டு Smart Boards வழங்கப்பட்டன. திறன் வகுப்பறையை மேம்படுத்தும் முகமாகவும் வினைத்திறனாக முன்னெடுக்கும் பொருட்டு இச் செயற்பாட்டிற்கு டாக்டர். ரேவதி சத்தியநாராயணா ஒரு திறன் பலகையையும் கேகாலை மாவட்டத்தின் தமிழ்க் கல்வியின் அபிவிருத்திக்காகக கால் நூற்றாண்டு காலமாக பெரும் பணியாற்றிய கே/சென்.மேரிஸ் கல்லூரியின் முன்னாள் அதிபரும், அக் கல்லூரியை அபிவிருத்தி செய்து க.பொ.த.உயர்வகுப்புகளை ஆரம்பித்தவருமான மாத்தளையைச் சேர்ந்த மரதன் கிருஷ்ணனின் மூத்த புதல்வரும் றோயல் கல்லூரியின் பழைய மாணவருமான கிருஷ்ணன் திவாகரனின் நிதிப் பங்களிப்பினாலும் வழங்கப்பட்டது.

## பெண் தலைமைத்துவ குடும்பமொன்றுக்கு புதிய வீடு



பெண் தலைமைத்துவத்தை கொண்ட குடும்பத்தின் வறுமை நிலையை கருத்திற் கொண்டு வவுனியாவை சேர்ந்த வர்த்தகர் மயூரனின் நிதியில் இராணுவத்தின் ஒத்துழைப்புடன் வீடு ஒன்று அமைக்கப்பட்டு நேற்று (14) பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டது. இரண்டு பிள்ளைகளுடன் மூன்று பேரை உள்ளடக்கிய அக்குடும்பம் தற்காலிக கொட்டில் ஒன்றில் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி மிகவும் சிரமத்திற்கு மத்தியில் வாழ்ந்து வந்திருந்தனர். இந்நிலையிலேயே அவர்களுக்கு வீடு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் வன்னி மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சம்பிக்க ரணசிங்க, மற்றும் வர்த்தகர் மயூரன் அவரது குடும்பத்தினர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



கண்ணகி கலாலயம் வருடாந்தம் நடத்திவரும் தைப்பொங்கல் விழா நேற்று கிரேண்ட்பாஸ் பபாபுள்ள பிளேஸில் அமைந்துள்ள ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தில் மிக சிறப்பாக இடம் பெற்றது,





உலக உணவுத்திட்டத்தினால் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் கால்நடை வளர்ப்பினை ஊக்குவிக்கும் முகமாக பால் சேகரிக்கும் கொள்கலன்கள் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டது. KOICA நிறுவனத்தின் நிதி அனுசரணையில் உலக உணவுத் திட்டம் மற்றும் துணுக்காய் பிரதேச செயலகம் மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் இணைந்து இச்செயற்திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றது.

திகதி 13.01.2022
வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB NATIONAL LOTTERIES

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4646
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,154,090.00
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 4 2 8 5 0 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,489,784.00

கொவிசெத
Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2941
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,316,740.00
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 05 10 63 64
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,263,738.40

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 994
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,209,800.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 167,002,597.20
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து Y
சுப்பர் இலக்கம் 03
வெற்றி இலக்கங்கள் 01 21 31 52

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 676
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,813,400.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 29 30 42 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 92,563,036.80

செவன
உங்களுக்கு வீடு - கைகளில் காசு
சீட்டிழுப்பு இலக்கம் : 343
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,103,860.00
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 13 44 68 86
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,166,342.40

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் :1666
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,160,220.00
சுப்பர் இலக்கம் 15
வெற்றி இலக்கங்கள் 19 47 48 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,554,707.20

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# மாதிரி வீட்டுத் தோட்டம்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்குத் திட்டத்தின் கீழ் இலங்கையில் முதன்முதலாக வடமராட்சிக் கல்வி வலயத்தில் மாதிரி வீட்டுத் தோட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (13) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வீட்டுத்தோட்டம் மூலம் பசுமை விவசாயத்தை ஏற்படுத்தி நாட்டு மக்களிடையே நல்லிணக்கம், ஒற்றுமையை ஊக்குவிக்கும் கொள்கைத் திட்டத்தின் கீழ் 551 ஆவது படைப் பிரிவின் அனுசரனையுடன்

பருத்தித்துறை ஒராங்கட்டைச் சந்திக்கு அண்மையிலுள்ள வலயக் கல்வி வளாகத்தில் பணிப்பாளர் கே.சத்தியபாலன் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக யாழ்.



மாவட்டச் செயலாளர் கே.மகேசன், 55 ஆவது படைப்பிவின் தளபதி பிரிகேடியர் பிரசன்ன குணரத்ன ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக பருத்தித்துறை செயலாளர் ஆ.சிறி, கரவெட்டி பிரதேச செயலாளர் இ. தயாபரன், மருதங்கேணி பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி மற்றும் வலயக் கல்வி பணிமனை அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். அறிமுக நிகழ்வைத் தொடர்ந்து வளாகத்தில் அமைக்கப்பட்ட 24 நாற்று மேடைகளில் மரக்கறி வகைகளுக்கான விதைகள், நாற்றுக்கள் பிரதம அதிதிகள் சிறப்பு அதிதிகள், மாணவர்களால் நடுகை செய்யப்பட்டன. இதனைதொடர்ந்து பிரிகேடியர் பிரசன்ன குணவர்ன மாவட்டச் செயலாளர் கே.மகேசன் ஆகியோர் இந்நாற்று மேடைகளில் பயன்படுத்த சேதனைப் பசளை பொதிகளை வழங்கினர். தைப்பொங்கல் தினத்தோடு ஆரம்பிக்கப்பட்ட இம்மாதிரி வீட்டுத்தோட்டத்தில் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுடன் அறுவடை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# யாழில் பொங்கல் விழா





**யாழ். விசேட நிருபர்**

சர்வதேச இந்து பௌத்த ஒற்றுமைக்கான அமைப்பும் யாழ் நண்பர்கள் அமைப்பும் இணைந்து நடத்திய பொங்கல் விழா நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நேற்று காலை 10 மணியளவில் நல்லை ஆதின மண்டபத்துக்கு முன்பாக இடம்பெற்ற பொங்கல் விழாவுக்கு விருந்தினர்கள் நல்லூர் ஆலயத்திற்கு முன்பாக இருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

இதன்போது பல்வேறு கலாச்சாரங்களை பிரதிபலிக்கும் வகையில் கண்டிய நடனம்,பொய்க்கால் குதிரையாட்டம் மயிலாட்டம்,நாதேஸ்வர மேளதாளங்கள் முழங்க விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

இந்நிகழ்வின் போது பொங்கல் பானையில் விருந்தினர்களால் அரிசி போடப்பட்டதுடன் மங்கள விளக்கேற்றல் நிகழ்வு பௌத்த பாரம்பரிய முறைப்படி கண்டிய மேள தாளங்கள் முழங்க நடைபெற்றது.

இதன்போது வட மாகாண முன்னாள் ஆளுநர் றெஜினோல்ட்



குரே, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், நாகவிகாரை விகாராதிபதி சிறீவிமல தேரர் , நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், மறவன்புலவு சச்சிதானந்தன், வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் மற்றும் மதத்தலைவர்கள் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வுகளின்போது இராணுவம் மற்றும் பொலிஸாரால் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு காணப்பட்டதுடன் நிகழ்வு மண்டபத்தின் பெரும்பாலான ஆசனங்கள் வெறுமையாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கை விவசாய சேவைக்கு புதிய நியமனங்கள்

வடக்கு மாகாணத்தில் இலங்கை விவசாய சேவை தரம் 1,11,111சேவைக்கு உத்தியோகஸ்தர்கள் 20 பேர் விரைவில் நியமனம் செய்யப்படவுள்ளனர். வடக்கு பிரதம செயலாளர் சமன் விண்ணப்பம் கோரியுள்ளனர்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கீழ் காணப்படும் இலங்கை விவசாய சேவை உத்தியோகஸ்தர்களுக்கான வெற்றிடங்கள் (தரம் 1, தரம்11, தரம்111) விரைவில் நிரப்பப்படவுள்ளன.

வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேனா இதற்கான துரித நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தல் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் இலங்கை விவசாய சேவை உத்தியோகஸ்தர்கள் தரம் 111 இல் 14 வெற்றிடங்களும், தரம் 11 இல் 5 வெற்றிடங்களும், தரம் 1 இல் 1 வெற்றிடமுமாக மொத்தம் 20 வெற்றிடங்கள் நிரப்படவுள்ளன. விண்ணப்பதாரர் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 7.02.2022 ற்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வடக்கு மாகாண பிரதம செயலாளர் கோரியுள்ளார்.

மேற்படி வெற்றிடங்கள் நேர்முக பரீட்சை புள்ளியடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்படவுள்ளனர்.

# மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து




**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா ஏ 9 வீதி பூனாவை பகுதியில் நேற்று அதிகாலை அதிசொகுசு பஸ் உட்பட மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 12 பயணிகள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று (14.01) அதிகாலை இடம்பெற்ற விபத்துச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

பூனாவை பகுதியில் வீதியின் அருகே விபத்துக்குள்ளான டிப்பர் வாகனம் ஒன்று நின்றுள்ளது. இதன்போது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பஸ் ஒன்று டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளானதுடன், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பிறிதொரு அதிசொகுசு பஸ்ஸுடனும் மோதி விபத்துக்குள்ளானது. இவ்விபத்து சம்பவத்தில் பஸ்சில் பயணித்த 12 பயணிகள் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து காரணமாக ஏ 9 வீதியூடான போக்குவரத்து சுமார் ஒரு மணி நேரம் வரை ஸ்தம்பித்ததுடன் இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளின் மன்னார் விஜயம் அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு

**(தலைமன்னார் விஷேட நிருபர்)**

ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் மன்னாருக்கு வருகை தந்து மாவட்டத்தின் இன்றைய கள நிலவரங்களை மதத் தலைவர்கள், அரசு சார்பற்ற நிறுவன மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து கேட்டறிந்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை (12.01.2021) மன்னார் பகுதிக்கு ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் விஜயம் செய்து இன்றைய மன்னார் மாவட்டத்தின் களநிலவரங்களை கேட்டறிந்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் பகுதியிலுள்ள ஒரு ஹோட்டலில் இவர்கள் மத தலைவர்கள், அரசு சார்பற்ற பிரதிநிதிகள் மற்றும் சிவில் நிர்வாக பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பின்போது மன்னார் மாவட்ட மக்கள் தற்பொழுது எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்கள் என்பவற்றையும் மன்னார் பாலத்தடியில் இராணுவத்தினரின் சோதனைகள் மூலம் பயணிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கேட்டறிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிறையில் வாடும் அரசியல் கைதிகள், காணி அபகரிப்பு போன்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை தொடர்பான கருத்துக்களையும் கேட்டு அறிந்ததுடன் இது தொடர்பாக அங்கு கலந்து கொண்டவர்கள் மன்னார் மாவட்ட நிலமைகளை விரிவாக எடுத்துரைத்ததாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் மன்னார் வைத்திசாலையின் தேவைகள், மாவட்ட இளைஞர் யுவதிகளின் வேலை வாய்ப்பு பிரச்சினைகள் தொடர்பாக சிவில் பிரதிநிதிகளால் கருத்து முன்வைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

ஐரோப்பிய குழுவினர் மன்னார் மாவட்டத்தில் ஒரு சில கிராமங்களுக்கும் சென்று அங்குள்ள மக்களையும் நேரடியாக சந்தித்து உரையாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கில் பொங்கல் விழா











(யாழ்.விசேட, தலைமன்னார் விஷேட, வவுனியா விசேட நிருபர்கள்)

வடக்கில் தைப்பொங்கல் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன. அந்தவகையில் யாழிலுள்ள ஆலயங்களில் அதிகாலை முதல் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றது. வீடுகளிலும், சமய சமூகப் பொது நிறுவனங்களிலும் இடம்பெற்ற பொங்கல் கொண்டாட்டங்களில் மக்கள் உற்சாகத்துடன் பங்குபற்றினர். மன்னார் மாவட்டத்தில் இந்து, கத்தோலிக்க ஆலயங்களிலும் சூரியனுக்கு பொங்கல் செய்யப்பட்டதுடன் விஷேட வழிபாடுகளும் ஆலயங்களில் இடம்பெற்றன. வவுனியாவில் பொங்கல் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன. அந்தவகையில் வைரவப்புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயம் , நகர் பகுதியில் அமைந்துள்ள கந்தசுவாமி ஆலயம் உட்பட பல இந்து ஆலயங்களிலும் நேற்று (14.01.2022) காலை பொங்கல் பொங்கியதுடன் விசேட பூஜைகள் நடைபெற்றன.

# நயினாதீவில் மாடுகள் திருட்டு

**யாழ்.விசேட நிருபர்**


நயினாதீவின் பல பகுதிகளிலும் அண்மைக்காலமாக மாடுகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக அறுக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதாக கால்நடை வளர்ப்போர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பலமுறை நயினாதீவு உப பொலிஸ் பிரிவில் முறையிட்டும் எந்த நடவடிக்கையினையும் பொலிஸார் மேற்கொள்ளவில்லை என குற்றம் சுமத்தியுள்ளனர்.

சுமார் 5 கிலோ கிராம் நிறையுடைய மாட்டிறைச்சியுடன் நேற்றைய தினம் ஒருவரை மடக்கிப் பிடித்து பொதுமக்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்தும் எவ்விதமான சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் உரிய தரப்பினர் கவனத்திற் கொண்டு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மண்ணின் புனிதத்தை பேணுவதுடன், கால்நடைவளர்ப்பாளர் மேல் கரிசனை காட்டுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

# மலைச்சாரல்









கண்டி ஸ்ரீ செல்வவிநாயகர் கோயிலில் தைப்பொங்கல் விசேட சமய வழிபாடு கோயிலின் அறங்காவலர் கிருஸ்ணமூர்த்தி கோவிந்தசாமி தலைமையில் இடம்பெற்றது.

படங்கள் மாவத்தகம தினகரன் நிருபர்

## பொது நிதி முறையாகப் கையாளப்பட அரச ஊழியர்கள் பங்களிக்க வேண்டும்

### மத்திய மாகாண ஆளுநர்

**எம்.ஏ.அமீனுல்லா**



பொது நிதியை பயன்படுத்துகின்ற பொழுது அது முறையாகப் கையாளப்படுத்தல் வேண்டும்.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் அரச அதிகாரிகள் பொறுப்புடன் செயற்படுவது அவசியம் என மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே வலியுறுத்துள்ளார்.

குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் தொடர்பில் மத்திய மாகாண ஆளுநர் தலைமையில் கண்டியிலுள்ள ஆளுநர் அலுவலக கேட்போர் கூடத்தில் (12) நடைபெற்ற கலந்துரையாடலின் பொதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்ற ஆளுநர், அவர்களின் சேவையை கருத்தில் கொண்டு தற்போதுள்ள சட்ட கட்டமைப்பிற்குள் உரிய கோரிக்கைகளை நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணித்தார்.

குடும்ப சுகாதார சேவைகள் கள உத்தியோகத்தர்கள் போன்ற உத்தியோகத்தர்கள் கடுமையாக உழைத்து மேலதிக நேரங்களுக்கு விண்ணப்பித்து வருகின்ற அதேவேளை, குறிப்பிட்ட அரச நிறுவனங்களில் சில உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை புறக்கணித்து மேலதிக நேர கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதாக செய்திகள் வெளியாகியுள்ளன எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

## ஸ்ரீல.சு.க நுவரெலியா அமைப்பாளராக கிருஸ்ணசாமி சந்திரசேகரன் நியமனம்

**தலவாக்கலை குறூப் நிருபர்**



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நுவரெலியா அமைப்பாளராகவும் ,ஊடக செயலாளராகவும் மற்றும் முகாமையாளராகவும் முன்னாள் நுவரெலியா மாநகர பிரதி முதல்வர் கிருஸ்ணசாமி சந்திரசேகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட நியமனத்தை முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ளார்.

நுவரெலியாவைச் சேர்ந்த சந்திரசேகரன் குருத்தலாவ சென் ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவராவார்.

இவர் கடந்த 2002 ஆம் ஆண்டு முதன் முறையாக நுவரெலியா மாநகர சபையின் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இதனை தொடர்ந்து கடந்த 2006 ஆம் ஆண்டு நுவரெலியா மாநகர சபை பிரதி நகர முதல்வராக தெரிவுசெய்யப்பட்டார். இதனை தொடர்ந்து கடந்த 2011ஆம் ஆண்டு நுவரெலியா மாநகரசபையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அன்று ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் மூன்று உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். அந்த மூன்று உறுப்பினர்களில் சந்திரசேகரும் ஒருவராக தெரிவு செய்யப்பட்டார். இதனை தொடர்ந்து வந்த தேர்தலில் இவர் போட்டியிடவில்லை.

சிறிது காலம் அரசியிலிருந்து ஓய்வு பெற்று தனது அரசியல் ஆதரவாளர்களின் வற்புறுத்தலால் மீண்டும் அரசியலில் ஈடுபட தொடங்கியுள்ளார்.

சிறந்த சமூக சேவையாளரான இவர் நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய சீத்தாஎலியா சீதையம்மன் ஆலய பரிபாலன சபை மற்றும் நுவரெலியா இந்து கலாசார பேரவையின் ஆயுட்கால உறுப்பினருமாவார்.





மாத்தளை மாவட்டத்தில் யடவத்த செயலாளர் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக பட்டதாரிகள் 41 பேருக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு (12) நேற்று யடவத்தை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான நாலக்க கோட்ட கொட நியமனக் கடிதத்தை வழங்குவதையும் கலந்துகொண்ட பட்டதாரிகளின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்

படம்: மாத்தளை சுழற்சி நிருபர்

## இறத்தோட்டை நீர்வீழ்ச்சிப் பகுதியில் துப்புரவாக்கும் பணி

**தம்புள்ள தினகரன் நிருபர்**



இறத்தோட்டை பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நிலையங்களை மேலும் ஜனரஞ்சகமான கண்கவர் நிலையங்களாக மாற்றியமைக்கும் நோக்கில் அப் பிரதேசங்களை அண்மித்துள்ள அனைத்து சுற்றுச் சூழல்களையும் துப்புரவு செய்யும் சிரமதான வேலைத் திட்டமொன்றை இறத்தோட்டை பிரதேச சபை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

குறித்த இவ் வேலைத் திட்டத்தின் கீழ் அழகிய கண்கவர் 'பம்பர கிரிஎல்ல' நீர் வீழ்ச்சியை அண்டியுள்ள சுற்றுப் புற சூழலை சுத்தப் படுத்துவதும் இச் சிரமதானப் பணிகளின் பிரதான நோக்கமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது

பிரசேத்திலுள்ள அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து மேற் கொள்ளப்பட்ட இச் சிரமதானப் பணியில் இறத்தோட்டை பிரதேச சபை, பிரதேச செயலகம், இறத்தோட்டை பொலிஸ் பிரிவினர் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் என்பனவும் கலந்து கொண்டிருந்தன.

## ஹற்றன் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் சூரிய பொங்கல்

**ஹற்றன் விசேட நிருபர்**



உழவர்களின் திருநாளான தைபொங்கல் பண்டிகையினை முன்னிட்டு நாட்டுக்கும் வீட்டுக்கும் சௌபாக்கியம் வேண்டி ஹற்றன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் நேற்று (14) அதிகாலை சூரிய பொங்கல் மிக சிறப்பாக நடைபெற்றது.

விநாயகர் வழிபாடு இடம்பெற்று சூரிய பகவானுக்கு பால் பொங்கல் வைத்து அலங்கார பூஜைகள் நடைபெற்று மலர்களால் அர்ச்சனை செய்து நாட்டுக்கும் வீட்டுக்கும் சௌபபாக்கியம், சாந்தி, சமாதானம் ஆகியன வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

இதன் போது நாடு முகம் கொடுத்துள்ள இக்கட்டான சூழ் நிலை நீங்க இந்த இயற்கை பகவான் உதவ வேண்டும் என்ற பிரார்த்தனையும் இடம்பெற்றன.

இதனை தொடர்ந்து ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாருக்கு விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன. பூஜை வழிபாடுகள் ஆலய பிரதம குரு பிரம்ம ஸ்ரீ சந்திரானந்த குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

## நுவரெலியா பட்டிபொல பகுதியில் பிரபல வர்த்தகரின் சடலம் மீட்பு

**ஆ.ரமேஸ்**

நுவரெலியா பட்டிபொல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டேப்பன்டைல் வனப்பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் ஒன்றை பட்டிபொல பொலிஸார் (13) மதியம் 12.30 மணியளவில் மீட்டுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் குணரத்தின மாவத்த 50 ஏக்கர் கிராமம் நீர்கொழும்பு பகுதியை சேர்ந்த சத்துருவான் ஹப்புகாமி (45) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனியே கார் ஒன்றில் பயணத்தை மேற்கொண்டுள்ள இவர் பட்டிப்பொல நகரில் இருந்து சுமார் 700 மீட்டர் தொலைவில் உலக முடிவு பகுதிக்கு செல்லும் டேபன்டைல் வன பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மரம் ஒன்றில் தூக்கிட்டு தன்னுயிரை மாய்த்து கொண்ட நிலையில் இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் (13) மதியம் பொலிசாருக்கு கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் நபரை சடலமாக மீட்டதாகவும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதாகவும், உயிரிந்தவர் பிரபல வர்த்தகர் எனவும் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கம்பளையில் எரிவாயு அடுப்பு வெடிப்பு



**கம்பளை நிருபர்**

கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவத்துர நவஜனப்பதய பிரதேசத்தில் ஒரு வீட்டில் சிலிண்டர் கோளாறு காரணமாக அடுப்பு திடீரென வெடித்து சிதறியுள்ளது.

காலை உணவு சமைத்து கொண்டு இருந்த போது திடீரென அடுப்பு வெடித்து சிதறியுள்ளது.

யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

நேற்று கம்பளை மாவத்துர நகரில் இருக்கும் சிலிண்டர் வியாபார நிலையத்திற்கு புதிதாக 60 சிலிண்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் அந்த கடையில் வாங்கிய புதிய சிலிண்டராலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சப்ரகமுவ மாகாண பொங்கல் விழா

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

சப்ரகமுவ மாகாண சபையின் கீழ் இயங்கும் சப்ரகமுவ மாகாண சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தினால் இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொங்கல் விழா சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் நேற்று முன்தினம் (13) இரத்தினபுரி தேவாலகாவ பிரதேசத்தில் அமைந்துள்ள சிறுவர் வழிகாட்டல் நிலையத்தில் வெகு சிறப்பாக இடம் பெற்றது.

இதன்போது இரத்தினபுரி புதிய நகரில் அமைந்துள்ள காளியம்மன் தேவாலயத்தின் பிரதமகுரு சிவயோக சர்மா பூஜைகளை நடாத்துவதையும், நிகழ்வில் சப்ரகமுவ மாகாண சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் கொடல்லவத்த, சப்ரகமுவ மாகாண சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் ரணசிங்க, மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலார் மஞ்சுலா இதிகாவெல உட்பட கல்வி அதிகாரிகள் அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# கிழக்கின் குரல்



# கிராமங்களின் தன்னிறைவில்தான் நாட்டின் எழுச்சி தங்கியுள்ளது



(பெரியபோதீவு தினகரன் நிருபர்)

கிராமங்களின் தன்னிறைவிலேதான், நாட்டின் தன்னிறைவு தங்கியுள்ளதாக, இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

பட்டிருப்பு பாலத்தின் தற்போதைய நிலமை குறித்து அறிந்துகொள்ள நேரில் சென்ற இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே இதனைத் தெரிவித்தார். இங்கு பேசிய அவர் தெரிவித்ததாவது,

விவசாயம், கால்நடை, சிறு பொருளாதார பயிர் செய்கை, கிராமங்களிலுள்ள உற்பத்திகளை நகரங்களுக்குக் கொண்டு வருவதற்கு முறையான போக்குவரத்து வசதி மிக அவசியம். இதனால்தான், கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அரசாங்கம் அபிவிருத்தி செய்து வருகிறது. கிராமிய பொருளாதாரத்தின் எழுச்சியில்தான் நாட்டின் வளர்ச்சி தங்கியுள்ளது.

பழுதடைந்த நிலையில் தற்போது ஒரு பகுதியில் மாத்திரம் போக்குவரத்துச் செய்யப்படும் பட்டிருப்பு பாலத்திற்கு மாற்றீடாக, புதிய பாலம் அமைத்து மக்களின் பாவனைக்கு வழங்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நல்லாட்சி காலத்தில், கிழக்கில் ஒரு பாலம் கூட நிர்மாணிக்கப்படவில்லை. ராஜபக்ஷக்களின் ஆட்சிக் காலத்திலேயே, கிழக்கு மாகாணத்தில் அதிக பாலங்கள் அமைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில், மிக முக்கிமான பாலமாகவும், பழமை வாய்ந்த பாலங்களில் ஒன்றாகவும் காணப்படுவது இந்த பட்டிருப்பு பாலமாகும். இதுமிகவும் மோசமான நிலையில் உள்ளது.

இப்பாலத்தின் நடுப்பகுதியில் ஏற்பட்ட உடைவால், ஒரு பகுதியில் மாத்திரமே போக்குவரத்து இடம்பெற்றுவரு கிறது. இந்நிலையில், இப்பாலத்தைப் புனரமைத்துத் தருமாறு பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இப்பாலத்தை புனரமைக்கும் பணிகள் தொடர்பான செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு திட்ட வரைபுகள், வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டுள்ளது. 165 மீற்றர் நீளமும் 10.5 அகலமும் கொண்ட இப்பாலத்தை புனரமைப்பதற்காக 1000 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில், இளைஞர் யுவதிகளுக்காக தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ததாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

# மூதூர் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா பணிகள்

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)யின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 'நூற்றாண்டு விழா மலர்' வெளியீட்டுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென, ஏற்பாட்டுக்குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

நூற்றாண்டு விழா ஒழுங்கமைப்பு குழுவினரும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கல்லூரி அதிபர் எஸ்.எச். முஹீர் தெரிவித்தார்.

மூதூரில் பல்வேறு வளர்ச்சிப் படிகளைக் கொண்டு தேசிய பாடசாலையாக விளங்கும் இக்கல்லூரியின் சிறப்புக்குறித்த தகவல்கள், பல மட்டங்களிலிருந்தும் திரட்டப்படுகின்றன.

பழைய மாணவர்கள், இக்கல்லூரியின் பயின்று பல துறைகளிலும் சேவையாற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், ஆசிரியர்கள் மூலமாகவும் தேவையான ஆலோசனைகளும் பெறப்பட்டு வருவதாகம் அதிபர் தெரிவித்தார்.

1922 இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் நூற்றாண்டு விழாவை, வெகு விமர்சையாக கொண்டாட ஏற்பாட்டுக் குழுவினர் சிறந்த முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

# திருகோணமலை மாவட்டத்தில் தைப்பொங்கல் பூசைகள்

(கந்தளாய் தினகரன் நிருபர்)



தைப்பொங்கலை முன்னிட்டு திருகோணமலை மாவட்டத்தில், விஷேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. திருகோணமலை காளி கோவிலில் தேவஸ்தான இ.ரவிச்சந்திர குருக்களினால், பூசைகள் நடத்தப்பட்டன. கோவிலுக்கு வருகை தந்தோர் புத்தாடைகள் அணிந்து பூசை நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். சுகாதார அறிவுறுத்தல்களுக்கமைய வழிபாடுகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## தைப்பொங்கல் பண்டிகையைத் தொடர்ந்து

# அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெல் அறுவடை

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

தைப்பொங்கல் பண்டிகையைத் தொடர்ந்து, அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெல் அறுவடைப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர்.

மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் பகுதியளவில் நெல் அறுவடைப் பணிகள் தற்பொழுது ஆரம்பிக்கப் பட்டுள்ள போதிலும், தைப்பொங்கலைத் தொடர்ந்து, இன்று (15) முதல், நெல் அறுவடைப் பணிகள் பரவலாக இடம்பெறவுள்ளன.

பெரும்போக நெல் அறுவடை ஆரம்பிக்கப்படவுள்ள இச்சந்தர்ப்பத்தில், நெல்லின் விலைகளும் மேலும் அதிகரித்து வருகின்றன. பிற மாவட்டங்களிலிருந்து அம்பாறை மாவட்டத்திற்கு வருகைதரும் தனியார் நெல் கொள்வனவாளர்கள், அரிசி ஆலைகளின் சொந்தக்காரர்கள் ஆகியோர் நெல் கொள்வனவில் ஈடுபட்டு வருகின்றனர்.

இம்முறை இரசாயன உரமின்றி சேதனப்பசளை பிரயோகித்து நெற் செய்கை பண்ணப்பட்டது. இதனால் எதிர்பார்த்த நெல் அறுவடை கிடைக்காதென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இது, பெருத்த நஷ்டத்தையும் விவசாயிகளுக்கு ஏற்படுத்தியுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் தற்பொழுது ஒரு வார காலத்திற்கும் மேலாக. மழை பெய்வதால், அறுவடைத் தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

அறுவடைக்குத் தயார் நிலையிலிருந்த நெற் காணிகளில்

மழைநீர் தேங்கி, அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

# கொவிட் 19 வைரஸை கட்டுப்படுத்த பிளாஸ்ரிக் திரைக்கவசம் விநியோகம்



(காரைதீவு குறூப் நிருபர் )

பிளாஸ்ரிக் பாதுகாப்பு திரைக்கவசம் விநியோகிக்கப்பட்டுவருகிறது. பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பயணிக்கும் முச்சக்கரவண்டிகளுக்கு இவை வழங்கப்படுகின்றன. இதற்கான ஏற்பாடுகளை செலான் தனியார் வங்கி முன்னெடுத்துள்ளது.

செலான் வங்கி முன்னெடுத்துவரும் சமூகநலத் திட்டத்தின் ஓரங்கமாக இத்திட்டம் கிழக்கிலங்கையில் கிழக்குமாகாண பிராந்திய முகாமையாளர் எம்.எச்.எம்.றிஸ்மி ஹூசைனின் வழிகாட்டலில் முன்னெடுக்கடுகின்றமை குறிப்பிடத்தக்கது. செலான்வங்கியின் சம்மாந்துறைக்கிளை, இச்செயற்றிட்டத்தை சம்மாந்துறைக்கிளை முகாமையாளர் நா.மோகனப்பிரகாஸ் தலைமையில் ஆரம்பித்து வைத்தது.

இந்நிகழ்வில் வங்கியின் ஏனைய உத்தியோகத்தர்கள், நலன்விரும்பிகள், சுகாதார அதிகாரிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பு ஆரையம்பதியில் சர்வமத தைப்பொங்கல் விழா

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு பல்சமய ஒன்றியம் ஏற்பாடு செய்த தைப்பொங்கல் விழா, ஆரையம்பதி சிகரம் புகலிடம் மண்டபத்தில் இடம் பெற்றது.

ஆரையம்பதி சர்வமத அமைப்பின் தலைவர் வி.தவராசா தலைமையில் நடைபெற்ற இத்தைப் பொங்கல் விழாவில், மட்டக்களப்பு பல்சமய ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ சிவபாலன் குருக்கள், ஆலோசகர் எகெட் கரிட்டாஸ் இயக்குநர் ஏ.இயேசுதாசன் அடிகளார், பல்சமய ஒன்றியத்தின் உப தலைவர் மௌலவி எச்.எம். ஸாஜஹான், இணைப்பாளர் ஏ,கிறிஸ்டி உட்பட மட்டக்களப்பு பல்சமய ஒன்றியத்தின் பிரதி நிதிகள், ஆரையம்பதி சர்வமத அமைப்பின் பிரதி நிதிகள் , சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் புகலிடம் ஆசிரியைகள், மாணவர்கள் பெற்றோர் பிரதேச பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, புகலிடம் மாணவர்களுக்கு அன்பளிப்பு பொருட்களும் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இனங்களுக்கிடையிலான ஐக்கியம், சமதானம், சகோதரத்துவத்தை கட்டியெழுப்ப இவ்வாறான நிகழ்வுகளை மட்டக்களப்பு பல்சமய ஒன்றியம் நடாத்தி வருகின்றது.

# முரண்பாடுகளை தோற்றுவித்தாலும் உண்மைகளை மூடி மறைக்கக்கூடாது

( மாளிகைக்காடு குறூப் நிருபர்)



முரண்பாடுகளத் தோற்றுவிக்கும் என்பதற்காக செய்தியிலுள்ள உண்மைகளை ஊடகவியலாளர்கள் மூடிமறைக்கக்கூடாதென, அம்பாறை இலத்திரனியல் ஊடகவலையமைப்பின் தலைவர் சந்தன லியனராய்ச்சி தெரிவித்தார். அம்பாறை மொண்டி ஹோட்டலில் இடம்பெற்ற " முரண்பாட்டு உணர்திறன் ஊடகம் " எனும் தொனிப்பொருளிலான ஊடக செயலமர்வில் உரையாற்றியபோதே அவர், இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

மரபு முறையிலான செய்தியிடல், முரண்பாட்டுத் தன்மையில் செய்தியிடல் என்பவை ஒன்றுக்கொன்று வேறுபட்டுள்ளன. முரண்பாடான செய்திகளை வழங்கும் போது, முரண்பாடுகளுக்குள் நாமும் ஒருவராக மாறி உண்மையான செய்தியை நடுநிலைமையுடன் வெளியிட வேண்டும். இன முறுகலிலுள்ள உண்மையான விபரங்களை வெளியிடும்போதுதான், அதற்குரிய உண்மையான தீர்வுகளைத் தேட முடியும். சமூகங்கள் மோதிக்கொள்ளும் என்பதற்காக, இதிலுள்ள உண்மைகளை மறைத்து எழுதக்கூடாது.

அரசியல் இலாபங்களுக்காக வன்முறையை திணித்து, எழுதுவதும் தீர்வாக அமையாது.

ஆட்சி செய்தோர் விட்ட தவறுகளால்தான் நாட்டில் இனப்பிரச்சினை புரையோடிப் போயிருக்கிறது. இதிலிருந்துதான் முதன் முதலில் முரண்பாடுகள் தோன்றத் தொடங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கோழிப்பண்ணையாளர்களை ஊக்குவிக்க பல்கலைக்கழகத்தில் கலந்துரையாடல்

(ஒலுவில் விஷேட நிருபர்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்திற்கமைய, உள்ளூர் கோழிப் பண்ணையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு கைத்தொழில் செயலமர்வு நடாத்தப்பட்டது.

தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு, பீடாதிபதி கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீட் தலைமையில் நடைபெற்றது.

கோழிப் பண்ணையாளர்கள் மற்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினர் இந்த செயலமர்வில் கலந்து கொண்டனர். கடந்த புதன்கிழமை (12) பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில், இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

கோழிப் பண்ணையாளர்களின் முன்னேற்றத்திற்காக விஞ்ஞான தொழில்நுட்பம் தொடர்பிலான ஆலேசனைகள், வழிகாட்டல்கள், உற்பத்தி தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஆய்வுகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், கோழிப்பண்ணை தொடர்பான விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொள்ளும் வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றன பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் இப்பிரதேசத்தில் காணப்படும் உள்ளூர் கைத் தொழிலாளர்களை இனங்கண்டு, அவர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகவும் அதனூடாக பொருளாதாரத்தை அதிகரிக்கக் கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்கவுள்ளதாகவும், பீடாதிபதி கலாநிதி யூ.எல். அப்துல் மஜீட் தெரிவித்தார்.

கோழிப் பண்ணைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கில், தொழில்நுட்பம் சார்ந்த ஆலேசனைகளை பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடம் வழங்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இச்செயலமர்வில் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.ஜீ. முஹம்மட் தாரீக், உயிரியல் முறைமை தொழில்நுட்பவியல் பிரிவின் துறைத் தலைவர் கலாநிதி ஏ.என்.எம். முபாறக் உட்பட விரிவுரையாளர்களும், கோழிப் பண்ணையாளர்களும் கலந்து கொண்டனர்.

# கல்முனையில் சுவர் ஓவியங்கள் மூலம் கொரோனா விழிப்புணர்வு

(பெரியநீலாவணை விஷேட நிருபர்)

ஜனாதிபதியின் சிந்தனைக்கமைய வெற்றுச் சுவர்களை அழகுபடுத்தும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இக்காலப் பகுதியில், கொரோனா பற்றிய விழிப்பூட்டலை ஏற்படுத்தும் வகையிலே, இந்தச் சுவரோவியங்கள் வரையப்பட்டு வருகின்றன.

கல்முனை நிலைய பொறுப்பதிகாரி காரியாலயத்தின் முன்னாலுள்ள சுவர்களில், தனவந்தர்களின் உதவியுடன் பொதுமக்களையும், பாடசாலை மாணவர்களையும் விழிப்புணர்வூட்டும் சுவர் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எம்.நௌபரின் வழிகாட்டலில், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம்.முர்சித்தின் பூரண ஒத்துழைப்புடன் இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதில், கொரோனா பற்றிய விழிப்புணர்வுப் படங்களும் நீரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் படங்களும் வரையப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பட்டிப்பொங்கல் இன்று கால்நடைகளுக்கு ஆசி

(பனங்காடு தினகரன் நிருபர் )

உழவர் திருநாளின் மற்றுமொரு சிறப்பம்சமான பட்டிப் பொங்கல் இன்று (15) சகல கால்நடை பண்ணைகளிலும், ஆலய கோசாலைகளிலும் தற்காலத்தில் பசுக்கள் வளர்க்கப்படும் வீடுகளிலும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இதுகுறித்த சிறப்பு பூசைகளுடன் இன்று இடம்பெறுகின்றன.


உழவர்கள் தமது தொழில் வளர்ச்சிக்கும், அறுவடைக்கும் பேருதவி புரிந்த சூரியனுக்கும், மாடுகளுக்கும், நிலத்திற்கும் நன்றி கூறும் சமய, சமூக நிகழ்வாக இது கருதப்படுகின்றது.

இன்று காலை பண்ணைகளிலுள்ள பசுக்களை குளிப்பாட்டி, திலகமிட்டு, பூமாலைகள் அணிவித்து அதன் பால்மூலம் பொங்கல் செய்து, சூரியனுக்கு நைவேத்தியம் செய்த பின் பசுக்களுக்கு ஊட்டி மகிழும் சிறப்பான நிகழ்வு இது வாகும்.

இத்தினத்தை உழவர் பெருமக்களும் கால்நடை பண்ணையாளர்களும் காலாகாலமாக சமய மரபுகள் மாற்றம் காணாதவாறு மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது .

# சர்வதேச செய்திகள்

## 2021 உலகின் ஆறாவது கடும் வெப்பமான ஆண்டாக பதிவு



உலகில் மிக அதிக வெப்பம் மிகுந்த ஆறாவது ஆண்டாக 2021 வ கைப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய தகவல்கள் அதற்குச் சான்றாய் அமைந்திருப்பதாக, அமெரிக்கப் பருவநிலை ஆய்வாளர்கள் கூறினர். உலக மக்கள் தொகையில் சுமார் கால்வாசிப் பேர் கடந்த ஆண்டு கடுமையான வெப்பத்தால் பாதிக்கப்பட்டனர்.

தெற்காசியா, வட அமெரிக்கா, தென்னமெரிக்கா ஆகிய வட்டாரங்களில் கடந்த ஆண்டு சூரியன் சுட்டெரித்தது. ஆர்க்டிக்கில் மீண்டும் அதிகமான பனி உருகியது. உலக சாராசரியை விட ஆர்க்டிக், மும்மடங்கு அதிகம் சூடாவதாக நாசா ஆய்வு நிறுவனம் கூறியது.

காடுகளை அழித்தல், படிம எரிபொருள் பயன்பாடு போன்ற நடவடிக்கைகளைக் குறைக்காவிட்டால் நிலைமை மேலும் கடுமையாகலாம் என்று ஆய்வாளர்கள் எச்சரித்தனர்.

கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் வெப்பம் அதிகமாக இருக்கலாம் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

## பிரிட்டன் பிரதமருக்கு பதவி விலக அழுத்தம்



பிரிட்டனில் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்து வருகின்றன. முடக்கநிலைக் கட்டுப்பாடுகள் நடப்பில் இருந்தபோது விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்றதை ஒப்புகொண்டதைத் தொடர்ந்து அவர் பதவி விலக வேண்டும் என்று பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

2020ஆம் ஆண்டு மே மாதத்தில் பிரிட்டனில் முடக்கநிலை நடப்பில் இருந்தபோது, எண். 10 டவுனிங் ஸ்டிரீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் அவர் கலந்துகொண்டார். அதற்குத் ஜோன்சன் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

பொதுமக்களின் சினத்தைப் புரிந்துகொள்ள முடிவதாக அவர் கூறினார்.

ஒரே வீட்டில் வசிக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கு அப்பால் ஒருவரை மட்டுமே வெளியில் சந்திக்க, அப்போது அனுமதிக்கப்பட்டிருந்தது.

# நேட்டோ-ரஷ்யா பேச்சில் தொடர்ந்தும் பின்னடைவு



அமெரிக்கா மற்றும் நேட்டோ உடன் இந்த வாரம் இடம்பெற்ற பாதுகாப்பு பேச்சுவார்த்தைகள் 'வெற்றி அளிக்கவில்லை' என்று குறிப்பிட்டிருக்கும் ரஷ்யா, அடிப்படை விவகாரங்களில் தொடர்ந்து முரண்பாடு நீடிப்பாக தெரிவித்துள்ளது.

ஜெனீவா மற்றும் பிரசல்ஸில் இதுவரை இரண்டு சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளதோடு சில சாதகமான நிலை ஏற்பட்டபோதும் மொஸ்கோ ஸ்திரமான முடிவு ஒன்றை எதிர்பார்க்கிறது என்று ரஷ்ய அரச பேச்சாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கடந்த வியாழனன்று தெரிவித்தார்.

மேற்கில் இருந்து ரஷ்யாவின் பாதுகாப்புக் கோரிக்கைகள் மற்றும் உக்ரைன் எல்லையில் ரஷ்யா படைகளை குவித்திருக்கும் நிலையில் ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான அமைப்பின் சந்திப்பு ஒன்றுக்காக கடந்த வியாழனன்று இந்த பேச்சுவார்த்தைகள் வியன்னாவுக்கு மாற்றப்பட்டது.

ரஷ்யாவின் படைக் குவிப்பை வாபஸ் பெறும்படி உக்ரைன் மற்றும் அதன் கூட்டணி நாடுகள் கோருவதோடு ரஷ்யா தாக்குதல் ஒன்றை தொடுத்தால் அதன் மீது பல்வேறு தடைகளை விதிப்பது பற்றி மேற்குலக நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

உக்ரைனின் கிழக்கில் ஏற்கனவே ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள் போராடுவதோடு 2021 இல் ரஷ்ய படைகள் உக்ரைனின் கிரிமியான் தீபகற்பத்தை கைப்பற்றிய நிலையில் உக்ரைன் மீது ஆக்கிரமிப்புத் தொடுக்கும் எண்ணம் இல்லை என்று ரஷ்யா குறிப்பிட்டுள்ளது.

தமது எல்லைக்குள் தாம் விரும்புகின்றபடி படைகளை நிலைநிறுத்த முடியும் என்று குறிப்பிடும் ரஷ்ய அதிகாரிகள் நேட்டோ, பிராந்தியத்தில் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்துவதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

முன்னாள் சோவியட் ஒன்றிய நாடான உக்ரைனை நோட்டோ அமைப்பில் சேர்ப்பதில்லை என்ற சட்டபூர்வ உறுதிப்பாட்டைக் கோரும் ரஷ்யா மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் முன்னாள் சோவியட் ஒன்றிய நாடுகளில் இருந்து படைகளை வாபஸ் பெறும்படியும் கோருகிறது.

## அமெரிக்க தூதரக அதிகாரிகள் 4 பேருக்கு ஹவானா சிண்ட்ரம்



ஜெனீவா மற்றும் பாரீஸ் நகரத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த அமெரிக்காவின் அதிகாரிகள் நான்கு பேர், சந்தேகத்திற்குரிய நரம்பியல் சார் நோயான 'ஹவானா சிண்ட்ரத்தால்' பாதிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

ஜெனீவாவில் பணியாற்றிக் கொண்டிருந்த மூன்று அமெரிக்க அதிகாரிகளுக்கும்,பாரீஸ் நகரத்தில் ஒரு அதிகாரியும் கடந்த கோடை காலத்தில் இந்த நோயால் பாதிக்கப்பட்டனர்.

இதுவரை கடந்த ஐந்து ஆண்டுகளில் 200க்கும் மேற்பட்டோர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மர்மப் பிரச்சினை தொடர்பாக அமெரிக்க அரசு தொடர்ந்து பணியாற்றி வருவதாக அந்நாட்டின் இராஜாங்கச் செயலாளர் ஆண்டனி பிளிங்கன் கூறினார். அமெரிக்காவின் எதிரிகள், அந்நாட்டு ராஜ்ஜிய விவகார அதிகாரிகளை மைக்ரோவேவைக் கொண்டு இலக்கு வைக்கிறார்கள் என்ற அச்சம் நிலவுகிறது.

அடிமைத்துவ வரலாறு:

## தங்கத் தேரை கைவிட்டது நெதர்லாந்து அரச குடும்பம்



அடிமைத்துவத்துடன் தொடர்புபட்டது என்ற விமர்சனத்தை அடுத்து நெதர்லாந்து அரச குடும்பம் தங்கத் தேரை பயன்படுத்துவதை நிறுத்திக்கொண்டுள்ளது.

குதிரையினால் இழுத்துச் செல்லப்படும் இந்தத் தேர், நாட்டின் கடந்தகால காலனித்துவத்தின் பெருமையை காட்டுவது போல் இருப்பதாக விமர்சனங்கள் எழுந்தன. எனினும் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் நெதர்லாந்து மன்னர்கள் அந்நாட்டு பாராளுமன்றத்தின் திறப்பு நிகழ்வின்போது மாத்திரமே சம்பிரதாயமாக இந்தத் தேரை பயன்பத்தி வருகின்றனர்.

நாட்டின் கடந்த கால வரலாறு பற்றிய விவாதம் வலுத்திருக்கும் சூழலிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்தத் தேர் பெரும் எண்ணிக்கையான மக்களை தாக்குவதை ஒப்புக்கொண்டிருக்கும் நெதர்லாந்து மன்னர் வில்லம் அலெக்சாண்டர் நாடு தனது காலனித்துவ பாரம்பரியத்தை ஒன்றாக எதிர்கொள்ள வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

'எமது காலக் கண்ணாடியின் வழியாக நிகழ்ந்தது பற்றி கண்டிப்பது மற்றும் தகுதி நீக்குவதில் எந்த அர்த்தமும் இல்லை' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இனவாதத்திற்கு எதிரான நெதர்லாந்து அமைப்பு இந்த முடிவை வரவேற்றுள்ளது. எனினும் காலனித்துவ மரபை எதிர்கொள்ள மன்னர் மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

17 ஆம் நூற்றாண்டில் நெதர்லாந்து இந்தோனேசியா, தென்னாபிரிக்கா, கர்கவோ மற்றும் நியுகினியாவின் பெரும் பகுதியை ஆக்கிரமித்ததோடு அட்லாண்டிக் கடல் பகுதியின் அடிமை வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகித்தது.

ஆம்ஸ்டர்டாம் நகர மேயர் அந்த நகர் அடிமை வர்த்தகத்தில் பங்கேற்றது தொடர்பில் கடந்த ஆண்டு உத்தியோகபூர்வமாக மன்னிப்புக் கோட்டார்.

# சீனாவில் தொடரும் கொரோனா பரவல்



சீனாவில் கொரோனா தொற்று பரவலே இல்லை என்ற இலக்கை அடைவதில் பெரும் சவால் எழுந்துள்ளது. அங்குள்ள பல நகரங்களில் ஒமிக்ரோன் வைரஸ் பரவல் நீடித்து வருகிறது.


சீனப் புத்தாண்டும், பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டியும் நெருங்கி வருவதால், கவலை அதிகரித்துள்ளது.

சீனாவில் கடந்த வியாழக்கிழமை 120க்கும் அதிகமானோருக்குக் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. அவர்களில் 41 பேர் பீஜிங் அருகே உள்ள தியான்ஜின் நகரைச் சேர்ந்தவர்கள்.

அங்கு, கடுமையான முடக்கம், பெரிய அளவிலான பரிசோதனை ஆகியவற்றுடன், மற்ற நகரங்களுக்குக்கான பெரும்பாலான போக்குவரத்துச் சேவைகளும் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளன.

வைரஸ் தொற்று இல்லை என்று உறுதி செய்யப்பட்டாலும், நகரை விட்டு வெளியே செல்ல மக்கள் சிறப்பு அனுமதி பெற வேண்டும். பீஜிங் செல்லும் ஒவ்வொருவரும் கண்காணிக்கப்பட்டு பரிசோதனை செய்யப்படுவர். வைரஸ் தொற்று அபாயம் உள்ளவர்கள், தனிமைப்படுத்தப்படுவர்.

## கொவிட்–19: பிரான்ஸில் தொடர்ந்தும் அதிகரிப்பு




பிரான்ஸில் கொவிட் 19 நோய்த்தொற்றின் தீவிரம் குறையவில்லை. கடந்த 24 மணி நேர இடைவெளியில் அந்நாட்டில் புதிதாக 305,000க்கும் அதிகமானோருக்கு நோய்த்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வியாழனன்று பிரான்ஸில் முன்னெப்போதும் இல்லாத அளவில் ஒரே நாளில் 370,000க்கும் அதிகமானோருக்குப் புதிதாக கொவிட்19 நோய்த்தொற்று அடையாளம் காணப்பட்டது.

அந்நாட்டில் கடந்த 7 நாட்களில் சராசரியாக நாள் ஒன்றுக்கு புதிதாக நோய்த்தொற்றுக்கு ஆளானவர்களின் எண்ணிக்கை சுமார் 294,000 ஆக உள்ளது.

இந்நிலையில் பிரான்ஸ், பிரிட்டிஷ் பயணிகளுக்கு விதித்த தடைகளை நீக்கியுள்ளது.

தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் நோய்த்தொற்று இல்லை என்ற சான்றிதழ்களைச் சமர்ப்பித்துவிட்டால் பிரான்ஸுக்குள் அனுமதிப்படுவார்கள்.

ஒமிக்ரோன் திரிபு பரவல் காரணமாக பிரான்ஸ் கடந்த மாதம் 16ஆம் திகதி அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு அறிவித்திருந்தது.

## வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை



வட கொரியா கடந்த இரண்டு வாரங்களில் மூன்றாவது முறையாக நேற்று அடையாளம் தெரியாத ஏவுகணையை வீசி சோதனை செய்திருப்பதாக தென் கொரியா மற்றும் ஜப்பான் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

முந்தைய ஏவுகணை சோதனைகளை அடுத்து அமெரிக்கா வட கொரியா மீது புதிய தடைகளை விதித்த நிலையிலேயே இந்த சோதனை இடம்பெற்றுள்ளது. என்னும் தமது தற்பாதுகாப்பிற்கான உரிமையை விட்டுக்கொடுக்கப் போவதில்லை என வட கொரியா உறுதியாக குறிப்பிட்டுள்ளது.

'வட கொரியா கிழக்கை நோக்கி அடையாளம் தெரியாத ஏவுகணைகளை வீசியது' என்று தென் கொரிய கூட்டுப்படை தளபதி தெரிவித்துள்ளார். எனினும் அது பற்றி வேறு எந்த விபரத்தையும் அவர் வெளியிடவில்லை.

பலிஸ்டிக் ஏவுகணை அல்லது ஏவுகணைகள் என்று தோன்றக்கூடிய ஏவுகணைகளை வட கொரியா உள்ளூர் நேரப்படி 14 மணி 55 நிமிடங்களில் ஏறிந்ததை அவதானிக்க முடிந்ததாக ஜப்பான் எல்லையோர காவல்படை தெரிவித்தது.

வட கொரியா கடந்த ஜனவரி 5 மற்றும் 11 ஆம் திகதிகளில் ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளை வீசி சோதனை செய்ததாக அறிவித்திருந்தது.

## தனிமைப்படுத்தல் காலத்தினை குறைக்க அவுஸ்திரேலியா முடிவு



அவுஸ்திரேலியா, அத்தியாவசிய ஊழியர்களுக்கு கொவிட் 19 தனிமைப்படுத்தல் விதிகளைத் தளர்த்தவுள்ளது.

ஊழியர் அணியிலும், விநியோகத் தொடரிலும் நெருக்கடியைக் குறைக்க அது உதவும்.

வைரஸ் தொற்றுக்கு ஆளானோருடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு அறிகுறி ஏதும் இல்லாமல், பரிசோதனையில் நோய்த்தொற்று இல்லை என்று தெரிய வந்தால் அவர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பலாம்.

அதன் மூலம் பல்லாயிரம் பேர் ஊழியரணிக்குத் திரும்பமுடியும்.

கல்வி, போக்குவரத்து, அவசரச் சேவைப் பிரிவுகளில் வேலை செய்வோருக்கு அது பொருந்தும்.

வைரஸ் பரவலால், பலர் வேலைக்குச் செல்லத் தவறுவதால், அவுஸ்திரேலியாவில் கடுமையான ஊழியர் பற்றாக்குறை நிலவுகிறது.

தனிமைப்படுத்தல் விதிகள் தளர்த்தப்படவில்லை என்றால், ஒரே நேரத்தில் ஊழியரணியின் பத்து வீதத்தினர் வேலைக்குச் செல்லாமல் இருக்கக்கூடும் என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

## தலிபான்களை விமர்சித்த பிரபல பேராசிரியர் கைது



தலிபான்களின் ஆட்சியையும் அதன் தலைமையையும் கடுமையாக விமர்சித்தார் எனக் குறிப்பிட்டு ஆப்கானிஸ்தான் பல்கலைக்கழகத்தின் பிரபல பேராசிரியர் பைசுல்லா ஜலால், காபூலில் கைது செய்யப்பட்டுள்ளார்.

காபூல் பல்கலைக்கழகத்தில் நீண்ட காலமாக சட்டம் மற்றும் அரசியல் விஞ்ஞானப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் இவர், தொலைக்காட்சி கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில் அவ்வப்போது கலந்து கொண்டு, ஆப்கானிஸ்தானின் நிதி நெருக்கடிக்கு தலிபான்களைக் குற்றம் சாட்டியதோடு வலுக்கட்டாயமாக ஆட்சி செய்வதாகவும் விமர்சனம் செய்தார்.

இந்நிலையில் பேராசிரியர் ஜலாலின் மனைவி மஸூதா, தனது கணவர் தலிபான் படையினரால் கைது செய்யப்பட்டு அடையாளம் காணப்படாத இடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தமது பேஸ்புக்கில் பதிவிட்டுள்ளதாக அல் ஜஸீரா தெரிவித்துள்ளது. ஆப்கானிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி ஹமீத் ஹர்சாயியை எதிர்த்து 2004 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட முதல் பெண் வேட்பாளர் மஸூதா என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நகர்வலம்



# பாடசாலை மட்டத்தில் கொவிட்19 தடுப்பூசி தொடர்பில் விழிப்புணர்வை வழங்கவும்





கொரோனா தடுப்பூசிகள் முடிந்தளவு விரைவில் அனைவருக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். பாடசாலைகள் மூலம் மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆலோசனை வழங்கியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் (13.01.2021) நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அவர் இதுதொடர்பில் கருத்து தெரிவிக்கையில், கொரோனா தடுப்பூசிகளை முடிந்தளவு விரைவில் அனைவருக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். பாடசாலைகள் மூலம் மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இதனிடையே, மக்களின் தேவைகளையும் பிரதேசத்தின் அபிவிருத்தியையும் முதன்மைப்படுத்தி வனப்பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள காணிகளில் கணிசமானவற்றை எதிர்வரும் ஆறுமாத காலத்தில் விடுவித்துக் கொள்ள முடியும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப்பணிப்பாளர், கொரோனா தடுப்பூசிகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் டெங்குப் பரவலை கட்டுப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக பாடசாலை மட்டங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிலவகையான கொரோனா தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதால் மலட்டுத்தன்மை ஏற்படும், மரணம் ஏற்படும் போன்ற தவறான கருத்து சமூகத்தில் பரவி இருப்பதனால் பாடசாலை மாணவர்களுக்கு, குறிப்பாக மாணவிகள் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதற்கு பெற்றோர் எதிர்ப்புத் தெரிவிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார். எனவே தடுப்பூசிகள் அனைத்தும் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்டவை என்பதால் பொதுமக்கள் எந்தவிதமான தயக்கமும் இன்றி தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, டெங்கு நோய் பரவுவதற்கான ஏதுநிலைகள் காணப்படுவதுடன் இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் 39 டெங்கு நோயாளர்கள் அண்மைக்காலத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார்.

எனவே மக்களுக்கு உரிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.



சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்ட கற்பிட்டி பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஆலங்குடா பிரதேச மக்களுக்கு தலா 11000/= ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் வேண்டுகோளின் பேரில் தனியார் தொண்டர் நிறுவனத்தின் அனுசரணையில் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.

படம் மாளிகைக்காடு குறூப் நிருபர்)



புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விசுவமடு ரூபன் முன்பள்ளி மற்றும் சிவநகர் திலக் முன்பள்ளியில் பொங்கல் செய்வதற்கு தேவையான அனைத்துப் பொருட்களும் அடங்கிய பொதி நேற்றைய தினம் அவர்களின் பெற்றோருக்கு அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

படம் மானிப்பாய் தினகரன் நிருபர்

## புதுமாத்தளன் கடற்கரை உழவு இயந்திர பாகங்கள் தொடர்பில் அகழ்வு பணி

மாங்குளம் குரூப் நிருபர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுமாத்தளன் கடற்கரைப்பகுதியில் மண்ணுள் புதையுண்ட உழவு இயந்திரத்தின் பாகங்கள் சில மீனவர்களால் அண்மையில் மீட்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடல் சீற்றம் அதிகமாக காணப்பட்டமையால் கடலலையின் தாக்கம் காரணமாக புதுமாத்தளன் கடற்கரைப் பகுதியில் யுத்தகாலத்தின் போது புதைக்கப்பட்ட உழவு இயந்திரத்தின் பாங்கள் சில கரையில் அடையாளம் காணப்பட்டது.

உழவு இயந்திரத்தின் பெரிய ரயர்கள் உள்ளிட்ட பாகங்கள் கடற்கரையில் தென்பட்டுள்ளதுடன் இரும்பு துண்டுகளும் இனங்காணப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பொலிஸார் அப்பகுதிக்கு சென்று பார்வையிட்டுள்ளதுடன், உழவு இயந்திரத்தின் பாகங்களை நீதிமன்ற உத்தரவிற்கு அமைய தோண்டிப் பார்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுத்திருந்தனர்.

அதற்கமைய நீதிமன்ற உத்தரவுக்கு அமைய குறித்த பகுதியில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. பொலிஸார், இராணுவத்தினர், கடற்படையினர், கிராம அலுவலர், நீதிமன்ற பிரதிநிதிகள் என பலர் முன்னிலையில் இந்த அகழ்வுப்பணி முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன்போது உக்கிய நிலையில் உழவு இயந்திரத்தின் பாகங்கள் சில காணப்பட்ட நிலையில் அகழ்வு பணி நிறைவடைந்துள்ளது.

## அனுர குமார திசாநாயக்க எம்.பி புத்தளம் விஜயம்

(புத்தளம் தினகரன் நிருபர்)

ஜேவிபி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தோழர் அனுர குமார திசாநாயக்க இன்று 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை புத்தளம் நகருக்கு விஜயம் செய்யவுள்ளார்.

"சீரழிந்த தேசத்தைக் கட்டியெழுப்பும் தீர்வு" என்ற தலைப்பில் தேசிய மக்கள் சக்தி நாடு தழுவிய ரீதியில் நடாத்தும் கலந்துரையாடல் இம்முறை புத்தளம் நகரில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காக அனுர குமார திசாநாயக்க எம்.பி புத்தளம் நகருக்கு வருகைதரவுள்ளார். இன்று மாலை 2.30 முதல் புத்தளம் நகர மண்டபத்தில் நடைபெறும் புத்தளம் தேர்தல் தொகுதி கலந்துரையாடல் அமர்வுக்கு வருகை தருமாறு ஜே.வி.பி புத்தளம் செயற்பாட்டாளர் தோழர் ஹிஷாம் ஹுஸைன் அழைப்பு விடுத்துள்ளார்.

இக் கலந்துரையாடல் உரைகள் தமிழ் மொழியாக்கம் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## பஸ்- டிப்பர் வண்டி ஒன்றோடு ஒன்று மோதி விபத்து

### 11 ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் படுகாயம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்



வவுனியா கெப்பித்திகொள்ளாவ ஏ 22 பிரதான வீதியின் கெலேபுளியன்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த 11 ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 5.45 மணியளவில் கெப்பித்திகொள்ளாவ கெலேபுளியன்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். காயமடைந்தவர்களில் ஒன்பது பெண் ஊழியர்களும் வஸ்வண்டியின் சாரதி உட்பட மூன்று ஆண்களும் அடங்குகின்றனர். காயமடைந்தவர்களில் இரு பெண் ஊழியர்கள் பலத்த காயமடைந்துள்ளதுடன் ஏனையவர்களுக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது. வவுனியா பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் கடமைபுரியும் ஊழியர்களை நேற்றுமுன்தினம் மாலை தமது சொந்த இடங்களுக்கு அழைத்துச் சென்ற போது இரண்டு பஸ் வண்டிகளுடன் டிப்பர் வண்டியொன்று மோதியமையால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. காயமடைந்த ஊழியர்களை கெலேபுளியன்குளம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கெப்பித்திகொள்ளாவ பொலிஸ் நிலையப் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் 12/01/2022 புதன்கிழமை சிறுநீரக நோயாளர்களின் பயன்பாட்டிற்காக 24இலட்சம் ரூபாய் பெறுமதியான இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

படம் சாவகச்சேரி விசேட நிருபர்சஜித்

## புத்தளத்தில் தொழில்நுட்ப கல்லூரியொன்றை ஆரம்பிக்குமாறு அலிசப்ரி ரஹீம் எம்.பி கோரிக்கை

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் நகரில் தொழில்நுட்ப கல்லூரி ஒன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு திறன்கள் அபிவிருத்தி தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சீதா அரம்பேபொலவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் தெரிவித்தார்.

ஆனமடுவ தொழில்நுட்ப கல்லூரியில் சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட போதே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவிக்கையில்,

புத்தளம் நகரில் இருந்து பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் ஆனமடுவ தொழிநுட்ப கல்லூரிக்கு செல்கின்றனர்.

இதனால் அந்த மாணவர்கள் போக்குவரத்து, மொழி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே, மாணவர்களின் நலன் கருதி புத்தளம் நகரில் தொழில்நுட்ப கல்லூரி ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், அதுவரை ஆனமடுவ தொழில்நுட்ப கல்லூரியில் தமிழ் பேசும் மாணவர்கள் நலன் கருதி ஒருசில பாடங்களை தமிழ் மொழியில் கற்பிக்க நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தேன். அத்துடன், இது தொடர்பில் இராஜாங்க அமைச்சரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளேன்.

இதுதொடர்பில் கவனம் செலுத்துவதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சீதா அரம்பேபொல, விரைவில் புத்தளம் நகரில் தற்காலிகமாக தொழிநுட்ப கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் வாக்குறுதி அளித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் மேலும் கூறினார்.

## மதுரங்குளி கணமூலையில் புதிய மருந்தகம்

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் மதுரங்குளி கணமூலையில் தாருஸ்ஸலாம் மத்திய மருந்தகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. கணமூலை தாருஸ்ஸலாம் ஜனாஸா நலன்புரி சங்கம் மற்றும் கணமூலை பெரிய பள்ளிவாசல் பரிபாலன சபை ஆகியன இணைந்து இந்த மருந்தகத்தை ஆரம்பித்துவைத்துள்ளனர்.

தாருஸ்ஸலாம் ஜனாஸா நலன் புரிச்சங்க தலைவர் எம்.எஸ்.எம். முஸம்மில் தலைமையில் நடைபெற்ற இதன் ஆரம்ப நிகழ்வில் வடமேல் மாகாண கூட்டுறவு வைத்தியசாலை பணிப்பாளர் வன்னிநாயக ஜயபத்ம, முந்தல் பிரதேச செயலாளர் விஜானி வசந்திகா, புத்தளம் வலய பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.பீ.எஸ். ஜயமஹ, ஜனாஸா நலன்புரி சங்க அங்கத்தவர்கள் மற்றும் பள்ளிவாசல் பரிபாலன சபை அங்கத்தவர்களும் கலந்து சிறப்பித்தனர்.



## அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரின் தொழிற்சங்க நடவடிக்கை நியாயமானது

(தலைமன்னார் விஷேட நிருபர் )



மருத்துவ தொழிலை பாதிக்கும் தீர்க்கப்படாத பிரச்சினைகளை முன்வைத்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் தொழிற் சங்க நடவடிக்கையானது நியாயமானது. இப்பிரச்சினை வன்னி மாவட்டத்திலும் காணப்படுவதாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சுகாதார அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 21.12.2021 முதல் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நிர்வாக குழு மற்றும் பொது சபையின் அனுசரணையுடன் அரச வைத்திய அதிகாரிகள் நாடளாவியரீதியில் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

அதாவது மருத்துவத் தொழிலை பாதிக்கும் தீர்க்கப்படாத பிரச்சினைகளை முன்வைத்தே அரச வைத்திய அதிகாரிகள் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வைத்திய அதிகாரிகளால் தீர்வுக்காக முன்னெடுக்கப்பட்டுள்ள இப்பிரச்சினைகள் எனது தேர்தல் தொகுதியான வன்னி மாவட்ட வைத்தியசாலைகளிலும் காணப்படுகின்றது.

கலைக் கதம்பம்

சைத்ரியன்

# "உன் பொருட்டு எழுந்த அலர்"

## பாதிக்கப்பட்ட தோழியின் சாடல்



களவுக் காலத்தில் தலைவனின் வருகையில் சிலவேளை இடையீடு ஏற்பட்டுவிட்டால் தலைவி மிகவும் வருந்துவாள்.

தன்னை விரும்பும் தலைவன் தன்னை களவில் கண்டு கூடியதில்லை என்று ஒருவேளை பொய்யாக சூளுரைத்து விட்டால் என்ன செய்வது? அப்பொழுது சாட்சிக்கு யாரை அழைப்பது? என்ற மனக்கலக்கம் தலைவியிடம் ஏற்படுவதுண்டு.

இவ்வாறு வருந்தும் தலைவி ஒருத்தியின் மனநிலையை கபிலர் குறுந்தொகையில் எடுத்துரைக்கின்றார். இவ்வாறு தலைவன் பொய்ச் சூள் உரைக்கும் நிலை ஏற்பட்டுவிட்டால் அது இரங்கத் தக்கதாகி விடும்.

தனக்கும் தலைவனுக்கும் இடையேயான களவினை ஊரார் அறிந்துவிட்டால் எழக்கூடிய 'அலர்'மற்றும் 'அம்பல்' தூற்று தலுக்கு அஞ்சும் தலைவியின் 'பெண் தன்மை'யை தலைவன் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் பொழுது தலைவியின் நிலை இரங்கத் தக்கதா கிவிடும்.

ஏதோ காரணத்தால் தலைவன் அவளை திருமணம் செய்து கொள்ள மறுக்கும் பொழுது தலைவி தனக்குரியோரிடம் அதனை தெரிவிப்பாள். பின்பு அவ்வூரிலுள்ள சான்றோரின் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை நடைபெறும். தலைவனது கூற்று பொய் என்று நிரூபிக்கப்பட்டால் அவனுக்கு உரிய தண்டனை சபையினரால் உடனே வழங்கப்படும். அந்தத் தண்டனை என்ன என்பதை தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார் பாடல் (அகநானூறில்) கூறுகிறது.

தலைவன் ஒருவன் தனது இல்லத்தில் தன் மனைவியுடன் உறைந்து இருந்து மகிழ்வதை தவிர்த்து பரத்தையர் சேரி சென்று தங்கிவிட்டு பின்பு தனது இல்லத்திற்கு திரும்புகிறான். இதனை அறிந்த தலைவி தலைவனின் மீது சினம் கொள்கிறாள். வீட்டினுள் நுழைய அவன் தடுக்கப்படுகின்றான்.

அப்பொழுது தோழி பின்வருமாறு கூறுகின்றாள்.

தலைவனே நீ பொய் கூறாதே. உன்னுடைய வஞ்சனையை நான்அறிவேன்.உனது பரத்தமை செயல் வெளிப்பட்டமையை நீ அறியவில்லை.

நேற்றைய தினம் மையுண்ட அழகிய கண்களையுடைய பரத்தையுடன் வைகை யாறு புதிய நீரில் ஆடி நீ மகிழ்ச்சியுடன் இருந்தாய். இதனை அறிந்துவிடாமல் பரத்தையர் கூட்டம் மறைத்தாலும் மறைக்க முடியாமல் ஆகிவிட்டது.

அதாவது ஊர் சிரித்து விட்டது. அது எப்படி இருந்தது தெரியுமா?

என மேலும் அவள் தொடர்ந்து கூறுகிறாள். இக்கூற்று தான் அத்தண்டனை குறித்துக் கூறுகிறது. கள்ளூர் என்றொரு ஊர் இருந்தது. அங்கு அறமற்ற இளைஞன் ஒருவன் இளைய பெண் ஒருத்தியை காதலித்தான்

பின்பு அவளது அழகினையும் கவர்ந்து கொண்டு விட்டான். ஆனால் பிந்தைய ஒரு நாளில் நான் இவளைப் பார்த்தறியேன் என்று சூளுரைத்தான். இந்த சூழ்நிலையானது பொய் என்பது அவ்விருவரின் களவு கூட்டத்தை அறிந்த சான்றோர் சிலரால் நிரூபிக்கப்படுகிறது

ஆதலால் அவர்கள் இரங்கத்தக்க அத்தலைவிக்கு சாதகமாக சாட்சி கூறுகின்றனர் ஏமாற்றும் அவனை தண்டிக்கவும் முடிவெடுக்கின்றனர்.

அவனுக்கு வழங்கப்படும் தண்டனையை கூடியிருந்த மக்கள் மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தனர். அவர்கள் செய்த அந்த ஆரவாரத்தை விட பெரியதாயிற்று என்று உன் பொருட்டு எழுந்த அலர் என்கிறாள் தோழி.

அக்காலத்தில் பெரிய குற்றங்களின் தீர்வு காண அரசவைக்கு செல்ல வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால் இதுபோன்ற ஊர் அளவிலான காதலித்தல் தொடர்பான குற்றங்கள் ங்கள் அந்தந்த ஊரிலுள்ள சான்றோரால் விசாரிக்கப்பட்டு அவற்றிற்குரிய தண்டனைகள் வழங்கப்பட்டு வந்தன என்பதை அறிய முடிகிறது.

எவ்வாறாயினும் காலந்தோறும் காதல் விவகாரத்தில் ஆண்களே பொய் கூறியும் ஏமாற்றியும் வந்திருக்கின்றனர் என்பதை அறியும் போது சற்று கவலையாகத்தான் உள்ளது.

எஸ்.சுப்புரெத்தினம்...



# தை பிறந்தால்...

தைப்பிறந்தால் இனிமைகளே
தரணியெங்கும் நிறைத்திருக்கும்
பொய்மைகொண்ட மயக்கமெல்லாம்
புவியினிலே புதைந்திருக்கும்

வாய்மையது வையமெல்லாம்
வாழ்த்தோடு காத்திருக்கும்
நெய்மணக்கும் பொங்கலதும்
வாயோடு மணத்திருக்கும்.

தொற்றிவந்த தொற்றெல்லாம்
துயருற்று வீழ்ந்திருக்கும்
வற்றிருக்கும் ஏரியெல்லாம்
வயிர்நிரம்பி மகிழ்ந்திருக்கும்

முற்றிவிட்ட தானியங்கள்
முற்றத்தில் கொட்டிருக்கும்
உற்றவொரு உறவெல்லாம்
ஒன்றுமையாய் வாழ்ந்திருக்கும்.

புத்தாடை அணிவதிலே
பேரின்பம் பொங்கிவரும்
புத்தரிசி பொங்கலிட
புதுமணமும் கூடிவரும்

எத்திசையும் பொங்கலோ
பொங்கலென போற்றுகின்ற
வித்தகமாய் மகிழ்வலைகள்
சேர்ந்தங்கு தவழ்ந்துவரும் !

பழமைகளைக் கழித்துவிட்டு
புதுவாழ்வு வாழ்ந்திடவும்
இழந்திருக்கும் இன்பநிலை
இனியிங்கு கண்டிடவும்

குழந்தைகளின் கூட்டமெல்லாம்
கொண்டாடி மகிழ்ந்திடவும்
அழகான தைபொங்கல் வந்ததுவே !

மு.செல்வராசன்

# "நதிகளின் தேசியகீதம்"

## கவிதை நூல் வெளியீட்டுவிழா

சம்மாந்துறை மஸூறா .ஏ.மஜீத் எழுதிய கவிதைகளின் தொகுப்பான "நதிகளின் தேசியகீதம்"கவிதை நூல் வெயியீட்டு விழா மருதமுனையில் நடைபெற்றது.

எழுத்தாளர் எம்.எம்.நௌசாத் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் பிரதமஅதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் றமீஸ் அப்துல்லா கலந்துகொண்டார்.





கவிஞர்.எம்.ஐ.அச்சிமுகம்மட் வரவேற்புரை நிகழ்த்த பேராசிரியர் செ.யோகராசா நூல்நயவுரை நிகழ்த்தினார்.பிரதமஅதிதியான பேராசிரியர் றமீஸ் அப்துல்லா தமதுரையில்;

ஈழத்துத் தமிழ் பேசும் சமூகத்தின் ஓர் அங்கமான முஸ்லிம் பெண்களும் எழுத்துத்துறையில் அக்கறை காட்டினர்.அந்தவகையில் முதன்மையானவராகக் குறிப்பிடவேண்டியவர் பெண் ஆழுமை சம்மாந்துறை மஸூறா.

இவர் 1979ஆம் ஆண்டுகாலப்பகுதியில் கவித்துறைக்குள் பிரவேசித்திருக்கின்றார். ஓவியம் வரைவதிலும் தனதுஈடுபாட்டைக்காட்டிவருகின்றார். அறுவடை இவரதுமுதல் கவிதையாகும். புன்னகை சஞ்சிகையின் ஆசிரியையான இவர் புதுக்கவிதைஉலகில் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாவார்.

பெண்களின் உணர்வுகள் என்றஅடிப்படையில் இவரது கவிதைகள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. கவிதையுலகு ஆய்வு செய்வது மிகக் கஸ்டமானது.சுமார் நாற்பது வருடஅனுபவமுள்ள எழுத்தாளரின் பதினைந்துவருடக் கவிதைகள் மாத்திரமே இங்குபதிவாகியிருக்கின்றன. நீண்டகால அனுபவமுள்ள எழுத்தாளரின் மிகக் குறைந்தளவிலான கவிதைகளைக் கொண்ட தொகுதி நமக்கு மிகக் காலம் தாழ்த்தியே கரம் எட்டியிருக்கிறது என்றார்.

கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸ் தமதுரையில்;

புதுமைநோக்கும் ஆவேசமும் புதியபலமும் கொண்டகவிதைகளை 90 களில் தந்தவர் என்றவகையில் இன்றுஎழுதுகின்ற பெண் கவிஞர்களுக்குஆதர்சமாக அமைந்த மூத்தகவிஞர் என்ற முக்கியத்துவம் பெறுகின்றார். அன்றைய பெரோஸா ஹூசைன்,விலங்கிடப்பட்ட மானிடம் தந்தசுல்பிகா,இளைய சுல்பிகா,கலைமகள் ஹிதாயா போன்ற கவிஞர்களின் வரிசையில் மலர்ந்திருப்பவள் மஸூறா என்றால் அது மிகையாகாது.

இம்சிக்கும் தூசுகளைக் கழுவிஅகழவுகளைத் தாண்டிபொங்கிப் பிரவாகிக்கையில் காட்டாறாக ஓடுகிறார்.அநியாயங்களைக் கண்டுஅவற்றைச் சுடர்விட்டுப் பொசுக்கும் தீயாகச் சுட்டெரிக்கின்றார் அன்பிற்கினியவர்களின் பாதைமுழுக்கவெளிச்சம் பாய்ச்சும் நிலவாகநம்மிடையே எறிக்கிறார்.

இந்தக் கவிதைத் தொகுதியில் அநேகமான கவிதைகள் பெண்கள் பற்றியதாகவே இருக்கின்றன. பொதுவாக பெண்ணை இயற்கையோடுஅல்லது பஞ்சபூதங்களோடு ஏற்றிவைத்துப் படிமப்படுத்தும் அவர்களுக்கெதிரானவன் முறைகளைஒடுக்குதல்களை,சுரண்டல்களைபல இடங்களில் ஆவேசத்துடனும்சிலகட்டங்களில் நாசூக்காகவும் பகிர்ந்துகொள்வதைக் காணலாம் எனத் தெரிவித்தார்.

பி.எம்.எம்.ஏ.காதர்...
(படங்கள்; மருதமுனை தினகரன் நிருபர்)

# வடக்கின் பாரம்பரிய கலைகள்

தமிழர்பிரதேசங்களில்வழங்கிவரும்பாரம்பரியம் சார்ந்தகலைகளை அழிய விடாது பேணிப்பாதுகாக்கவேண்டும் என்ற நோக்கில் இரண்டாயிரமாண்டுநெடுந்தீவில் ஆட்டுவணிக் கூத்துமேடையேற்றப்பட்டது.

புனிதயாகப்பர்ஆலயநாடகமன்றத்தினர் அண்ணாவியார்யாக்கோப்புஅடைக்கலமுத்துவின்நெறிப்படுத்தலில் இக்கூத்து மேடையேற்றப்பட்டது.

தமிழ்மொழியின்வளர்ச்சிக்குதமிழர்களுடையபண்பாட்டைபிரதிபலிக்கும் கலைகளைவளர்க்கவேண்டும்என்ற எண்ணத்துடன்இத்தகையஆற்றுகைக்கலைகளைவளப்படுத்திவந்தனர்.

அந்தவகையில்ஆட்டுவணிகன்நாட்டுக்கூத்தில் பலதுடிப்புமிக்ககலைஞர்கள்பாத்திரமேற்று நடித்துள்ளனர்.

பொருளாதாரவசதிவாய்ப்புக்கள்குறைவான சூழலில்இத்தகையநிகழ்வுகளைநடாத்துவதற்கு நெடுந்தீவின்மக்களின்முயற்சியும், ஆர்வமுமேகாரணம்எனலாம்.

இக்கூத்தின் மூல கருப்பொருள்"அறியாமைகரணமாகவோஅல்லதுஏனையவர்களின் சூழ்ச்சிமிக்கநயவஞ்சகஎண்ணங்ளுக்குஇடமளிப்பவனாகவோஇருந்தால்இறுதியில்அத்தகையஆட்சிஅழிவுற்றுவிடும்"என்பதாகும்.

"பொன்னூல்செபமாலை" எனும்நாட்டுக்கூத்துதமிழர்பண்பாட்டைப்பிரதிபலிக்கும்நாட்டுக்கூத்துக்களைஇத்தீவின்இளம்தலைமுறையினர்மேற்கொண்டுவந்தமுயற்சிசிறப்புக்குரியதெனலாம்.

அண்ணாவியார்சைமன்யேசுதாசனின்நெறிப்படுத்தலில்மேடையேற்றப்பட்ட " பூதத்தம்பி" நாட்டுக்கூத்து. மற்றும்அதேமாதத்தில் அண்ணாவியார்யாக்கோப்புஅடைக்கலமுத்துவின்நெறிப்படுத்தலில்மேடையேற்றப்பட்ட "ஆட்டுவணிகன்" நாட்டுக்கூத்துஅதேபோன்றுஅண்ணாவியார்டொ .

இராசநாயகத்தின்நெறிப்படுத்தலில் "பொன்னூல்செபமாலை" நாட்டுக்கூத்து என்பனநெடுந்தீவுமண்ணில்மேடையேற்றப்பட்டது.



இக்கூத்தில் பல இளமைத்துடிப்புமிக்க இளங்கலைஞர்கள்நடித்துள்ளார்கள். தமிழ்மொழியின்வளர்ச்சிக்கும்அதன்வழிவந்தகலைகளின்வளர்ச்சிக்கும்கிறிஸ்தவர்கள்ஆற்றியபணிகள்மகத்தானவை. ".இத்தகையவாழ்வியல்முறைகளைகையாளும்நெடுந்தீவுவாழ்மக்களின்சீரியபடைப்பே "பொன்னால்செபமாலை" நாட்டுக்கூத்துஎனலாம்.

இதுசமயக்கருத்துக்களைக்கூறுவதுடன்சமயவாழ்வுஎது? இவற்றைக்கடைப்பிடிப்பதால்ஏற்படும்நன்மைகள்என்ன? எனப்பல்வேறுபட்டஅம்சங்களைக்கொண்டுஆற்றுகைப்படுத்தப்பட்டவடிவமேஇக்கூத்து. இக்கூத்தின்கதைச்சுருக்கம்"சொர்ணமாபுரிஎன்னும்நாட்டைபாலராசன்என்பவன்மனைவி, மகன்பாலசூரன், மந்திரி, சேனைத்தளபதி, காவலர்கள், படைசூழநல்லாட்சிபுரிந்துவந்தான். பாலராசன்சொர்ணமாபுரியைஆட்சிசெய்தசமகாலத்தில்சிற்றரசனானபாலவாசனுக்குசிற்றரசன்வலேந்திரியான்திறைசெலுத்திவருபவன். இவன்நீண்டகாலமாகதிறைசெலுத்தாத காரணத்தினால்தன்தளபதியைஅனுப்பிதிறைகேட்கிறான். அவன்மறுத்ததால்இருவரும்போர்புரியஆயத்தம்செய்கின்றனர். இதில்மன்னன்பாலராசனின்தளபதிதோல்விஅடைகின்றான்இதைஅறிந்தபாலராசன்அன்னைமரியாளிம் அருள்வேண்டிநிற்கின்றான். அன்னை மரியாள்தாயின்அருளால்தேவதூதன் மூலமாகபொன்னூல்செபமாலையும், மந்திரவாளும்பாலராசனுக்குகிடைக்கப்பெறுகிறது. அதன்பின்னர்பாலராசன்வலேந்திரியானைதோற்கடித்துகாட்டுக்குதுரத்திவிடுகின்றான். இவ்வாறுதுரத்தப்பட்டவலேந்திரியன்கானகம்சென்றுகொள்ளைத்தொழிலில்ஈடுபடுகிறான்.

பாலராசனின்மகனானபாலசூரன்தன் பெற்றோரிடம்வேட்டைக்குச்செல்லஅனுமதிகேட்டுசெல்கிறான். அங்குவழிமாறித்தன்னந்தனியேபாதைதெரியாமல்அலைந்துதிரிந்தபோதுஓர்இடையனைச்சந்திக்கிறான். அவனும்பாலசூரனின்ஆடைகளில்பெரும்விருப்பம்கொண்டுஅவனுடன்சண்டையிட்டான். இறுதியில்வெற்றிபெற்றபாலசூரன்அக்காட்டில்நந்தவனத்தைகாண்கிறான்அங்குசென்றுஇயற்கையைஅனுபவித்துக்கொண்டிருந்த போதுவலந்திரியானின்மகளானமனோரஞ்சிதத்தைக்கண்டுகாதல்கொள்கிறான் .

இவ்வாறுபொன்னால்செபமாலைஎனும்நாட்டுக்கூத்தின்கதையம்சம்நீட்சியுற்றுச்செல்கிறது. இக்கூத்துகிறிஸ்தவசின்னங்களின்அளப்பெரியமகிமையைக்கொண்டசெபமாலையின் சிறப்பையும், கிறிஸ்தவமக்களின்வாழ்க்கைமுறையினையும்எடுத்துக்காட்டுகிறது. இவற்றோடுஇக்கூத்துக்கள்அரங்கேற்றம் செய்யபெரும்தொகையானபணத்தைசெலவிட்டும், அதிகமனிதஉழைப்பைப்பயன்படுத்தியும்திறந்தவெளிகளில்அரங்கமைத்துஇரவு, பகலாகவும், இரண்டுமூன்றுநாட்கள்எனத் தொடர்ச்சியாகவும்நாட்டுக்கத்துக்கள்மேடையேற்றப்பட்டுள்ளன. இவ்வாறாகஆடலும் பாடலுமாகவரலாற்றுக்கதைகள்பலவற்றைஎடுத்துரைத்துஅதன்சிறப்புக்களைஎடுத்தியம்பும்ஆற்றல்மிக்கவையானநாட்டுக்கூத்துக்கள்வளர்ச்சியுற்றதற்குகுடாநாட்டின்மூத்தஅண்ணாவிமார்களும், கூத்துக்கலைஞர்களும், கூத்துப்பரம்பரையில்வந்தவர்களும்சான்றாகவுள்ளனர்.

இவ்வாறு நெடுந்தீவின்கூத்துக்கள் பல இன்றும் நடைபெற்று வருகின்றன..இதனை முன்னெடுத்து செல்பவர்களாக நெடுந்தீவின் இளையோர் சமுதாயம் முன்னுதாரணமாக திகழ்ந்து வருகிறது.

ரமேஷ் ரெஜினா...
(யாழ். பல்கலைக்கழகம்)

# புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்

## பொங்கலோ பொங்கல்



உழைப்பை சுரண்டாத சூரியன்,
லாபத்தில் பங்கு கேட்காத ஆறு,
குத்தகைக்கு கொட்டி தீர்த்த மழை,
வயல்களில் கொல்லப்பட்ட பூச்சிகள்,
பயிருக்காக அழிக்கப்பட்ட களைகள்,
உரமுண்டு வாழ பழகிய மண்புழுக்கள்,
தலைமுறை உருவாக்க முடியாத விதைகள்,
இயந்திர உழவில்
சாணம் எதிர்பார்த்த நிலங்கள்,
இவைகள் நடுவே ,
நியாய விலைக்கடை பச்சரிசியில்
பொங்கல் பொங்க....
விவசாயிகளின் கோசம்
பொங்கலோ பொங்கல்

சிவனேஷ் பூசைத்துரை



## அனுசரித்துப் போதல்

இரை தேடிச் சென்றலைந்து
மிகு சோர்வுடன்
கூடடையும் அப்பாவிற்கு
இன் முகத்துடனான
ஒரு வரவேற்பு இல்லை
பொய்யாகவேனும் முகமலர்ந்த
ஒரு கீசா புன்னகை இல்லை
ஆறுதலான நாலைந்து
வார்த்தைப் பரிமாறல்கள் இல்லை
ஆவி பறக்க தயாரித்த
ஒரு கப் தேநீரில்லை
ஒரு ஆற்றுப்படுத்தல் இல்லை
ஒரு ஊடல் இல்லை
ஒரு கூடலும் இல்லை
இயல்பையும் மீறி
பிறர் போல் வாழ அவாவும்
அம்மாவின் ஓயா நச்சரிப்பால்
கூட்டின் அமைதி
நிலை குலைந்து போதல் தரும்
பிடிப்புகளற்றுப் போயிடினும்
கிடந்து களிந்து அனுசரித்து
தமக்கு வாய்த்த வாழ்வு இதுவென்று
வாழ்ந்து தொலைக்கலாயினர்
தன் குஞ்சுகளுக்காக அப்பாக்கள்

ஜமீல்

## அழகென்பது...

அழகென்று நீங்கள் எதனை
உச்சரிக்கின்றீர்கள்

நிறத்தையா
தோலையா
உயரத்தையா
நிறையையா

உங்கள் நாவுகள்
எச்சிலூறுவதெலாம்
இவற்றுக்காகத்தானே
இவற்றுக்கு மட்டும்தானே

புறத்தோற்றம்தானே உங்கள்
அகத்தினில் ஆணி அடிக்கின்றது

பண்பாடுகளும் நல்ல
பண்புகளும்
குணங்களும் நல்ல
மனங்களும் உங்கள்
அகங்களை ஏன் அகத்துறிஞ்ச
மறுக்கிறது....
மறுக்கிறதா
மறக்கிறதா...

எனைக்கேட்டால்



உங்கள் அகராதியில் அழகென்பது
புறத்தோலைத்தான்
அனுமானிக்கின்றதென சொல்வேன்

## கருமேகம் சூழ்ந்த வானம்



பகல் வானில் திரண்டு
நிற்கும் கரிய மேகமென
பரிசுத்தமான ஆடைகளுடன்
கறைகள் படிந்த உள்ளங்கள்

ஒப்பனை முகங்கள் போன்று
ஒட்டாத வார்த்தைகள் பல
சுருங்கிய மனங்களிலிருந்து
நெளியும் நாவின் வழியே

பிறரது வெற்றியைக் கண்டு
துளிர்விடும் பொறாமை இங்கு
மறைத்திடும் அறிவுக் கண்ணை
ஏற்றிடும் தீய எண்ணத்தை

வாழ்க்கையின் வறுமையை மிஞ்ச
வார்த்தைகளில் பெருகும் பஞ்சம்
வாழ்த்திடும் எண்ணம்தான் இன்றி
அழுத்தமாய் பூட்டிய அதரங்கள்

பரந்து விரிந்த பாரினில்
குறுகிச் சிறுத்த மனங்கள்
குருடராய் மாறிடும் தனவந்தர்கள்
ஏழையின் கூவல் அநாதையாய்

மலையளவு குவிந்த தேவைகள்
கையளவாய் குறுகிய மனது
பறித்தெடுத்தவன் சிரிப்பில் தொலையும்
பறிகொடுத்தவனின் பரிதாப ஓலம்

ஓங்கிடும் மகளிர் உரிமை
வீட்டினில் தொலைந்திடும் இனிமை
கசக்கி எறியப்படும் காகிதமாய்
கைவிடப்படும் கைம்பெண்கள்

கருமேகம் சூழ்ந்த வானம்
கதை கூறி அழுதிடும் நேரம்
ஓட்டுக்குள் சுருண்ட நத்தை
சுயநலத்துக்குள் புகுந்த மனிதன்

பசுமை செரிந்த பூமியென
பண்புகள் நிறைந்த உள்ளங்கள்
தீயில் கருகிய பூக்களாய்
தீமையில் எரிந்த மனிதம்

விடியல் காணாத உலகமாய்
நம்பிக்கையற்ற உள்ளமாய்
எங்கே செல்கிறது மனிதம்?
உயிர் பிழைக்குமா இனியும்?

ஆஷிகா.

## கலைந்து போன கனவுகள்...



வாழ்வு கழியும் ஒவ்வொரு நொடியும்
விஷப்பரீட்சையாய் தோன்றுகிறது
எனக்கு!

தாயே.........
என்னைவிட்டு நீ போய்
பல தசாப்தங்களாகியும்
விளங்கவில்லையே உனக்கு!

நான் தவிக்கையிலே
தனியாகிப்போகின்றேன்!
தலை தடவ வேண்டிய சொந்தங்கள்
தலைவலியாய் பார்ககின்றனர்
என்னை!

எனைமாத்திரம்
குற்றம் சொல்லிச்சொல்லியே
பொறுப்புக்களைத்தட்டிக் கழிக்கின்றனர்
இந்த பந்தங்கள்!

விரல் தீண்டா வீணை எனை
வீனாய்ப் பழி சுமத்துகிறார்கள்!
விளையாட்டாய் எண்ணிக்கொண்டு
என் மனதை அழுத்துகிறார்கள்!

தாய்மடியில் தூங்கிய நாட்கள்
எனக்கு நினைவில் இல்லை!
ஆனால் எனைத்தேற்ற என்னருகில்
தாயே நீ இல்லை!

சிரித்துப்பேச இயலவில்லை
கண்ணிரண்டில் தூக்கமில்லை!
சிறு வயது காலத்தில்
இது போன்ற ஏக்கமில்லை!

உண்மைகள் உறங்கிப்போனதால்
என் வாய்க்கும் இப்போதுகளில்
பூட்டுப் போடப்பட்டாயிற்று!

என் சந்தோசங்களை திருடிக்கொண்டு
தென்றலும் பொய்யாய்
வருடிச் செல்கிறது என்னை!
தாயே............
நீ எங்கிருக்கின்றாய் தாயே.......
நீ எங்கிருக்கின்றாய்!

ஹப்ஸா ஜமால்தீன்
பொத்துவில்

## இனிக்கும் வாழ்வு



வானம் விரிந்து
பரந்து கிடக்க
சில உள்ளங்கள் ஏனோ
நம் கற்பனைக்கெட்டாமல்
குறுகிக் கிடக்கின்றன!

வானம் அழகாய்க்
நீல நிறத்தில்
கண்களுக்கு காட்சியளிக்க
அதனை ரசிக்க ஏனோ
நாம் மறந்து போகிறோம்!


வானத்தில் மேகங்கள்
பஞ்சாய்ப் பறக்க
எம் மனதுகளில் ஏனோ
நாம் பாரத்தை
சுமந்து கொள்கிறோம்!

எதுவுமே நிரந்தரமில்லையென
முகிற் கூட்டங்கள்
உணர்த்திச் செல்ல
நாம் ஏனோ சோகத்தை
சொந்தம் கொள்கிறோம்!

துக்கத்தை துயரத்தை
தூரத் தள்ளி
துரும்பாய்க் கருதி
துடுப்பாய் எண்ணி
துணிவோடு வாழ்ந்தால்
இனிக்கும் வாழ்வு !

கவியரசி
எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா
பஸ்யால

## பாலமுனை ஊருக்கு பாவேந்தல் பாரூக்கு



பாலமுனை ஊருக்கு
பாவேந்தல் பாருக்கு
நாலுதிசையறிந்த
நாடறிந்த எழுத்தாளர்
பிள்ளை குணம்

வெள்ளை மனம்
அள்ளக்குறையா
சொல்லின் வளம்
அத்தனையும் கொண்ட
கறுப்பு வைரமவர்

நல்லபல கவிதைகள்
நயத்தகு காப்பியங்கள்
சொக்கவைக்கும்
சொல்கொண்டு
இவர் படைக்கும் ஆக்கங்கள்
அத்தனையும் சுத்தமான
சுவைமிகு கற்கண்டு

பிறந்தமண் கிராமத்தை
வரமெனவே நினைத்து
பேரோடு ஊரையும்
பெருமையுடன் பதிந்துவரும்
பாலமுனை கிராமத்தின்
பாக்கியமான பொக்கிஷம்.

காற்றடிக்கும் நாற்றிசையும்
இவர் கன்னல்மொழி பேசும்
காத்திரமாய் யாப்பினில்
மின்னல் ஒளி வீசும்
அளந்தெடுத்த சொல்கொண்டு
அழகாக கவி சொல்வார்
அதனாலயே வாசகனின்
இதயத்தையவர் வெல்வார்

பெருக்கெடுத்து ஓடும்
ஓயாத பேராராய்
உருக்கொடுத்து பலருக்கு
கவி கருத்தெடுக்கும்
கலைதனை கற்றுத்தந்தார்

பொன்விழாக்காணும்
இந்தக் கவிப்பாட்டனுக்கு
எண்ணிலா ரசிகர் கூட்டம்
எண்திசையும் உண்டு

பூப்பந்தல் கட்டி கவி
பாவேந்தல் பாரூக்குக்கு
ஊர்கூடி விழா எடுப்பது
உண்மையிலேயே பெருமைதான்

கைதேர்ந்த இலக்கிய புத்தகமாய்
கவிபாடும் இந்த மூத்த வித்தகனை
ஊர்க்கூடி வாழ்த்தும் இந்நேரத்தில்
இந்த ஊர்க்குருவியின்
இதயத்து வாழ்த்துக்களை
இயம்பி களிக்கின்றேன்

பொன்விழாக் காணும் பொக்கிஷமே
உன் புகழ் வையம் இருக்கும்வரை
வளம் வரும் காற்றில் கலந்து....

நாச்சியாதீவு பர்வீன்

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## இஸாரா எஞ்ஞினியர்ஸ் & லொறி பொடி (பிரைவேட்) லிமிட்டட்

### கம்பனியின் பதிவு இல - PV 21075

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவுகளுக்கு அமைவாக கம்பனி கலைப்பு அறிவித்தலும் கலைப்பாளர் நியமனம் பற்றிய அறவித்தலும்

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : இஸாரா எஞ்ஞினியர்ஸ் & லொறி பொடி (பிரைவேட்) லிமிட்டட் |
| பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி | : இல. 69/1, கோகந்தர தெற்கு, கோகந்தர |
| நீதிமன்றம் | : வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்) |
| வழக்கு இல. | : HC (Civil) /58/2019/CO |
| நீதிமன்ற கட்டளைத் திகதி | : 13.07.2020 |
| கோரிக்கை தாக்கல் செய்த திகதி | : 26.07.2019 |
| கம்பனி கலைப்பாளரின் பெயர் | : Gerard Jeevananthan David |
| முகவரி | : Level 03, No. 11, Castle Lane, Colombo-04 |
| நியமன திகதி | : 13.07.2020 |

## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப. 9.30 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 2020/10/1 | 2020/10/31 | 2022/01/28 |

**கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள்:** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுத்கம, அம்பாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஓரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388

## வர்த்தக அமைச்சு

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை EDB

# பணிப்பாளர் நாயகம் பதவிக்கு ஆட்சேர்த்தல்

வர்த்தக அமைச்சின் கீழ் செயற்படும் 1979இன் 40ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் நாயகம் பதவிக்காக (HM 2-2) பின்வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

**(அ) வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

(i) சந்தைப்படுத்தல் / சர்வதேச தொடர்புகள் / பொருளியல் / வர்த்தகம் / விஞ்ஞானம் / விவசாயம் / வியாபார நிர்வாகம் போன்ற பாடங்கள் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்பப் பட்டம்

**அத்துடன்**

இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்பு பட்டத் தகைமை

**மற்றும்**

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் குறைந்தபட்சம் 20 வருட காலம் முகாமைத்துவ மட்டத்தில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் இதில் 05 வருட காலம் கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை/ நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டப் பதவியாகவிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(ii) சந்தைப்படுத்தல் / சர்வதேச தொடர்புகள் / பொருளியல் / வர்த்தகம் / விஞ்ஞானம் / விவசாயம் / வியாபார நிர்வாகம் போன்ற பாடங்கள் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்பப் பட்டம்

**அத்துடன்**

மேற்குறிப்பிடப்பட்ட ஏதாவது துறைக்கு இயைபான கலாநிதி பட்டத் தகைமை (Ph.D)

**மற்றும்**

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை/ நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டப் பதவியில் குறைந்தபட்சம் 05 வருட காலம் சேவை அனுபவம் இருத்தல் வேண்டும்.

**(ஆ) உள்வாரி விண்ணப்பதாரிகள்**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் (HM 2-1) குறைந்தபட்சம் 02 வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**மற்றும்**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் அதிகாரம், கடமை மற்றும் வேலைகளை வினைத்திறனுடன் செயற்படுத்துதல் மற்றும் மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக பிரயோகிப்பதற்கு மற்றும் வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்தல் தொடர்பான அனுபவம் சகிதமாகவிருத்தல் வேண்டும்.

**(இ) அரசாங்க சேவையிலுள்ள அதிகாரிகள்**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் அதிகாரம், கடமைகள் மற்றும் வேலைகளை வினைத்திறனுடன் செயற்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுவதற்கு இலங்கை நிர்வாகச் சேவையின் முதலாம் வகுப்பு அல்லது அதற்கு மேற்பட்ட தர அதிகாரிகள் இரண்டாம் நிலை அடிப்படையில் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கலாம் என்பதால் விண்ணப்பிக்கலாம்.

**சம்பள அளவு: (HM 2-2):** ரூபா 93,020/- 12x2700 = ரூபா 125,420/- (மாதாந்தம்) மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதரிகள் மற்றும் அரச திணைக்களம், கூட்டுத்தாபனம் மற்றும் நியாயாதிக்க நிறுவனங்களின் அபேட்சகர்களுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**ஏனைய தகைமைகள்:**

- சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு இயலுமான உடல் மற்றும் உள தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**பதவிக்கு உரித்தாகும் ஏனைய அனுகூலங்கள்:**

- 2016.10.27ஆம் திகதிய PED 1/2015(i) சுற்றுநிருபத்தின் பிரகாரம் வாகனமொன்று வழங்கப்படும்.
- ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் மருத்துவ உதவித் திட்டம்.
- பயன்படுத்தாத மருத்துவ விடுமுறைக்கான கொடுப்பனவு மற்றும் வருடாந்த போனஸ் கொடுப்பனவு
- அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட நிவாரண வட்டியின் கீழ் வீடமைப்புக் கடன் மற்றும் அனர்த்த கடன்
- ஊழியர் சேமலாப நிதி – ஊழியர்களிடமிருந்து 10%, நிறுவனத்தினால் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் - நிறுவனத்தினால் 3%

**விண்ணப்பிக்கும் முறை**

மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகள் உள்ளதாயின், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 05ஆம் தளத்தில் அமைந்துள்ள மனிதவள முகாமைத்துவ பிரிவில் அல்லது www.srilankabusiness.com எனும் இணையதளத்தில் ("Announcements" எனும் வகுதியின் கீழ்) பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவத்தை 2022-01-28ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் இயைபுடைய சகல சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**செயலாளர்,**
**வர்த்தக அமைச்சு,**
**எல். எச். பியசேன கட்டிடம்,**
**492, ஆர். ஏ. டி மெல் மாவத்தை,**
**கொழும்பு - 03.**

விண்ணப்பப் படிவத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச துறையில் சேவையாற்றுபவர்கள் மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை தமது நிறுவனத்தின் தலைமையின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். அந்த விண்ணப்பப் படிவத்தின் மேலதிக பிரதியொன்றை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னர் வர்த்தக அமைச்சின் செயலாளருக்கு அனுப்புமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். தெரிவு செய்யும் முறை நேர்முகத் தேர்வின் மூலமாகும்.

**செயலாளர்,**
**வர்த்தக அமைச்சு,**
**492, ஆர். ஏ. டி மெல் மாவத்தை,**
**கொழும்பு- 03.**
**தொலைபேசி: 011-2110570** **திகதி: 2022-01-13**

## MULTI FINANCE PLC

### மீட்கப்படாத தங்க நகைகளுக்கான ஏலவிற்பனை

கீழே குறிக்கப்பட்டுள்ள திகதியில் எமது கிளைகளில் மீட்கப்படாத அடகு நகைகள் விற்பனைக்கான அறிவித்தல் குறித்து அனைத்து தங்க நகைகளும் கீழே குறிக்கப்பட்ட திகதியில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 1.00 மணிவரை ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும் என்பதை அறியத் தருகிறோம்.

**2021-05-31 வரை அடகு வைத்து மீட்கப்படாத நகைகள்**

கிளைகள்: அநுராதபுரம், கம்பஹா, கண்டி, குருநாகல், மரதானை, இரத்தினபுரி, மாத்தறை
ஏலத்திலிடும் திகதி : 2022-01-28

முன்னறிவித்தலின்றி இந்த ஏலத்தினை நிறுத்துவதோ, ஒத்திவைப்பதோ, மீள்அறிவித்தல் அல்லது இடத்தினை மாற்றுவதோ மல்டி பினான்ஸ் பிஎல்சீ நிறுவனத்திற்கு உரிமை உள்ளது.

MULTI FINANCE

முகாமையாளர் (அடகு சேவை)
மல்டி பினான்ஸ் பிஎல்சீ, (அடகு சேவை பிரிவு)
த பெயார்வேஸ்
இல. 100, புத்கமுவ வீதி, ராஜகிரிய,
தொலைபேசி: 011 4645 555

skills

Repeat Your Ad For Better Offers

## பெறுகை அறிவித்தல்

### களுத்துறை நகர சபை

### தனியார் பாதுகாப்புச் சேவையை பெற்றுக் கொள்வதற்காக விலைமனுக் கோரல்

களுத்துறை நகர சபையின் கட்டிடங்கள் மற்றும் சொத்துக்களை பாதுகாப்பதற்காக கீழ்க்காணும் பாதுகாப்பு அதிகாரிகளின் சேவையை பெற்றுக் கொள்வதற்காக தகைமையுள்ள நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- கனிஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் ஆறு பேருக்கு (ஒரு நாளைக்கு)
- பிரதான பாதுகாப்பு அதிகாரிகள் ஒருவருக்கு (ஒரு நளைக்கு)

விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் நிறுவனங்கள் கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

- 2021 இல. 16 தேசிய குறைந்தபட்ச சம்பளம் (திருத்தப்பட்ட) சட்டத்தின் பிரகாரம் அன்றைய சாதாரண சிரம ஆகுசெலவின் பிரகாரம் 2021.08.16 முதல் அன்றாடம் ரூ. 1161.50, 12 மணி நேர சேவை முறைமாற்றுக்காக செலுத்தப்படுவதாக உறுதி செய்தல் வேண்டும்.
- பாதுகப்பு சேவைகளை வழங்குவதற்காக அரச பாதுகாப்பு அமைச்சில் இருந்து வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் உரித்துரிமை மற்றும் உள்நாட்டு இரைவரித் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதழ்
- 06 மாதத்திற்கு மேற்பட்ட காலம் பதுகாப்புச் சேவையை தொடர்ந்து நடாத்திச் செல்லல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக இருத்தல்

குறித்த விண்ணப்பங்கள் மற்றும் பெறுகை நிபந்தனைகள் ரூ. 500/- தொகையை காசாக அல்லது காசோலை மூலம் தலைவர், களுத்துறை நகர சபைக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பெறுகைப் பத்திரங்கள் விநியோகித்தல் 2020.01.18 முதல் 2022.01.06 வரை வாரநாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அலுவலக நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். பெறுகைப் பத்திரங்கள் ஒப்படைத்தல் களுத்துறை நகர சபை களுத்துறை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிட்டு 2022.02.07 பி.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு ஒப்படைக்கலாம். பெறுகை கடிதங்கள் ஏற்கப்பட்டு முடிவடைந்தவுடன் பெறுகை பத்திரங்கள் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொ. பே. இல. 034-2222285, 034-2222275, 034-2222273ஐ அழைக்கவும்.

**தலைவர்,**
**நகர சபை, களுத்துறை.**

BE BETTER INFORMED!

Dinamina Daily News Thinakaran

News you can trust now free on your mobile phone.

Visit - apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!



AVAILABLE AT

LAKE HOUSE

For classified advertisements and for replies received in response to advertisements published under Lake House box numbers

Manager front office
+94 112429341
Hotline 1949

## கேள்வி அறிவித்தல்

கம்பனிகள் தோட்ட மறுசீரமைப்பு, தேயிலைத் தோட்டம் சார்ந்த பயிர்ச் செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகள் நவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

### எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி

கேள்வி இல. : EPL/PL/TB/T02/2022_Dolomite

**எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கு சொந்தமான நாலந்த தோட்டத்தில் உள்ள டொலமைட் (Dolomite) பாறையை குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.**

கேள்விப்பத்திரங்கள் மற்றும் நிபந்தனைகள் 2022.01.15 முதல் 2022.01.27 பி.ப. 12.30 வரை குறித்த நாலந்த தோட்ட அலுவலகத்தின் அல்லது இல. 320, ஜனவந்து பியஸ, டீ.பீ. ஜாயாமாவத்த, கொழும்பு 10 இல் அமைந்துள்ள எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் உப அலுவலகத்தில் மற்றும் 2022.01.18 முதல் 2022.01.28 பி.ப. 12.30 வரை ரத்வத்த, உக்குவெலவில் அமைந்துள்ள எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் தலைமையகத்தில் ரூ. 2,000/- பெறுமதியான மீளளிக்கப்படாத தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2022.01.28 பி.ப. 1.00 வரை எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் ரத்வத்த உக்குவெலவில் அமைந்துள்ள தலைமையகத்தின் கேள்விச்சபையின் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் கேள்விதாரர்கள் முன்னிலையில் 2022.01.28 பி.ப. 1.00 இற்கு திறக்கப்படும்.

கேள்விச்சபைத் தலைவரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைச்சபை,**
**எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி.**
**தலைமையகம்.**
**ரத்வத்த,**
**உக்குவெல.**

**தொ.பே. இல. : 066-2242522 - தலைமையகம்**
**066-3682755 - நாலந்த தோட்டம்**
**011-2698059 - செயற்பாட்டு அலுவலகம்**

## கேள்வி அறிவித்தல்

கம்பனிகள் தோட்ட மீளமைப்பு, தேயிலைத் தோட்டம் சார்ந்த பயிர் வளர்ப்பு, தேயிலைத் தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை ஏற்றுமதி மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சு

### எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி

### கராம்பு விளைச்சலை பறித்து அகற்றிக்கொள்வதற்காக கேள்வி கோரல்

கேள்வி இல: EPL/PL/TB/T-01/2022_Cloves

எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் நிர்வகிக்கப்படும் தோட்டங்களில் கராம்பு அறுவடையை பறித்து அகற்றிக் கொள்வதற்காக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தோட்டம் | மரங்களின் அளவு | வேறு விடயங்கள் | லொட் இலக்கம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| பண்டாரபொல | 228 | கராம்பு விளைச்சல் | 01 | 10,000/- |
| எல்கடுவ | 2790 | கராம்பு விளைச்சல் | 02 | 100,000/- |
| ஹுனுகல | 1913 | கராம்பு விளைச்சல் | 03 | 100,000/- |

கேள்விப் பத்திரங்கள் மற்றும் நிபந்தனைகள் 2022.01.15 முதல் - 2022.01.27 பி.ப. 12.30 வரை குறித்த தோட்ட அலுவலகங்களில் அல்லது இல. 320, ஜனவத்து பியச, டி.பீ. ஜாயா மாவத்த, கொழும்பு - 10 இல் அமைந்துள்ள எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் உப அலுவலகம் மற்றும் 2022.01.18 முதல் 2022.01.28 பி.ப. 12.30 வரை ரத்வத்த, உக்குவெலவில் அமைந்துள்ள எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் தலைமையகத்திலிருந்து ரூ. 2000/- பெறுமதியான மீளளிக்கப்படாத தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்த, பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2022.01.28 பி.ப. 1.00 வரை எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் ரத்வத்த உக்குவெலவில் அமைந்துள்ள தலைமையகத்தின் கேள்விச் சபையின் தலைவரால் ஏற்கப்படுவதுடன் கேள்விதாரர்கள் முன்னிலையில் 2022.01.28 பி.ப. 1.00 இற்கு திறக்கப்படும். கேள்விச் சபை தலைவரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி**
**தலைமையகம்,**
**ரத்வத்த,**
**உக்குவெல**

**தொலைபேசி இலக்கம்:**
**066-2242522 - தலைமையகம்**
**066-3682455 - பண்டாரபொல தோட்டம்**
**066-3133355 - எல்கடுவ தோட்டம்**
**066-3682458 - ஹுனுகல தோட்டம்**
**011-2698059 - உப அலுவலகம்**

# சிம்பாப்வே -இலங்கை அணிகள் மோதும் முதல் ஆட்டம் நாளை பல்லேகலவில்

சுற்றுலா சிம்பாப்வே அணிக்கு எதிராக மூன்று போட்டிகள் கொண்ட தொடர் நாளை கண்டி பல்லேகல விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது. இலங்கை அணியில் அண்மையில் முடிவுற்ற எல். பி. எல். தொடரில் சிறப்பாகச் செயற்பட்ட ஜெனித் லியனகே, வேகப்பந்து வீச்சாளர் நுவன் துஷார, கலன துஷார, காமில் மிஷ்ரா, சாமிக குணசேகரவும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இலங்கை அணியின் ஆரம்ப அதிரடி வீரர் குசல் ஜனித் பெரேராவும், சுழற்பந்து வீச்சாளர் வனிது ஹஸரங்கவும் காயம் காரணமாக இத்தொடரிலிருந்து விலகியுள்ளனர். 18 வீரர்கள் உள்ளடக்கிய சிம்பப்வே அணிக்கெதிரான இலங்கை குழாமில் துடுப்பாட்ட வீரர்களான அஞ்சலோ மெத்தியூஸ் சுழற்பந்து வீச்சாளர்களான அகில தனஞ்சய, லக்ஷான் சந்தகன் உள்வாங்கப்படவில்லை. கடைசியாக இலங்கை அணிக்கு விளையாடிய கமிது மெண்டிஸ், பினுர பெர்னாண்டோ, நுவன் பிரதீப், லஹிரு மதுஷங்க, புலின தரங்க ஆகியோரும் உள்வாங்கப்படவில்லை. கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்த தசுன் சானகவும், வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீரவும் வைத்திய ஆலோசனையின் பின் அணியில் இடம்பெறவுள்ளனர். நீண்டகால இடைவெளிக்குப் பின் சுழற்பந்துவீச்சாளர் ஜெப்ரி வெண்டர்ஸே இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். மேற்படி அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் அவிஷ்க பெர்னாண்டோ மற்றும் அறிமுக வீரர் ஜனித் லியனகே ஆகியோர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதால் அவருக்குப் பதிலாக கடந்த வருடம் போட்டித் தடைக்குட்பட்டு அண்மையில் விடுவிக்கப்பட்ட குசல் மெண்டிஸ், நிரோஷன் திக்வெல்ல, தனுஷ்க குணதிலக்கவுக்கு விளையாடும் 11 அணியில் இடம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த திங்களன்று இலங்கை வந்த சிம்பாப்வே அணியின் தலைவராக கிரேக் எர்வின் செயற்படுகிறார். இவர்கள் கடந்த 14ம் திகதி கண்டியில் தமது பயிற்சிகளை ஆரம்பித்தனர். உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் சுற்றுக்காக நடைபெறும் இத்தொடரில் பங்குகொள்ளும் சிம்பாப்வே அணி 4 வருடங்களுககுப் பின் இலங்கை மண்ணில் விளையாடவுள்ளது. அவ்வணி கடைசியாக 2017ம் ஆண்டு இலங்கைக்கு சுற்றுப் பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட அத்தொடரை 32 என்ற வகையில் கைப்பற்றி வரலாறு படைத்தது.

சுமார் 40 வருட கால வரலாற்றைக்கொண்ட இலங்கை - சிம்பாப்வே ஒருநாள் போட்டி வரலாற்றில் இதுவரை 57 போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் 44 போட்டிகளில் இலங்கை அணியும், 11 போட்டிகளில் சிம்பாப்வே அணியும் வெற்றிபெற்றுள்ளன. 2 போட்டிகள் கைவிடப்பட்டுள்ளன. ஒரு அணி பெற்ற கூடிய ஓட்டமாக 2011ம் ஆண்டு பல்லேகல மைதானத்தில் இலங்கை அணி பெற்ற 372 ஓட்டங்களே பதிவாகியுள்ளது. குறைந்த ஓட்டங்களாக 2004ம் ஆண்டு கொழும்பு எஸ். எஸ். சி. மைதானத்தில் சிம்பாப்வே அணி பெற்ற 35 ஓட்டங்களே பதிவாகியுளளது. இதுவரை நடைபெற்ற போட்டிகளில் ஒரு வீரர் பெற்ற கூடிய மொத்த ஓட்டங்களாக சிம்பாப்வே அணி வீரர் அன்று பிளவர் 28 போட்டிகளில் பெற்ற 919 ஓட்டங்ளே பதிவாகியுள்ளது. கூடிய மொத்த விக்கெட்கள் சாய்த்தோரில் இலங்கை அணியின் சுழற்பந்துவிச்சாளர் முத்தையா முரளிதரன் 31 போட்டிகளில் 59 விக்கெட்டுகளை வீழ்த்தி முதலிடத்திலுள்ளார்.

தனிநபர் கூடிய ஓட்டங்களாக 2011ம் ஆண்டு பல்லேகல மைதானத்தில் திலகரத்ன டில்ஷான் பெற்ற 144 ஓட்டங்களே பதிவாகியுள்ளது. ஒரு போட்டியில் சிறந்த பந்துவீச்சாக 2001ம் ஆண்டு சிம்பாப்வே ஹராரே மைதானத்தில் சமிந்த வாஸ் 19 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்கள் கைப்பற்றியதே பதிவாகியுள்ளது. ஒரு தொடரில் அதிக ஓட்டங்களாக தனுஷ்க குணதிலக்க 2017ம் ஆண்டு 5 போட்டிகளில் 323 ஓட்டங்கள் பதிவாகியுள்ளது.

## இலங்கை விமானப்படையின் இவ் ஆண்டின் விளையாட்டு அட்டவணை வெளியீடு



தேசிய விளையாட்டு அரங்கில் முக்கிய பங்களிப்பை வழங்கும் இலங்கை விமானப்படை இந்த ஆண்டு உள்நாட்டு மற்றும் சர்வதேச போட்டிகளின் அட்டவணையை வெளியிட்டுள்ளது. கொழும்பில் உள்ள விமானப்படைத் தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன, கடும் சவால்களுக்கு முகங்கொடுத்து கடந்த வருடம் பல விளையாட்டு நிகழ்வுகளை வெற்றிகரமாக ஏற்பாடு செய்த விமானப் படை விளையாட்டுப்பிரிவு , இந்த ஆண்டும் அதே போட்டிகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், சர்வதேச பாதுகாப்பு விளையாட்டு கவுன்சிலின் (CISM) உலக பாதுகாப்பு சேவைகள் விளையாட்டுகள் மற்றும் பல நிகழ்வுகளின் கீழ் விமானப்படை விளையாட்டு அணிகள் போட்டியில் பங்கேற்க திட்டமிட்டுள்ளதாக விமானப்படை தளபதி தெரிவித்தார்.

விமானப்படையின் வருடாந்த சுற்றுப் போட்டியின் முதலாவது அத்தியாயமாக கொல்ப் போட்டி இம்மாதம் 22ஆம் திகதி திருகோணமலை சீனக்குடா விமானப்படைத் தளத்திலுள்ள ஈகிள்ஸ் கோல்ஃப் லிங்க் மைதானத்தில் நடைபெறவுள்ளது.இது ஒன்பதாவது முறையாக விமானப்படையால் ஏற்பாடு செய்யப்பட்ட விமானப்படையின் தளபதி கிண்ணத்தின் ஒன்பதாவது பதிப்பாகும்.

கொவிட் சுகாதார வழிகாட்டுதலின் கீழ் டயலொக் எண்டர்பிரைசஸின் முழு அனுசரணையின் கீழ் விமானப்படை தளபதியின் கொல்ஃப் போட்டிக்காக ஏற்கனவே 78 வீரர்களும் 12 வீராங்கனைகளும் பதிவு செய்துள்ளனர், இதில் ஈகிள்ஸ் சேலஞ்ச் கிண்ணத்தை இராணுவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 35 விளையாட்டு வீரர்கள் உள்ளனர்.

இந்த ஆண்டு விமானப்படையின் 71வது ஆண்டு விழாவை ஒட்டி, மார்ச் 4, 5 மற்றும் 6 ஆகிய திகதிகளில் விமானப்படை சைக்கிள் சுற்றுப்பயணம் நடைபெறவுள்ளது. 23ஆவது ஆண்களுக்கான சுற்றுப் போட்டி, முதல் நாள் கொழும்பில் இருந்து புத்தளம் வரை 400 கிலோ மீற்றர் தூரத்தையும், இரண்டாம் நாள் புத்தளம் ஊடாக தம்புள்ளை, அனுராதபுரம் வரையிலும், கடைசி நாள் தம்புள்ளை, நாரம்மல, கிரிஉல்ல வரையிலும், கட்டுநாயக்க 20ஆம் மைல் சந்தியில் முடிவடையும்.

பெண்களுக்கான 11வது சைக்கிள் ஓட்டுதல் போட்டியானது புத்தளத்திலிருந்து கட்டுநாயக்க 20வது மைல் சந்தி வரையிலான 105 கிலோமீற்றர் தூரத்தை கடக்கவுள்ளது.

கடந்த வருடத்தின் வெற்றி மற்றும் பதிலின் அடிப்படையில் இந்த வருடம் மகளிர் போட்டிகள் உட்பட அனைத்து கழக விமானப் படை தளபதி ரக்பி போட்டி மற்றும் வாரியர்ஸ் கிண்ண ரக்பி போட்டியை நடத்த விமானப்படை திட்டமிட்டுள்ளது.

இந்த ஆண்டு பாதுகாப்பு சேவைகள் விளையாட்டுகள் விமானப்படையால் நடத்தப்படுகிறது மற்றும் 38 விளையாட்டு நிகழ்வுகளை உள்ளடக்கியது.

விமானப்படை பகிரங்க ஸ்குவாஷ் போட்டி இந்த ஆண்டு நடத்தப்படும் ஒரு தேசிய போட்டியாகும்.

மேலும், விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கு இணங்க, வருடாந்த தேசிய கபடி சம்பியன்ஷிப் போட்டியை இந்த வருடம் முதல் விமானப்படை ஆண்டு நிறைவை ஒட்டி நடத்த விமானப்படை திட்டமிட்டுள்ளதுடன், நான்கு வெளிநாட்டு கபடி அணிகளை வரவழைக்க விளையாட்டுத்துறை அமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார் அத்துடன் நான்கு உள்ளூர் அணிகளுடன் போட்டி இடம்பெறும் எனவும் விமானப்படைத் தளபதி கூறினார்.

கொல்ஃப் போட்டிக்கு அனுசரணை வழங்கும் Dialog Enterprises குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி நவீன் பீரிஸ், விமானப்படையின் தலைமை அதிகாரி, எயார் வைஸ் மார்ஷல், விமானப்படை கொல்ஃப் மற்றும் சைக்கிள் ஓட்டுதல் குழுவின் தலைவர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.




## ஜப்னா கரப்பந்தாட்ட லீக் தொடரில் "அரியாலை கில்லாடிகள் 100" அணிக்கு கிண்ணம்

**யாழ் விளையாட்டு நிருபர்**

யாழ். மாவட்டத்தில் கரப்பந்தாட்டத்தை முன்னேற்றும் முகமாக, முதன் முறையாக யாழ், மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஜப்னா கரப்பந்தாட்ட லீக் தொடரில் அரியாலை கில்லாடிகள் 100 அணி கிண்ணம் வென்றது.

(7.01.2022)திகதி வெள்ளிக்கிழமை புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில், மின்னொளியில் இரவு 7 மணி இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் கிங்ஸ் பயிட்டஸ் அணியை எதிர்த்து அரியாலை கில்லாடிகள் 100 அணி மோதிக் கொண்டன.

மைதானத்தில் ஆயிரக்கணக்கான இரசியர்கள் சூழ்ந்திருக்க இறுதியாட்டம் ஆரம்பமானது.இறுதியாட்டம் 5 சுற்றுக்களைக் கொண்டதாக அமைந்து.

இதில் ஆவர ங்கால் கிங்ஸ் பயிட்டஸ் அணி முதலாவது சுற்று ஆட்டத்தினை 25:23 என்ற செட் கணக்கில் வெற்றி கொண்டது.

பதிலுக்கு அரியாலை கில்லாடிகள் 100 அணி இரண்டாம் சுற்று ஆட்டத்தினை 25:21 என்ற செற் கணக்கில் வெற்றி கொண்டது.

அரியாலை கில்லாடிகள்100 அணி மூன்றாம் சுற்று ஆட்டத்தினை 2519 என்ற செற் கணக்கில் வெற்றி கொண்டது.

ஆவரங்கால் கிங்ஸ் பயிட்டஸ் அணி நான்காவது சுற்று ஆட்டத்தினை 25:10 என்ற செற் கணக்கில் வெற்றி கொண்டது.

நிறைவடைந்த முதல் நான்கு சுற்று ஆட்டத்தில் இரண்டு அணிகளும் தலா இரண்டு வெற்றிகளை பதிவு செய்ததினால் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக ஐந்தாவது சுற்று ஆட்டம் இடம் பெற்றது.

இதில் ஐந்தவது சுற்று ஆட்டத்தில் கில்லாடிகள் 100 அணி 16:14 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது .

ஆட்ட முடிவில் கில்லாடிகள் 100 அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் ஆனது.

Fair Paly அணிக்கான விருதினை நீர்வை பசங்க அணி பெற்றுக்கொண்டது.

சிறந்த வீரருக்கான விருதை ஆவரங்கால் கிங் ஃபைட்டர் அணி வீரர் சச்சித்தானந்தம் கபிலக்சன் பெற்றுக்கொண்டார்.

வளர்ந்து வீரருக்கான விருதினையும், ஆட்டநாயகன் விருதை அரியாலை கில்லாடிகள் 100 அணி வீரர் சிவனேஸ்வரன் சஞ்சஜன் பெற்றுக்கொண்டார்.

சிறந்த தாக்கு வீரருக்கான விருதை Aurangzeb King Fighters அணி வீரர் சச்சிதானந்தம் கபிலக்சன் பெற்றுக் கொண்டார்.

சிறந்ததொகுப்பாளர் விருதைஅரியாலை கில்லாடிகள் 100அணிவீரர் பத்மதாஸ் நிதர்சன் பெற்றுக்கொண்டார்.

சிறந்த லிபரோ வீரருக்கான விருதை Rising Islands அணி வீரர் வேதீஸ்வரன் கஜானன்பெற்றுக் கொண்டார்.

சிறந்த பெறுநருக்கான வீருதினையும்,சிறந்ததடுப்பாளருக்கான வீருதினையும்,அரியாலை கில்லாடிகள் 100அணிவீரர் சச்சிதானந்தம் ஜனகன் பெற்றுக்கொண்டார்.

## மருதமுனை நியாஸ், புத்தளம் நஜீம் இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் சிரேஷ்ட, பிரதி தலைவர்களாக தெரிவு

**பெரியநீலாவணை விசேட, புத்தளம் தினகரன் நிருபர்கள்**

இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பிரதித்தலைவராக மருதமுனையை சேர்ந்த கமு/புலவர்மணி சரிபுத்தீன் மகா வித்தியாலய அதிபர் எம்.எம்.முகம்மட் நியாஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அத்துடன் புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரி அதிபர் ஐ.ஏ.நஜீம் சிரேஷ்ட உதவித் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இப் பதவிக்கு புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியின் அதிபரொருவர் பதவி வழியாக தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

புத்தளம் சாஹிரா கல்லூரியின் உதைபந்தாட்டம் உட்பட பாடசாலைகளின் உதைபந்தாட்டத் துறை மேலும் அபிவிருத்தி அடைய அதிக பட்ச பங்களிப்பை தாம் வழங்கவுள்ளதாக அதிபர் ஐ.ஏ.நஜீம் புதிய பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து கல்வியமைச்சில் வைத்து கருத்து தெரிவித்தார்.



அத்துடன் கல்வி அமைச்சில்(12) நடைபெற்ற பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் இந்த ஆண்டிற்கான (2022) நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இத் தெரிவில் இறுதியாக நடைபெற்ற வாக்கெடுப்பில் கூடுதலான வாக்குகளை பெற்று உப தலைவராக இவர் செய்யப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை பிரதேசத்தை சேர்ந்த எம்.எம்.முஹம்மட் நியாஸ் 1967 ஆம் ஆண்டு பிறந்தவராவார். தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்திலும் பின்னர் உயர் கல்வியை மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியிலும் பெற்றக் கொண்ட இவர் 1990 ஆம் ஆண்டு ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று அல்மனார் மத்திய கல்லூரியில் தனது கற்பித்தல் சேவையை ஆரம்பித்தார்.

2012 ஆம் அண்டு அதிபர் போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்த இவர் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை), ஷம்ஸ் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) ஆகியவற்றில் பிரதி அதிபராக கடமையாற்றினார்.



2014 ஆம் ஆண்டு பெரியநீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலயத்தில் பொறுப்பதிபராக கடமையை பொறுப்பேற்றார்.

இவரது காலத்தில் பாடசாலை கல்வி நடவடிக்கைகளில் பல சாதனைகளை பெற்றுக் கொண்டதுடன் பல்வேறு வளர்சிப்படிகளையும் தொட்டது எனலாம். கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு அப்பால் விளையாட்டு, கலை, இலக்கியம் என்று இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் படசாலை பல முன்னெற்றங்களை பெற்றுள்ளன.

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கு பிரதித் தலைவராக தெரிவு செய்யப்பட்டமைக்கு பாடசாலை சமூகம் மற்றும் பிரதேச நலன்விரும்பிகள் தமது பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 15ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.